# திருமறைத்தீபம்



BIBLE LAMP
திருமறைத்தீபம்

**Issue No.1 of 2007**
**ISBN 1173-7255**

இக்காலாண்டுப் பத்திரிகையில் வெளிவரும் பெயர் குறிப்பிடப்படாத ஆக்கங்கள் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்பட்டவை. ஆசிரியரின் எழுத்துமூல அனுமதியின்றி பத்திரிகையின் எப்பகுதியையும் எவ்விதத்திலும் பிரசுரிக்கக் கூடாது.

ஆசிரியர்: ஆர். பாலா

**Editor:** R. Bala
**Publisher:** Sovereign Grace Publications
**Address:** P O Box 62 159 Sylvia Park, Auckland 1006 New Zealand
**Telephone:** 64 9 272 8061
**Fax:** 64 9 272 8032
**e-mail:** blamp@ihug.co.nz
**Web site:** www.biblelamp.org

"கொள்கைகளையும் கோட்பாடுகளையும் புறக்கணித்து, சத்தியத்தை வெளிப்படையாக எடுத்துக் கூறாத ஒரு பத்திரிகையை இலக்கியத் தடங்கல் என்றுதான் கூற வேண்டும்."

சி. எச். ஸ்பர்ஜன்
1834-1892

# அன்புக்குரியவர்களே!

*தீபத்தை மனநிறைவோடு தொடர்ந்து படித்து, கற்று கர்த்தரை மகிமைப்படுத்தி வருகிற வாசகர்கள் அனைவருக்கும், பத்திரிகையின் நலத்தில் பங்கு கொள்கிற அனைவரின் சார்பாக என்னுடைய புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். புதிய ஆண்டை நாம் வரவேற்கின்றவேளை உலகம் எங்கு போய்க்கொண்டிருக்கிறது என்பதை ஒருதடவை நினைத்துப்பார்க்காமல் இருக்க முடியவில்லை. பயங்கரவாதம் இந்த உலகத்தில் வெகுசாதாரணமானதொன்றாக நிலைபெற்று நிற்கின்றது. சக உயிர்களை மதித்து நடக்கும் மனிதத் தன்மைக்கு என்ன நேர்ந்துவிட்டது என்று கேட்காமல் இருக்க முடியவில்லை. ஈராக்கிலும், இஸ்ரவேலிலும், ஆப்கானிஸ்தானிலும், ஸ்ரீ லங்காவிலும் அநியாயமாக உயிர்ப்பலி அன்றாடம் நிகழ்ந்து வருகின்றது. மனிதனை மனிதனாகப் பார்க்காமல் இனத்தின் பெயராலும், மதத்தின் பெயராலும், அரசியல் நோக்கங்களுக்காக கொன்று குவித்து வருகின்ற மனித மிருகங்கள் உலகில் அதிகரித்து விட்டார்கள். உலகில் அமைதியோடு இருக்கும் நாடுகள் இன்று வெகுசிலவே.*

*மனிதனின் இருதயம் மாறினால் தவிர மற்றவனைக் கொன்று வாழும் அவனுடைய குணத்தை மாற்ற முடியாது. உலகில் எந்த மதமோ, நல்லறிஞரின் போதனைகளோ, நற்குணங்களோ இதை மாற்றி அமைக்க முடியாது. கர்த்தர் நமக்கருளித்தந்துள்ள கிறிஸ்துவின் சுவிசேஷத்தால் மட்டுமே இதைச் செய்ய முடியும். சுவிசேஷம் அறிவிக்கின்ற கிறிஸ்துவை இரட்சகராக மனிதன் அறிந்துகொள்ளும்வரை அவனால் மிருகச் செயல்கள் செய்வதைக் கட்டுப்படுத்த முடியாது. இன்று சுவிசேஷ ஊழியத்தின் அவசியம் என்றுமில்லாதவகையில் அத்தியாவசியமானதாக இருக்கிறது. உலக சுகத்தையும், நம்மையும், நம்மைச் சார்ந்தவர்களையும் வளர்த்துக்கொள்ளும் போக்கையும், சுயநல நோக்கங்களையும் மூட்டை கட்டி வைத்துவிட்டு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைத் தீவிரமாக நாம் பிரசங்கிக்க ஆரம்பிக்க வேண்டும். கிறிஸ்துவை வல்லமையாக ஆவியின் அனுக்கிரகத்தோடு பிரசங்கிக்க வேண்டும். ஆத்துமாக்களுக்கு இன்று கிறிஸ்து தேவை. கிறிஸ்து இல்லாமல் அவர்களால் வாழ்வில் அமைதி காணமுடியாது; அடுத்தவனை மதித்து வாழ முடியாது. - ஆசிரியர்.*

# ஜோண் ஓவன்:
## கிறிஸ்துவின் மரணத்தில் மரணத்தின் மரணம்

சீர்திருத்தக் கிறிஸ்தவத்தைப் பற்றியும், அதன் பெரும் பிரசங்கிகளையும், இலக்கியங்களையும் கடந்த இரண்டு சமீபகாலமாகத்தான் தமிழினம் ஆர்வத்தோடு அறிந்து பயின்று வருகின்றது. 16ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் திருச்சபை வரலாற்றில் எழுந்த சீர்திருத்தத்திற்குப் பின்பு அதற்கு அடுத்த நூற்றாண்டில் பரிசுத்தவான்களின் (பியூரிட்டன்) திருச்சபை சீர்திருத்தத்திற்கான உழைப்பைப் பற்றி சபை வரலாற்றில் வாசிக்க முடிகிறது. 16ம் நூற்றாண்டில் மார்டின் லூதருக்கும், ஜோண் கல்வினுக்கும் பிறகு 17ம் நூற்றாண்டில் ஜோண் பனியன், ஜோண் ஓவன் போன்றோர் தோன்றி திருச்சபை சீர்திருத்தம் தொடரும்படிப் பார்த்துக் கொண்டனர். சீர்திருத்தவாதிகளும், பரிசுத்தவான்களும் (பியூரிட்டன்) திருச்சபை வரலாற்றில் அழிவற்ற இடத்தைப் பிடித்திருக்கின்றார்கள். இன்று வேதம் நம் கரத்தில் இருப்பதற்கும், கர்த்தரின் திருச்சபை இந்த உலகில் தலைதூக்கி நிற்பதற்கும், வேதபூர்வமான கிருபையின் போதனைகளையும், சீர்திருத்த போதனைகளையும் உலகறிந்திருப்பதற்கும் இவர்கள் ஆற்றியுள்ள பணி மகத்தானது.

இவர்களின் பணிகளில் மேலானது, இரத்தினக் கற்களைப்போன்ற விலைமதிப்பில்லாத அநேக கிறிஸ்தவ இலக்கியங்களை எழுத்தில் வடித்து நமக்களித்துச் சென்றிருப்பதுதான். இவையனைத்தும் ஆங்கிலத்திலேயே இருக்கின்றன. சிறந்த கல்விமானான ஜோண் ஓவன் விலைமதிப்பற்ற பல முத்துக்களை நமக்களித்துச் சென்றிருக்கிறார். அவருடைய எழுத்துக்கள் அனைத்தும் பதினேழு வால்யூம்களாக இன்றும் பதிப்பில் இருந்து வருகின்றன. அவற்றில் ஒன்றுதான், அவர் எழுதிய “கிறிஸ்துவின் மரணத்தில் மரணத்தின் மரணம்” (The Death of Death in the Death of Christ) என்ற நூலாகும். இந்நூலுக்கு ஜிம் பெக்கர் (Jim Packer) என்ற தற்கால இறையியல் அறிஞர் ஆங்கிலத்தில் ஒரு அருமையான முன்னுரையை இருபத்தி ஐந்து பக்கங்களில் வழங்கியிருக்கிறார். ஆய்வு செய்து நீண்டதொரு முன்னுரை வழங்க வேண்டிய அளவுக்கு ஜோண் ஓவனின் வேத ஆய்வுத் திறமை இந்நூலில் அமைந்திருந்தது.

ஜோண் ஓவனின் இந்நூல் “கிறிஸ்து யாருக்காக மரித்தார்?” என்ற வினாவுக்கு பதிலளிக்கிறது. இந்நூலில், கிறிஸ்து உலகில் பிறந்த, பிறந்திருக்கும், பிறக்கப் போகும் அனைவருக்குமாகவும் சிலுவையில் தன்னைப் பலியாக ஒப்புக் கொடுக்கவில்லை என்பதை வேத வசனங்களின் அடிப்படையில் நிலை நாட்டி, கிறிஸ்து தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட குறிப்பிட்ட மக்களுக்காக மட்டுமே கல்வாரி சிலுவையில் மரித்தார் என்பதை வேதம் முழுவதிலும் இருந்து படிப்படியாக விளக்கி, சாட்சிகளுக்கு மேல்

*சாட்சியாக வேத வசனங்களை வாரி வழங்கி ஒரு மிகச்சிறந்த வக்கீலைப் போல வாதாடியிருக்கிறார் ஓவன். ஓவனின் வாதத்திறமையையும், வேத அறிவையும் நாம் இதில் கவனிக்க முடிகின்றது. அதையெல்லாம்விட உலக ஞானத்தின் அடிப்படையில் தனது போதனைகளுக்கு விளக்கந்தராமலும், தனது சொந்த எண்ணங்களுக்கு இடங்கொடுக்காமலும் ஆரம்பத்தில் இருந்து இறுதிவரை வேதவசனங்களாக அள்ளி வழங்கி போதனைகளை விளக்கியிருப்பதே ஓவனின் நூலின் மதிப்பை உயர்த்துகின்றது.*

*"ஜோண் பனியனின் சரீரத்தில் எங்கு ஊசியால் குத்தினாலும் வேத இரத்தம் சிந்தும்" என்று ஸ்பர்ஜன் அவருடைய வேத ஞானத்தைக் குறித்து சொல்லியிருக்கிறார். பனியனின் காலத்தைச் சேர்ந்த ஜோண் ஓவன் பனியனுக்கு எந்தவிதத்திலும் சளைத்தவரல்ல என்பதை அவருடைய நூல் காட்டுகின்றது. வேத போதனைகளைத் தருகிறோம் என்ற பெயரில் வேதத்தில் இருந்து ஒன்றையும் நிலைநாட்டக்கூடிய அறிவோ, திறமையோ இல்லாது எதையெதையோ பேசிக்கொண்டிருக்கும் தமிழின சபைப் போதகர்கள் பெருகி மலிந்திருக்கும் இந்தக் காலகட்டத்தில் வேத போதனைகள் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு உதாரணமாக அமைந்திருக்கிறது ஜோண் ஓவனின் நூல். ஓவனைப் போலவே சீர்திருத்தவாதிகளும், பியூரிட்டன்களும் இறை போதனைகளை வழங்கியிருக்கிறார்கள். ஒவ்வொரு சத்தியத்தையும் நிலை நிறுத்த அளவற்ற வேத வசனங்களை அள்ளி வழங்கி, ஒவ்வொன்றையும் வேதத்தில் அவை அமைந்திருக்கும் சந்தர்ப்பத்திற்கேற்ப விளக்கி ஆணித்தரமான வாதங்களை நம்முன் வைத்திருக்கின்றனர்.*

*கிறிஸ்து சகல மனிதர்களையும் இரட்சிப்பதற்காக மரித்தார் என்று சொல்லும் உலகளாவிய பரிகாரப்பலிக் கோட்பாட்டையும்* (Universal Atonement), *கிறிஸ்துவின் மரணபலியின் பலன்கள் கிறிஸ்துவுக்காகத் 'தீர்மானம்' எடுப்பவர்களுக்கு மட்டுமே பலனளிக்கும் என்ற ஆர்மீனியனிசப் போதனையையும் தோலுரித்துக்காட்டி, வேத போதனைகளின் அடிப்படையில் அவற்றை நிராகரிப்பதோடு, கிறிஸ்து தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்காக மட்டுமே மரித்தார் என்ற போதனையை ஆணித்தரமாகத் தன் நூலில் விளக்கியிருக்கிறார் ஓவன். போதகர் ஜெரமி வோக்கர் ஆங்கிலத்திலிருக்கும் இந்நூலின் விசேட அம்சங்களை விளக்கி ஓவனின் போதனைகளின் சுருக்கத்தையும் நமக்களித்திருக்கிறார். அவற்றை இவ்விதழில் நான் தமிழில் மொழிபெயர்த்துத் தந்திருக்கிறேன். கிறிஸ்துவின் சிலுவைத் தியாகத்தின் பலன்களைப் பற்றிய மேலான வேத அறிவைப் பெற்றுக்கொள்ள இவ்வாக்கம் உங்களுக்கு உதவும் என்று நம்புகிறேன். மேலெழுந்த வாரியாக வாசிக்காமல் இந்த ஆக்கத்தை நீங்கள் ஒரு தடவைக்கு மேலாக சிந்தித்து வாசித்தீர்களானால் ஜோண் ஓவனின் போதனைகளைப் புரிந்துகொள்வது எளிதாக இருக்கும். கர்த்தரை விசுவாசிப்பதற்கான வல்லமை ஆத்துமாக்களின் கரத்திலேயே இருக்கிறது என்ற தவறான எண்ணத்தின் அடிப்படையில் நடந்துவரும் தமிழினத்தின் பெரும்பாலான சுவிசேஷ ஊழியங்கள் எந்தளவுக்கு வேதத்திற்கு புறம்பானது என்பதை ஜோண் ஓவன் சந்தேகத்திற்கிடமில்லாமல் தன் நூலில் விளக்கியிருக்கிறார். கர்த்தர் தாமே இவ்வாக்கத்தின் மூலம் உங்களை ஆசீர்வதிப்பாராக.*

# கிறிஸ்துவின் மரணத்தில் மரணத்தின் மரணம்

**(The Death of Death in the Death of Christ by John Owen)**

**- ஜெரமி வோக்கர் *(Jeremy Walker)***

*"வாசகர்களே! நீங்கள் தொடர்ந்து இந்நூலை வாசிக்கும் எண்ணத் தைக் கொண்டிருந்தால், சிறிது நேரத்தைக் கொடுத்து இதை வாசிக்கும்படி தயவாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். ஒரு நாடக அரங்கில் நுழைந்துவிட்டு உடனே வெளியேறிவிடுகிறவரைப் போல இந்நூலின் தலைப்பை மட்டும் வேகமாய் வாசித்துவிட்டுப் போகிறவராக இருந்தால், இதை நீங்கள் வாசிப்பதில் பயனில்லை. போய் வாருங்கள்! இந்நூலில் விளக்கப்பட்டிருக்கும் மிகமுக்கிய மான போதனைகளில் ஆர்வமுடையவர்களுக்கும், கிறிஸ்தவ சிந்தனைகளின் மூலம் ஆத்மீகத் தேவைகளைத் தீர்த்துக்கொள்ள வும், இந்நூலில் விளக்கப்பட்டிருக்கும் அரும் போதனைகளின் மூலம் பயனடையவும் விரும்புகிறவர்களுக்கு நான் ஒரு சில வார்த்தைகளை ஆரம்பத்திலேயே முன்வைக்க விரும்புகிறேன்."*

*"கிறிஸ்துவின் மரணத்தில் மரணத்தின் மரணம்" எனும் நூலில் ஜோண் ஓவன் மேல்வரும் வார்த்தைகளையே வாசகர்களுக்கு ஆரம்ப உரையாக அளித்து நூலை எழுத்தியிருக்கிறார். அசட்டையாக நூலை வாசிக்க முற்படும் வாசகனை இந்த வார்த்தைகள் சுண்டி இழுக்காது. அவ்வாறு அவனை சுண்டி இழுப்பதற்காக ஓவன் இந்த வார்த்தைகளை அவன் முன் வைக்கவில்லை. தான் வாசகனுக்கு முன் படைக்கும் விஷயத்தின் முக்கியத்துவத்தை நன்றாக உணர்ந்திருந்த ஓவன் உடனடியாகவே விஷயத்துக்கு வந்துவிடுகிறார். தன்னுடைய நூலில் கையாளப்பட்டிருக்கும் விஷயம் அதிமுக்கியமானது என்பதால் அவர் நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. அதுமட்டுமல்லாது நூலை வாசிக்கும் வாசகனும் அந்த நோக்கத்தோடேயே நூலை அணுக வேண்டும் என்றும் எதிர்பார்க்கிறார். கவனத்தோடு சிந்தனையைப் பயன்படுத்தி வாசிக்கிறவர்கள் ஓவனின் நூலின் மூலம் பெரும் பயனடைவார்கள்.*

*தோமஸ் மூர் என்ற மனிதர் 1643ம் ஆண்டு The Universality of God's Free Grace in Christ to Mankind என்ற ஒரு நூலை எழுதி வெளியிட்டார். அந்த நூலுக்கு பதிலளிக்குமுகமாகவே ஜோண் ஓவன் "கிறிஸ்துவின் மரணத்தில் மரணத்தின் மரணம்" எனும் நூலை எழுதினார். தோமஸ் மூரின் நூலினால் அப்படியொன்றும் பெரிய பயனில்லை என்று ஜிம் பெக்கர் கருத்து வெளியிட்டிருக்கிறார். இருந்தபோதும் ஓவனின் காலத்தில் அந்த நூல் மட்டுமே கிறிஸ்து யாருக்காக மரித்தார்? என்ற வினாவுக்கான முழு விளக்கத்தை எதிர்ப்பாளர்களின் கண்ணோட்டத்தில் மூலம் விளக்க முற்பட்டது. அதேவேளை இந்த விஷயத்தைப் பற்றிய முழுப் போதனை*

யையும் அளிக்க தான் ஏழு வருடங்களுக்கு மேலாகக் கடினமாக உழைக்க நேரிட்டிருந்தது என்பதையும் ஓவன் குறிப்பிட மறக்கவில்லை.

தோமஸ் மூரின் நூலின் தலைப்பு அவருடைய நூலின் உள்ளடக்கத்தை விளக்குவதாக இருந்தது. அவரது நூல், உலகத்திலுள்ள சகல மக்களையும் இரட்சிப்பதற்காக கிறிஸ்து மரித்தார் என்றும், அவர்கள் அனைவருமே இரட்சிப்பை அடைவார்கள் என்றும் விளக்கியது. இந்த நூலுக்கு எதிரான வாதத்தை முன்வைக்கும்போது இதே விளக்கத்தை அளித்த ஆர்மீனிய னிசத்தையும், அமிரெல்டியன் (Amyraldian) போதனையையும் ஓவன் கவனிக்காமல் இருக்கவில்லை. ஆர்மீனியனிசம் மனித சித்தத்தின் தீர்மானத் தின் மூலம் இரட்சிப்பு ஒருவரில் நிகழ்கிறது என்று போதித்தது. இதன் பிரகாரம் இரட்சிப்பை அடைவதும் அடையாததும் மனிதனுடைய சித்தத் தின் செயல்பாட்டிலேயே தங்கியிருந்தது. அமிரேல்டியன் போதனையோ, கிறிஸ்துவின் சிலுவைப்பலி சகல மக்களுக்குமாக நிறைவேற்றப்பட்டிருந்த போதும், கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் மட்டுமே விசுவாச மாகிய நிபந்தனையின் மூலம் இரட்சிப்பை அடைகிறார்கள் என்று விளக் கியது. குறிப்பிட்டவர்களுக்காக மட்டுமே கிறிஸ்து மரித்தார் (Particular redemption) என்ற ஓவனின் தைரியமான விளக்கம் இந்தப் போதனைகளை மட்டும் கருத்தில் கொண்டு கொடுக்கப்படவில்லை. ஆர்மீனியனிசமும், அமிரெல்டியன் போதனையும் கிறிஸ்துவின் சிலுவைப் பலியை நோக்கிய விதத்தைவிட முற்றிலும் வேறுபட்டவிதமாக, தெளிவான நோக்கத்தோடு ஓவன் அதை அணுகினார். தனக்குப் பின்னால் வந்த ஸ்பர்ஜனைப் போலவே, ஓவனும் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு ஆபத்து ஏற்பட்டிருப் பதை உணர்ந்தார். கீழ்வரும் ஸ்பர்ஜனின் வார்த்தைகளைக் கவனியுங்கள்:

> "என்னுடைய தனிப்பட்ட கருத்து என்னவென்றால், கல்வினி சத்தைப் பிரசங்கிக்காவிடில் கிறிஸ்துவைப் பற்றிய பிரசங்கத்திற்கே இடமில்லை என்பதுதான். கல்வினிசமே சுவிசேஷம்; சுவிசேஷத் திற்குக் கொடுக்கப்பட்ட இன்னொரு பெயரே கல்வினிசம். கிரியை களின்றி விசுவாசத்தினால் நீதிமானாகுதலையோ அல்லது கிருபை யை அளிப்பதில் கர்த்தர் இறையாண்மையுள்ளவர் என்பதையோ அல்லது என்றும் மாறாத, நித்தியமான, தெரிந்து கொள்ளும் கர்த்தருடைய அன்பையோ பிரசங்கிக்காவிடில் சுவிசேஷத்தை சுவிசேஷமாக நம்மால் ஒருபோதும் பிரசங்கிக்க முடியாது. தன் னால் தெரிந்துகொள்ளப்பட்ட குறிப்பிட்ட மக்களுக்காக கிறிஸ்து மரித்தார் என்பதை அடிப்படையாகக் கொண்டமைந்த சுவிசேஷத் தைப் பிரசங்கிக்காவிடில் நமது பிரசங்கம் சுவிசேஷப் பிரசங்கமாக இருக்காது. கர்த்தரால் அழைக்கப்பட்ட பின்பு பரிசுத்தவான்கள் ஆத்மீகத்தை இழந்து போகும்படிச் செய்து, கர்த்தரின் குழந்தைகள் கிறிஸ்துவை விசுவாசித்த பிறகு நித்திய தண்டனைக்கான நெருப் பில் எரியும்படிச் செய்யும் சுவிசேஷத்தை என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை. அத்தகைய சுவிசேஷத்தை நான் அறவே வெறுக்கிறேன்."

தன்னுடைய நூலில் ஜோண் ஓவன் சந்திக்கும் முக்கியமான கேள்வி, கிறிஸ்துவின் சிலுவை மரணம் அதன் நோக்கத்தை முற்றாக நிறைவேற்றி யதா? அல்லது அதில் தோல்வியை சந்தித்ததா? என்பதுதான். இதிலிருந்து ஓவன் இந்த விஷயத்தை வேத அடிப்படையிலும், இரட்சிப்பின் அடிப் படையிலும் நோக்குவதைப் பார்க்க முடிகிறது. இந்தக் கேள்விக்கான பதில் சுவிசேஷத்தின் அடிப்படையைக் குறித்ததாக இருக்கிறது. அத்தோடு கர்த் தரின் சுயதன்மையையும், நமது இரட்சிப்புக்காக திரித்துவ தேவன் எடுத்த நடவடிக்கைகளையும் குறித்ததாகவும் இருக்கிறது. நம்முடைய கர்த்தர் தம்முடைய திட்டத்தில் தோல்வியைச் சந்தித்தாரா? என்ற கேள்விக்கான ஓவனின் பதில் பின்வருமாறு இருந்தது:

> "ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்த நோக்கங்களை நிறைவேற்று வதற்காக இயேசு கிறிஸ்து தன்னுடைய பிதாவின் திட்டத்தின்படி யும், சித்தத்தின்படியும் தன்னை சிலுவையில் பலியாகச் செலுத்தி னார். அத்தோடு, தன்னுடைய மரணத்தின் மூலம் திட்ப உறுதி யாக நிறைவேற்றப்பட்ட அத்தனைப் பலன்களையும் எவரெவ ருக்காக அவர் மரித்தாரோ அத்தனை பேரும் கர்த்தருடைய திட் டத்தின்படியும், சித்தத்தின்படியும் பெற்றனுபவிக்க பரலோகத்தி லிருந்து தொடர்ந்து பரிந்துரை செய்து வருகிறார்."

வேதமளிக்கும் மேல்வரும் போதனையை ஓவன் மறுபடியும் தனது நூலில் இன்னோரிடத்தில் பின்வருமாறு விளக்குகிறார்:

> "உலகத்தோற்றத்துக்கு முன்பே தானளித்த வாக்குத்தத்தத்தின்படி, தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் மேல் தான்வைத்திருக்கும் நித்திய அன்பின் பிரகாரம் சகலதும் பூரணமாக நிறைவேறி வரும் காலத் தில் கர்த்தர் தன்னுடைய குமாரனை அனுப்பிவைத்தார். தன்னு டைய வாக்குத்தத்தம் நிறைவேறி நித்திய ஜீவனுக்காக நியமிக் கப்பட்ட அனைவரும் தன்னிடத்தில் வரும்படியாகவும், தன்னு டைய மகிமை பிரகாசிக்கும்படியும் நித்திய மீட்பைக் கிறிஸ்து தன்னுடைய சிலுவைப்பலி மூலம் அழிவற்றதும், மகிமையுள்ளது மான விலையைக் கொடுத்துப் பெறும்படிச் செய்தார்."

மேலே நாம் வாசித்த ஓவனின் வார்த்தைகளை இலகுவாக விளக்குவ தானால் கிறிஸ்துவை இந்த உலகத்திற்கு அனுப்பியதில் கர்த்தருக்கு உறுதியான ஒரு பெரு நோக்கம் இருந்தது எனலாம். அத்தோடு கர்த்தரு டைய குமாரன் உறுதியான ஒரு நோக்கத்தோடு தன்னை சிலுவையில் பலி கொடுத்தார். அதுமட்டுமல்லாமல் அவர் இப்போது உறுதியானதும், தீர்க்கமானதுமான ஒரு நோக்கத்தோடு பரிந்துரை செய்து வருகிறார். கிறிஸ்துவின் மரணபலியின் பலன்களை பரிசுத்த ஆவியானவர் உறுதியான நோக்கத்தோடு பாவிகள் அநுபவிக்கும்படிச் செய்து வருகிறார். இந்த உறுதியான தெய்வீக நோக்கம் எந்தவிதத்திலும் தோல்வியடைய முடியாது. தான் நிறைவேற்றுவதற்காக வந்த நோக்கங்கள் அனைத்தையும் இரட்சக ரான இயேசு கிறிஸ்து நிச்சயமாக நிறைவேற்றினார்.

தன்னுடைய நூலின் மூலம் ஓவன் போலிப்போதனையைத் தகர்த்தெறிவதோடு இருந்துவிடாமல் உறுதியாக ஒரு சத்தியத்தையும் நிலைநாட்டுகிறார் என்பதை நாம் உணருவது அவசியம். திரித்துவ தேவனைவிட அன்பு செலுத்துவதில் தாம் பெரியவர்கள் என்றும், வல்லமையுள்ளவர்கள் என்றும், ஞானவான்களென்றும் காட்டிக்கொள்ள விரும்பும் அகங்காரம் பிடித்தவர்களின் முட்டாள்தனத்தை சுட்டிக்காட்டுவதை மட்டும் நோக்கமாகக் கொண்டிராமல் ஓவன் இரட்சிப்பின் மூலம் கர்த்தரின் மகிமை வெளிப்படுவதை விளக்குவதையும் நோக்கமாகக் கொண்டிருக்கிறார். "கிறிஸ்துவின் மரணத்தில் மரணத்தின் மரணம்" எனும் தன்னுடைய நூலின் நான்கு பாகங்களில் வேதம் போதிக்கும் இந்த சத்தியத்தை ஆணித்தரமாக விளக்குகிறார் ஓவன்.

ஓவன் தன்னுடைய நூலின் முதலிரண்டு பாகங்களிலும், கிறிஸ்துவின் மரணம் அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட ஒவ்வொருவருக்கும் நிச்சயமாக இரட்சிப்பை வழங்குகிறது என்ற தெளிவான வேதத்தின் போதனையை முன்வைக்கிறார்.

நூலின் முதலாவது பாகம் கிறிஸ்துவின் சிலுவைப் பலியை விளக்குகிறது. இப்பகுதியில் அப்பலிக்குக் காரணமான அம்சங்களையும், அதன் நோக்கத்தையும் ஓவன் ஆதாரபூர்வமாக விளக்குகிறார். அதை நாம் கடந்து போவோமானால் அடுத்தகட்டமாக ஓவன் திரித்துவ தேவனே கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்காக இப்பலி நிறைவேறக் காரணமாக இருந்தார் என்றும், அதில் பிதா, குமாரன், ஆவியானவர் ஆகியோர் எவ்வாறு இணைந்து இயங்கி அப்பணி நிறைவேறக் காரணமாக இருந்தார்கள் என்பதையும் விளக்குகிறார். மீட்பு நிறைவேறுவதற்கு கிறிஸ்துவின் பலியும் கர்த்தருக்கும் மனிதருக்கும் இடையிலான அவருடைய மத்தியஸ்துவமுமே காரணமாக அமைந்தது. கிறிஸ்துவின் இத்தகைய மீட்புப்பணிக்கு எதிரான வாதங்களை ஓவன் தன் நூலில் விளக்கி அவற்றிற்கு வேதபூர்வமான பதில்களை இப்பகுதியில் தந்திருக்கிறார்.

ஓவனின் நூலின் இரண்டாம் பாகம், எந்த நோக்கத்திற்காக கர்த்தரின் தெரிந்துகொள்ளப்பட்ட மக்கள் விடுவிக்கப்பட்டார்கள் என்பதை விளக்குகிறது. ஓவன் இதில், கர்த்தரின் மகிமைக்காகவே நமது இரட்சிப்பு நிறைவேறியது என்பதை விளக்குகிறார். நமது இரட்சிப்பின் உடனடி நோக்கம் கர்த்தரிடத்தில் நம்மைக் கொண்டு வருவதுதான். இந்த இடத்தில் ஓவன், கிறிஸ்துவின் மீட்பு அதோடு தொடர்புடைய அத்தனைக் கிருபைகளையும் உள்ளடக்கிக் காணப்படுகிறது என்பதை வேதத்தில் இருந்து தெளிவாக விளக்குகிறார். ஓவனைப் பொறுத்தவரையில் தன்னுடைய இரட்சிப்பிற்காக மனிதன் அளிக்கும் பங்காக விசுவாசம் காணப்படவில்லை. அது தேவ ஆட்டுக்குட்டி தன்னை விலையாகக் கொடுத்து பெற்றுத்தந்திருக்கும் ஈவு என்று ஓவன் வேத ஆதாரத்தோடு விளக்குகிறார். இதற்கு மாறான கருத்துகளுக்கெல்லாம் இப்பகுதியில் ஓவன் தகுந்த பதில்களை அளித்திருக்கிறார். ஓவன் ஒரு வலிமையான வேத விளக்கத்தை இங்கே நம்முன் வைக்கிறார். அதாவது, கிறிஸ்து தன்னுடைய மீட்புப்பணியை நிறைவேற்றும் வரைக்கும் இறையாண்மையுள்ள கர்த்தர் கட்டிவைக்கப்பட்டிராமல்,

தன்னுடைய வல்லமையின் மூலம் கிறிஸ்து சிலுவையில் மரிக்கும்படிச் செய்து அவருடைய மரணத்தின் மூலம் நம்மை மீட்டிருக்கிறார் என்பதை ஆணித்தரமாக விளக்கியிருக்கிறார்.

தன்னுடைய விளக்கங்களுக்கு ஆதாரமான வேதவசனங்களைத் தொகுத்து மூன்று குழுக்களாக நம்முன் வைக்கிறார் ஓவன்.

(1) முதலாவது குழுவிலுள்ள வேத வசனங்கள் கிறிஸ்துவின் மரணத்தின் மூலம் குறிப்பிட்ட மக்களை இரட்சிப்பதே கர்த்தருடைய ஆலோசனையும் நோக்கமுமாக இருந்தது என்பதை விளக்குகின்றன.

(2) இரண்டாம் குழுவிலுள்ள வேத வசனங்கள் கிறிஸ்துவின் சிலுவைப்பலி நிறைவேற்றுதலின் காரணமாக குறிப்பிட்ட மக்கள் இரட்சிக்கப்பட்டார்கள் என்பதைக் காட்டுகின்றன.

(3) மூன்றாம் குழுவிலுள்ள வசனங்கள் கிறிஸ்துவின் மரணத்தின் மூலம் இரட்சிக்கப்பட்டவர்கள் கர்த்தரால் தெரிந்துகொள்ளப் பட்டவர்கள் என்பதை விளக்குகின்றன.

ஓவன் இப்பகுதியில் கிறிஸ்து விலை கொடுத்துப் பெற்றுக்கொண்ட மீட்புப்பலன்களுக்கும், அப்பலன்களை நாம் அநுபவபூர்வமாக அடைவதற்கும் இடையிலுள்ள வேறுபாட்டையும் விளக்குகிறார். இந்த வேறுபாட்டை நாம் எவ்வாறு விளங்கிக்கொள்ள வேண்டுமென்பதையும், இதை ஆர்மீனியனிசப் போதனை எவ்வாறு திரித்துப் போதிக்கிறது என்பதையும் ஓவன் விளக்குகிறார். ஆர்மீனியனிசம் இந்த இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாதவை என்கின்றது. ஆனால், இவை இரண்டும் ஒன்றே என்று ஓவன் விளக்குவதோடு கால அளவைப் பொறுத்தவரையில் மீட்புப் பலன்களுக்கான கிறிஸ்துவின் பலி இவை இரண்டில் முதலாவதாக நிகழ்கிறது என்கிறார்.

தன் நூலின் மூன்றாவது பாகத்தில் உலகளாவிய மீட்புக்கெதிரான (Universal redemption) பதினாறு வாதங்களை வேதத்தில் இருந்து நம்முன் வைக்கிறார் ஜோண் ஓவன். ஜிம் பெக்கர் இவற்றைப் பற்றி விளக்கும்போது, “இவற்றில் மூன்றாவதைத் தவிர ஏனைய அனைத்தும் தெளிவான வெளிப்படையான ஆதாரங்களாக இருக்கின்றன. இவையனைத்தும் வேதம் போதிக்கும் கிறிஸ்துவின் மீட்புப்பணிக்கெதிரான உலகளாவிய மீட்புப் போதனை எந்தளவுக்கு வேதத்தோடு பொருந்தியதாக இல்லை என்பதைக் காட்டுகின்றன.” என்று கூறுகிறார். ஓவன் வேதம் முழுவதிலும் வார்த்தை வார்த்தையாக, வசனம் வசனமாக கிறிஸ்துவின் இரட்சிக்கும் பணிபற்றியும் அதன் நோக்கம் பற்றியும் போதிக்கும் விளக்கங்களைத் தேடித்தேடி அவற்றை சாட்சிக்கு மேல் சாட்சியாக நம்முன் வைக்கிறார். இந்தப் பகுதி பற்றி ஜிம் பெக்கர் சொல்லியிருப்பதைக் குறிப்பிட்டேயாக வேண்டும்.

“ஓவனுடைய விளக்கங்கள் சுவிசேஷத்தின் அடிப்படை மையத்தை விளக்கும் பரந்த வேதவிளக்கமாகும். இவற்றை நாம் அவசியம் கவனித்துப் படிக்க வேண்டும். பாரம்பரியப் போதனையொன்றுக்கு வக்காலத்து வாங்கும் ஒரு விளக்கமாகக் கருதி இவற்றை நாம் நிராகரித்துவிடக்கூடாது.

உலகளாவிய மீட்பு வேதம் முழுவதிலும் வசனம் வசனமாகப் போதிக்கப் பட்டிருக்கிறது என்று எடுத்துக் காட்டி ஜோன் ஓவனின் வாதங்களைத் தகர்த்தால் தவிர, மீட்பு குறிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே சொந்தமானது என்ற கல்வினிசப் போதனையை ஒரு பூதமாகக் கருதி நிராகரிக்க எவருக் கும் உரிமை கிடையாது. இதுவரை எவராலுமே ஓவனின் போதனையை நிராகரிக்க முடியவில்லை." என்கிறார் ஜிம் பெக்கர்.

ஓவனின் வாதங்கள் இரண்டு முடிவுகளை முன்வைக்கின்றன. முதலாவ தாக, கிறிஸ்துவின் மீட்புப்பணி வெற்றிகரமாக நிகழ்ந்து தன்னுடைய நோக்கத்தை நிறைவேற்றியிருப்பதால் முடிவாக அழிந்து போகிறவர்களை இரட்சிப்பதற்காக அது திட்டமிடப்பட்டதாக இருக்க முடியாது. இரண் டாவது, எல்லா மனிதர்களையும் இரட்சிப்பது கர்த்தரின் நோக்கமாக இருந்திருந்திருந்தால் கர்த்தர் தன்னுடைய நோக்கத்தை நிறைவேற்றுவதில் தோல்வியடைந்திருக்க வேண்டும் (அது கர்த்தரை அவமதிக்கும் செயல்) அல்லது எல்லா மனிதர்களும் இரட்சிக்கப்பட்டிருக்க வேண்டும் (ஆனால், கர்த்தர் ஒருபோதும் தன்னுடைய நோக்கத்தில் தவற முடியாது).

ஓவனின் நூலின் நான்காவது பாகம் உலகளாவிய மீட்பாகிய போதனை க்கு வக்காலத்து வாங்குபவர்களுக்கு எதிரானது. இந்தப் போதனைக்கு சார்பாக இருப்பதாகக் கருதப்படும் ஒவ்வொரு வேத வசனத்தையும் ஓவன் தன்னுடைய இறையியல் திறமையைப் பயன்படுத்தி அக்குவேறு ஆணி வேறாகப் பிரித்து ஆராய்ந்து விளக்கியிருக்கிறார். இந்த வசனங்களை விளங்கிக் கொள்ள முடியாமல திணறியிருக்கும் பிரசங்கிகளும், கிறிஸ்தவர் களும் ஓவன் தந்துள்ள தெளிவான விளங்களைக் கவனமாகப் படிப்பார் களானால் அவர்களுக்குப் பெரும் பயன் உண்டாகும். ஓவனுக்குப் பின் வந்தவர்களில் பலர் இந்த வசனங்களுக்கு விளக்கங்கொடுத்திருந்த போதும், ஓவனின் திறமையான தெளிவான விளக்கங்கள் அவர்கள் அனைவருடைய விளக்கங்களுக்கும் முன்னோடியாக இருக்கின்றன. வேத வசனங்களை அவை அமைந்திருக்கும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, வசனங்களை வசனங்க ளோடு ஒப்பிட்டு ஆராய்ந்து விளக்கந்தரும் அருமையான நூலாக இருக் கிறது ஓவனின் படைப்பு. தோமஸ் மூரின் வாதங்களை ஓவன் மிகத் திறமையாக வாதாடித் தன்னூலில் தகர்த்தெறிந்திருக்கிறார்.

இந்தப் பாகத்தின் கடைசி அதிகாரத்தில் ஓவன், உலகளாவிய மீட்பாகிய போதனைக்கு சார்பான இறையியல் விளக்கத்தை நிராகரித்து, குறிப்பிட்ட வர்களுக்கான கிறிஸ்துவின் மீட்பை வலியுறுத்தியுள்ளார். இருந்தபோதும் குறிப்பிட்டவர்களுக்கான மீட்பு கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டிய தனி மனிதனின் பொறுப்பை நிராகரிக்கவில்லை என்றும், அது விசுவாசத்திற்கு எதிரானதல்லவென்றும், கிறிஸ்துவின் பணியையும், கர்த்தரின் இலவசமான கிருபையையும் அது மகிமைப்படுத்துகிறது என்றும், அது மட்டுமே மெய் யான சுவிசேஷத்தின் சகல ஆறுதல்களுக்கும், நிச்சயத்துவத்துக்கும் அடிப் படையானது என்றும் விளக்கியிருக்கிறார். அதேவேளை உலகளாவிய மீட்பாகிய போதனைக்கு சார்பானவர்கள் மனிதனின் கடமைப் பொறுப்பைத் தவறாக விளங்கிக் கொண்டிருப்பதோடு, விசுவாசத்தை

அசிங்கப்படுத்தி அதையே கிறிஸ்தவ நிச்சயமாக தவறாகக் கணக்குப் போட்டு, கிறிஸ்துவின் இலவசமான கிருபையை சாதாரணமானதாக்கி கிறிஸ்துவின் மீட்புப்பணியையும் களங்கப்படுத்துகிறார்கள். அத்தோடு நிலைதடுமாறும், மாறுபாடுள்ள, தெளிவற்ற ஆறுதல்களையும், நிச்சயத்தையும் ஆத்துமாக்களுக்கு வழங்குகிறார்கள்.

உண்மையில் கிறிஸ்துவின் சிலுவை மரணம் பெற்றுத் தந்துள்ள சகல நல்ல பலன்களும் கர்த்தரின் சித்தத்தின்படியும், திட்டத்தின்படியும் கிறிஸ்து மரித்த அத்தனை ஆத்துமாக்களுக்கும் எந்தவிதமான வேறுபாடுமின்றி வழங்கப்படுகின்றது. இதுவே நற்செய்தியாகும். உலகத்தோற்றத்திற்கு முன்பாக தான் அன்புகூர்ந்து நேசித்த மக்களுக்காக திட்டமிட்டு நிறைவேற்றிய இரட்சிப்பைத் திட்ப உறுதியோடு அவர்களுக்கு வழங்கும் இறையாண்மையுள்ள கர்த்தரின் நற்செய்தியே இது. இதுவே முழுமையானதும், இலவசமானதுமான இரட்சிப்பு. இதுபற்றி ஜிம் பெக்கர் ஓவனின் நூலுக்கான தன்னுடைய முன்னுரையில் பின்வருமாறு கூறுகிறார்:

> “கல்வினிசத்தின் இரட்சிப்புப் பற்றிய போதனையை விளக்க வேண்டுமானால் அதை ஒரே வார்த்தையில் விளக்கிவிடலாம். அதாவது, கர்த்தர் பாவிகளை இரட்சிக்கிறார் என்பதே அப்போதனை. இதில் கர்த்தரைப் பற்றி கல்வினிசம் போதிப்பதென்ன? பிதா, குமாரன், ஆவியானவராக இருக்கின்ற கர்த்தர் இறையாண்மையுடனும், ஞானத்துடனும், அன்புடனும் தெரிந்துகொள்ளப்பட்ட மக்களின் இரட்சிப்புக்காக உழைக்கிறார். இதில் பிதா தெரிந்துகொள்கிறார்; தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் மீட்புக்கான பணியைக் குமாரன் செய்கிறார்; பிதாவினதும், குமாரனதும் நோக்கங்களின்படி ஆவியானவர் ஆத்துமாக்களைப் புதுரூபமாக்குகிறார். இதுவே கல்வினிசத்தின் கர்த்தத்துவம். இரட்சிப்பைப் பற்றி கல்வினிசம் போதிப்பதென்ன? பாவிகளை மரணத்திலிருந்து விடுவித்து மகிமைக்குக்கொண்டுவருவதற்கான அனைத்தையும் ஆரம்பம் முதல் முடிவுவரையும் கர்த்தரே செய்கிறார். அவரே இரட்சிப்புக்கான திட்டமிடுகிறார்; மீட்பை நிறைவேற்றி அதை பாவிகளுக்கு அளிக்கிறார்; அவர்களை அழைத்துப் பாதுகாக்கிறார்; நீதிமான்களாக்குகிறார்; பரிசுத்தமாக்குகிறார்; மகிமைப்படுத்துகிறார். இதுவே இரட்சிப்புப் பற்றிய அதன் போதனை. பாவிகளைப் பற்றிய அதன் போதனை என்ன? கர்த்தரின் பார்வையில் அவர்கள் குற்றவாளிகளாகவும், உதவியற்றவர்களாகவும், வல்லமையற்றவர்களாகவும், குருடர்களாகவும், கர்த்தருடைய சித்தத்தை எந்த விதத்திலும் நிறைவேற்றும் தகுதியற்றவர்களாகவும், தங்களுடைய இருளான ஆத்மீக வாழ்க்கையைப் புதுப்பித்துக்கொள்ள வழியற்றவர்களாகவும் இருக்கின்றனர். கர்த்தர் பாவிகளை இரட்சிக்கிறார் என்ற இந்தப் போதனையை எந்தவிதத்திலும் நாம் பலவீனப்படுத்திவிடக்கூடாது. இது தொடர்பான திரித்துவ தேவனின் பணியைக் குறைவுபடுத்தியோ அல்லது இரட்சிப்பின் நிறைவேற்றத்துக்கான பணியைக் கர்த்தருக்கும் மனிதனுக்கும் இடையில் பங்கு

> போட்டு அதில் மனிதனின் பங்கை உயர்த்தியோ அல்லது மனிதனின் இயலாத்தன்மையைக் குறைத்துக்காட்டி அவன் தன்னுடைய இரட்சிப்பின் பெருமையை இரட்சகரான இயேசுவுடன் பகிர்ந்து கொள்ளும்படிச் செய்வதோ பெருந்தவறு. பாவிகள் தங்களை ஒரு போதும் எந்தவிதத்திலும் இரட்சித்துக்கொள்ள முடியாது, இரட்சிப்பின் கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் அத்தனையும் ஆரம்பம் முதல் முடிவுவரை பூரணமாக கர்த்தருக்கே சொந்தமானது. அதில் அவருக்கே சகல மகிமையும் சேர வேண்டும். ஆமேன்! நாம் இது வரை விளக்கிய சத்தியத்தையே கல்வினிசம் தன்னுடைய ஐம் போதனைகளின் மூலம் ஆணித்தரமாக நிறுவ முயல்கிறது. அதே வேளை இதையே ஆர்மீனியனிசம் தகர்க்க முயல்கிறது. (J. I. Packer, Introduction to the Death of Death, 6).

ஆனால், நாம் இப்போது ஒரு பிரச்சினையை சந்திக்கிறோம். சுவிசேஷக் கிறிஸ்தவர்களான நாம் சந்திக்கும் இந்தப் பிரச்சினை நற்செய்தியைப் பற்றியது. அதாவது, இதுவரை நாம் பார்த்த சத்தியத்தின் அடிப்படையிலான நற்செய்தியைத்தான் நாம் பிரசங்கித்து வருகிறோமா? என்பதை அந்தப் பிரச்சினை. முதலில், இரண்டு கேள்விகளுக்கு நாம் நிச்சயம் பதிலளித்தாக வேண்டும். (1) நாம் இதுவரை பார்த்திருப்பவைகள் மெய்யானவையாக இருக்குமானால் அவற்றின்படி சுவிசேஷத்தை நான் பிரசங்கிக்கிறேனா? (2) இதுவரை நாம் பார்த்தவை சத்தியங்களானால், சுவிசேஷத்தை நான் எந்த முறையில் பிரசங்கிக்க வேண்டும்?

ஜோன் ஓவனின் நூலை வாசிக்கிறபோது சுவிசேஷத்தைப் பற்றிய நம்முடைய அறிவு குறைபாடுள்ளதாக இருப்பதை நாம் உணரும் நிலைக்கு தள்ளப்படுகிறோம். அதை நாம் அறிந்திருக்கிறோமோ இல்லையோ அதை உணரும்படி அவருடைய வார்த்தைகள் நம்மை உந்துவனவாக இருக்கின்றன. அடுத்தபடியாக, சுவிசேஷத்தைப் பற்றிய நமது அறிவு வேதபூர்வமானதாக இருந்தாலும், அதை நாம் பிரசங்கிக்கும் முறை வேதபூர்வ மானதாக இல்லை என்பதை உணரும் நிலைக்கும் தள்ளப்படுகிறோம். "நீங்கள் மறுபிறப்படைய வேண்டும்" என்று பிரசங்கிப்பது சுவிசேஷப் பிரசங்கமாகாது. ஒருவன் மறுபிறப்படைந்தேயாக வேண்டும் என்று பிரசங்கிப்பதும் கிறிஸ்துவின் நற்செய்தியல்ல. மறுபிறப்பு அல்ல நற்செய்தி; நற்செய்தியின் விளைவே மறுபிறப்பு. நற்செய்தியாகிய மரத்தில் முளைக்கும் கனியே மறுபிறப்பு. பவுல் 2 கொரி. 5:19ல் பின்வறுமாறு நற்செய்தியை விளக்குகிறார், "கிறிஸ்துவின் மூலம் கர்த்தர் உலகத்தைத் தமக்கு ஒப்புற வாக்கிக்கொள்ளுகிறார்." இரட்சிப்பைப் பெறுவதற்காக கிறிஸ்து சிலுவையில் நிறைவேற்றிய மீட்பின் விளைவே நற்செய்தியாகும். இதைப் பற்றிவிளக்கும் சின்கிளேயர் பேர்கசன் (Sinclair Firguson), "கிறிஸ்து நமக்குள் இருப்பதோ அல்லது நாம் மறுப்பிறப்படைந்திருப்பதோ நமது நீதிமான்களாகுதலுக்கான அடிப்படை அல்ல". கிறிஸ்து நமக்காக மரித்திருப்பதே நீதிமானாக்குதலின் அடித்தளமாகும். மார்டின் லூதர் இதுபற்றிக் கூறும்போது, "பூரணமாக நமக்கு வெளியில் இருந்து வருவதே நற்செய்தி" என்கிறார். இதை மேலும் விளக்கும் பேர்கசன்,

*"நமது பிரசங்கத்தில் நாம் ஒருபோதும் கிறிஸ்துவின் மீட்புப் பணியை கிறிஸ்துவில் இருந்து வேறுபடுத்திக்காட்டக் கூடாது. மீட்பு, நீதிமானாக்குதல், இரட்சிப்பு என்று நாம் பிரசங்கிப்பதை விட "மரித்திருக்கும் கிறிஸ்துவை" பிரசங்கிப்பது மேலானது. இரட்சிப்பின் பலன்களைக் கிறிஸ்துவே நிறைவேற்றித் தந்திருப்பதோடு அவர் மூலம் மட்டுமே அவற்றை நாம் அடையவும் முடியும். அவரில் இருந்து அவரைப் பிரிக்க முடியாது. கிறிஸ்துவால் நாமடையும் பலன்களை மட்டும் பிரசங்கித்துவிட்டு நற்செய்தியின் நாயகனான கிறிஸ்துவைப் பிரசங்கிப்பதைத் தவிர்த்துவிடும் நவீன பிரசங்க வியாதியைவிட்டு நாம் விலகியோட வேண்டும். நாம் கிறிஸ்து மையமாகக்கொண்டு அவர் செய்திருக்கும் பணியைப் பிரசங்கிக்கிறோம்; கிறிஸ்துவை விட்டுவிட்டு அவருடைய பணியை மட்டும் பிரசங்கிப்பதில்லை."*

இது நம்முடைய இரண்டாவது கேள்விக்கு நம்மை அழைத்துச் செல்லுகிறது. பேர்கசன், "மரித்து உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை நாம் பிரசங்கத்தின் மூலம் அனைவருக்கும் வழங்குகிறோம்" என்கிறார். அப்படியானால் அதை எவ்வாறு பிரசங்கிப்பது? இதை வாசிக்கிறபோது நாம் பிரசங்கித்துள்ள அல்லது நாம் கேட்டிருக்கிற பிரசங்கங்களை நோக்கி நம்முடைய மனம் அசைபோட ஆரம்பிக்கிறதல்லவா? அந்தப் பிரசங்கங்களில் ஆத்துமாக்களை உந்தி இழுப்பதற்கு நாமோ மற்றவர்களோ பயன்படுத்தியிருக்கிற சொற்பிரயோகங்களை சிந்தித்துப் பார்ப்போம். அவ்வாறு சிந்தித்துப் பார்க்கிறபோது, நான் ஒரு ஆர்மீனியனா? அமிரெல்டியனா? என்னைக்குறித்தும் என்னுடைய பிரசங்கததைக் குறித்தும் நான் ஆத்துமாக்களுக்கு எச்சரிக்கை செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறேனா? ஆத்துமாக்களுக்கு கொடுக்க அவசியமில்லாத எதையும் பிரசங்கத்தில் நான் கொடுத்திருக்கிறேனா? கிறிஸ்து தன்னுடைய மக்களுக்காக மரித்திருப்பதால் நான் எப்படி அவரை ஆத்துமாக்களுக்கு வழங்க முடியும்? அவர்கள் அவருடைய மக்களாக இல்லாமல் இருந்துவிட்டால் என்ன செய்வது? கர்த்தரின் இலவசமான கிருபையின் நற்செய்தியை சிதைத்துவிடுகிற ஆபத்தேற்படும் என்பதால் கிறிஸ்துவை ஆத்துமாக்களுக்கு நான் வழங்காமல் இருப்பது என்னை ஹைபர் கல்வினிஸ்டாக (Hyper Clavinist) மாற்றி விடுமா? ஏனைய பிரசங்கிகளும், நானும் "கர்த்தரோடு ஒப்புறவாகுங்கள்" என்று கர்த்தரே நம்மூலம் வருந்தி அழைப்பது போல் ஆத்துமாக்களுக்கு பிரசங்கிப்பது எப்படி? கர்த்தருடைய மக்களின் மீட்பு நடக்கக் கூடிய ஒன்றாக இல்லாமல் நிச்சயமாக நிகழ்ந்து, நிறைவேறி, கொடுக்கப்பட்டு வருகிறதாக இருக்குமானால், கிறிஸ்துவை விசுவாசித்து இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளும்படி ஆத்துமாக்களை நான் அழைப்பதெப்படி?

ஆர்மீனியன்களும் அவர்களுடைய நண்பர்களுமே கிறிஸ்துவை முடமாக்கி நற்செய்தியாகிய மரத்தை சேதப்படுத்திவிட்டிருக்கிறார்கள். அவர்கள் செத்த பிணங்களுக்கு முன் நம்பிக்கையாகிய சட்டியை நீட்டி அதில் தாகத்தைத் தீர்த்துக்கொள்ளும்படி அவர்களை வற்புறுத்துகிறார்கள். கிறிஸ்து தன் பணியை அரைகுறையாக விட்டிருக்கிறார் என்ற எண்ணத்தில்

*அதைப் பூரணமாக்க செத்த பிணங்களை ஏவிவிடுகிறார்கள். பிணங்களை விசுவாசிக்க வைக்க ஆர்மீனியன் போதனையாளர் செய்யும் செயலே இது. அவர்களுடைய செயல் எந்தமாதிரியான இரட்சிப்பை ஆத்துமாக் களுக்கு வழங்கப்போகிறது?*

*நல்லவர்களாகவோ, கெட்டவர்களாகவோ உலகத்தின் பார்வையில் எந்த நிலைமையிலிருந்தாலும் இல்லாவிட்டாலும் கர்த்தருடைய மக்களெல்லோ ரையும் இரட்சிப்பதற்காகவே கிறிஸ்து மரித்தார் என்றும், அவர் தன்னு டைய பணியில் ஒருபோதும் தவறுவதில்லை என்பதிலும் கல்வினிசப் போதனையாளர்கள் உறுதியான வேதநம்பிக்கையைக் கொண்டிருக்கிறார் கள். அந்த நம்பிக்கையுடனேயே அவர்கள் நற்செய்தியைப் பிரசங்கிக்கிறார் கள். கர்த்தருடைய மகிமையுள்ள குமாரனால் நிறைவேற்றப்பட்ட குறிப் பிட்டவர்களுக்கான மீட்பே நற்செய்தியைப் பிரசங்கிப்பதற்கு நமக்குள்ள சுதந்திரத்தின் அடித்தளமாகும்.*

*முடிவற்ற மகிமையுள்ள கிறிஸ்துவின் சிலுவைப் பலியை அடித்தளமாகக் கொண்டே எல்லா மக்களுக்கும் நற்செய்தி பிரசங்கிக்கப்பட வேண்டும் என்பது ஜோண் ஓவனின் அசைக்க முடியாத கருத்து. "இரட்சிப்பிற்காக நற்செய்தி காட்டும் இந்த வழி சகலரும் அதில் நடந்து போவதற்கு வசதி யாக இருக்கின்றது" என்கிறார் ஓவன். கர்த்தருக்குரியவைகளை அறிந்திராத பிரசங்கிகள் (அதை அறிந்துகொள்ள முயல்வது அவர்களுடைய பணி யல்ல), "கிறிஸ்துவை விசுவாசிக்கும்படி சகல மனிதரையும் அழைக்க வேண் டியது அவசியம். ஏனெனில், கிறிஸ்துவை விசுவாசிக்கும் ஒவ்வொரு வரையும் கரை சேர்க்கும் வல்லமை கிறிஸ்துவின் சிலுவை மரணத்தில் அடங்கியிருக்கிறது. யார் யாருக்கு கர்த்தர் விசுவாசத் தைக் கொடுப்பார், எவரெவருக்கு கிறிஸ்து மரித்தார் என்பதுபோன்ற கர்த்தரின் ஆலோசனை களையெல்லாம் ஒருபுறம் வைத்துவிட்டு இதைச் செய்வதே பிரசங்கிகளின் பணி" என்கிறார் ஓவன்.*

*கர்த்தருடைய திட்டத்திற்கும் மனிதனுடைய கடமைக்கும் இடையில் இருக்கும் வேறுபாட்டை நாம் தெளிவாக விளங்கிக்கொள்ளுவது அவசியம். நற்செய்தியைப் பிரசங்கிப்பதே நம்முடைய கடமை. கர்த்தர் தன்னுடைய மகிமையுள்ள நோக்கங்களைத் தான் நியமித்துள்ள கருவிகளைக் கொண்டு தகுந்த நேரத்தில் நிறைவேற்றிக்கொள்ளுவார் என்பதை மனதில் கொண்டு நாம் நற்செய்தியைப் பிரசங்கிக்க வேண்டும். ஜோண் ஓவனின் பின்வரும் வார்த்தைகளைக் கவனியுங்கள்:*

> *"ஏற்கனவே நாம், கிறிஸ்துவின் பரிகாரப்பலியைப் பற்றிப் பிரசங் கிப்பது கிறிஸ்துவின் மரணத்தைப் பிரசங்கிப்பதாகும் என்று பார்த் திருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால் அவரே சிலுவையைப் பற்றிய செய்தியாக இருக்கிறார். கல்வின் இதுபற்றி அருமையாக பின்வருமாறு சொல்லுகிறார்: 'பிதாவினால் அளிக்கப்பட்டு தன் னைப் பற்றிய செய்தியைத் தாங்கி வரும் கிறிஸ்துவை நாம் பிரசங் கிக்கிறோம்'. வெறுமனே கிறிஸ்துவினுடைய பணியை மட்டும் நாம் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கு அளிப்பதில்லை; எபிரே*

*யர் 7:25 ன்படி 'தேவனிடத்தில் சேருகிறவர்களை . . முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயிருக்கிற' இரட்சகரான கிறிஸ்துவை நாம் எல்லோருக்கும் வழங்குகிறோம். கிறிஸ்து தரும் பலன்களை மட்டும் பிரசங்கிக்காமல் கிறிஸ்துவையே இரட்சகராகப் பிரசங்கிப்பதே நற்செய்திப் பிரசங்கம் என்பதை நாம் விளங்கிக்கொள்ளும்போது சுதந்திரமாக நம்மால் சுவிசேஷப் பிரசங்கத்தை செய்யமுடிவதோடு, தெரிந்துகொள்ளப்பட்டவர்களைப் போலவே தெரிந்துகொள்ளப் படாதவர்களும் கிறிஸ்துவை விசுவாசிக்கும் பொறுப்புள்ளவர்க ளாக இருக்கிறார்கள் என்பதை நாம் அறிந்துகொள்கிறோம்.*

*பவுலினுடையதும், அப்போஸ்தலர்களுடையதும், சீர்திருத்தவாதத் தினுடையதும், விசுவாச அறிக்கைகளுடையதுமான பரிகாரப்பலி பற்றிய இந்த விளக்கமே நற்செய்தியைப் பிரசங்கிப்பதற்கான நம்பிக் கையை நமக்கு அளிக்கிறது. இதன் மூலமே பிதாவினால் உலகத் தோற்றத்துக்கு முன்பாக தெரிந்துகொள்ளப்பட்டு கிறிஸ்துவிடம் ஒப்படைக்கப்பட்டு, தகுந்த காலத்தில் கிறிஸ்துவின் இரத்தப் பலி மூலம் பெறப்பட்ட மீட்புக்கு உரித்தானவர்கள் தேவனுடைய இராஜ்யத்துக்குள்ளாக கொண்டுவரப்படுகிறார்கள்."*

ஜோன் ஓவனுடைய இந்த விளக்கத்தை அங்கீகரித்து அவருக்குப் பின்பு வந்த இறையியலறிஞர் ஜோண் மரே பின்வருமாறு விளக்குகிறார்:

*"இரட்சிப்பை அடைந்தாலும் அடையலாம், அடையாமலும் போக லாம் என்றில்லாமல் பூரணமான இரட்சிப்பையும் இரட்சகரையும் பாவிகளுக்கு நாம் வழங்குகிறோம். நாம் வழங்குகிற இரட்சிப்பில் குறைபாடுகளோ, அதை அடைவதற்கான எந்தத் தடைகளோ இல்லை. தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் என்ற நம்பிக்கையுடனோ அல்லது கர்த்தரின் அன்பை ருசி பார்ப்பதற்கு தகுதியுள்ளவர்கள் என்ற நம்பிக்கையுடனோ நாம் கர்த்தரிடம் ஒரு போதும் வருவ தில்லை; பாவிகளாக மட்டுமே அவரிடம் வருகிறோம். அதுவே மெய்யான விசுவாசத்திற்கு அடையாளமாக இருக்கிறது."*

கிறிஸ்துவின் மகிமையைப் பற்றி எழுதியுள்ள ஜோன் ஓவன் அதன் முடிவில் கிறிஸ்துவை அறியாதவர்களை கிறிஸ்துவிடம் வருமாறு பின்வரு மாறு அழைக்கிறார்:

*"கிருபையையும், நித்திய ஜீவனையும், சமாதானத்தையும், விடுதலை யையும் பெற்றுக்கொள்ள உங்களைத் தன்னிடம் வருமாறு அழைக்கின்ற கிறிஸ்துவின் அழைப்பில் அவருடைய அளவற்ற அன்பை நம்மால் பார்க்க முடிகிறது. இத்தகைய அழைப்புகள் வேதம் முழுவதும் பரவிக்காணப்படுகின்றன. பாவிகள் தற்போது இருக்கும் நிலையில் அவர்களுக்கு தேவையானது என்று கர்த்தர் ஞானத்தோடு கண்டிருக்கும் ஆசீர்வாதமான ஆறுதல்கள் அவரு டைய அழைப்பில் நிரம்பிக் காணப்படுகின்றன. அவற்றை எண்ணிப் பார்ப்பதே நமக்கு அதிக ஆசீர்வாதத்தைக் கொடுக்கும்.*

*. . . இவற்றைப் பிரசங்கத்தின் மூலம் பாவிகளுக்கு நாம் வழங்கும் போது இயேசு கிறிஸ்துவே பாவிகள் முன் நின்று அவர்களுக்கு ஆறுதல் சொல்லி அழைக்கிறார்."*

*ஆகவே, கிறிஸ்துவின் கிருபையையும், அன்பையும் எண்ணிப் பாருங்கள். அவருக்கு உங்கள் உதவி அவசியமாக இருக்கிறதா? நீங்களா அவரை முதலில் நேசித்தீர்கள்? நீங்கள் இல்லாமல் அவரால் அன்போடும், சமாதானத்தோடும் இருக்க முடியாதா என்ன? உங்களை இவ்வளவு தூரம் அவர் வற்புறுத்தி அழைப்பதால் அவருக்கு என்ன நன்மை இருக்கிறது? அருவிபோல் பாய்ந்தோடும் அவருடைய அன்பும், கிருபையும், கருணையுமே அவரை இந்தளவுக்கு உங்களை அழைக்கும்படி செய்கிறது."*

இதுவே மெய்யான அழைப்பு. கிறிஸ்துவிடம் வந்து இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளும்படி பாவிகளை அழைக்கும் நேர்மையான, உளமார்ந்த, உணர்ச்சிபூர்வமான அழைப்பு. இன்னொரு விசுவாசமிக்க சேவகனும், பிரசங்கியுமான சார்ள்ஸ் ஸ்பர்ஜன் சொல்லுவதைக் கவனியுங்கள்:

*"நான் ஆசைப்படுகிற அளவுக்கு என்னால் உங்களை வருந்தி அழைக்க முடியவில்லை. என்னால் முடியுமானால் நான் என் கண்கள் மூலமும், இதழ்கள் மூலமும், இருதயத்தாலும் உங்களைக் கிறிஸ்துவிடம் அழைத்துச் செல்வேன். நான் ஒரு ஆர்மீனியனைப் போலப் பேசுகிறேனே என்று நீங்கள் என்னைப் பார்த்துக் கூப்பாடு போட வேண்டிய அவசியமில்லை. உங்களுடைய எண்ணங்களைப் பற்றி எனக்கு எந்தக் கவலையுமில்லை; இதுவே வேதத்தில் நான் பார்க்கிற அழைப்பு. கர்த்தரே எங்கள் மூலம் உங்களை அழைப்பது போல், உங்களுக்காக நாங்கள் கிறிஸ்துவின் இடத்தில் இருந்து ஜெபத்தோடு, கிறிஸ்துவோடு ஒப்புறவாகுங்கள் என்று அழைக்கிறோம். நொருங்கின இருதயத்தோடு இருக்கும் பாவியே! கர்த்தரே இந்தக் காலை நேரத்தில் தானே இந்த இடத்தில் இருப்பதுபோல் தன்னோடு ஒப்புறவாகும்படி உன்னோடு பேசுகிறார். குள்ளமானவனும், பார்வைக்கு ஒன்றும் பெரிதாகத் தெரியாதவனுமாகிய என் மூலமாக அவர் பேசினாலும், தேவதூதர்களே உன் முன் நின்று பேசுவதுபோல் அவர் பேசுகிறார். கர்த்தரோடு ஒப்புறவாகு! வா! நண்பா, உன்னுடைய கண்களையும், முகத்தையும் என்னை விட்டு திருப்பிக்கொள்ளாதே. உன்னுடைய கரங்களையும் இருதயத்தையும் என்னிடம் கொடு. உன்னுடைய இருதயம் அழிந்து போகாமல் இருப்பதற்காகவும், கர்த்தர் உனக்கு கருணை காட்டும்படியும், நான் ஜெபிக்கிறேன். நீ கிறிஸ்துவுக்கு எதிரியாக இருக்கிறாய் என்று அவர் உனக்கு உணர்த்தி இருப்பதால், கிறிஸ்துவுக்கு உடனடியாக நண்பனாகிவிடு. நினைவில் வைத்துக்கொள், இப்போது நீ பாவத்தை உணர்ந்து மனந்திரும்புவாயானால் உனக்கு தண்டனை கிடைக்காது. உனக்காக அவர் தண்டனையை ஏற்றுக் கொண்டிருக்கிறார்.  நீ இதை நம்புவாயா? இதை நீ விசுவாசித்து*

கர்த்தரோடு சமாதானத்தை அநுபவிப்பாயா? நீ, இதற்கு மறுப்புக் கூறுவாயானால், உனக்குக் கிடைக்கவிருந்த கிருபையை நீ உதறிப் போட்டுவிட்டாய் என்பதை உனக்கு சொல்ல விரும்புகிறேன். “நான் ஒப்புறவாவதற்கு அவசியமில்லை” என்று நீ சொல்வாயானால் உனக்கிருந்த ஒரே நம்பிக்கையை நீ தூக்கி எறிந்து விடுகிறாய். உன்னுடைய இரத்தப்பழி எனக்கு வேண்டாம்; உனக்கு நீயே ஆபத்தை விளைவித்துக் கொள்கிறாய். கொஞ்சம் பொறு, கிறிஸ்து உனக்குத் தேவை என்பதை நீ உணர்வாயானால், நரகமாகிய பாதாளத்தில் இருந்து நீ தப்பி பரிசுத்தமானவர்களோடு வாழ்வாய். நியாயத்தீர்ப்பு நாளில் உன்னைக் குற்றஞ்சாட்டப் போகும் அவருடைய பெயரில் நான் மன்றாடுகிறேன், கிறிஸ்துவிடம் ஒப்புறவாகிவிடு. இந்தப் பிரசங்கத்தை முடித்தபிறகு நான் மறுபடியும் கர்த்தரின் கோர்டுக்கு போகப்போகிறேன். அங்கே உன்னைப் பற்றி நான் எதைக் கூறுவது? நீ தொடர்ந்து கர்த்தருக்கு எதிரியாகவே இருக்கத் தீர்மானித்திருக்கிறாய் என்று என் ஆண்டவரிடம் நான் சொல்வதா? அல்லது, “அவர்கள் நான் பேசியதைக் கேட்டார்கள், ஆனால், அதை அசட்டை செய்துவிட்டார்கள் என்றும், அவர்கள் தங்களுடைய இருதயத்தில், இப்படியே இருந்துவிடப்போகிறோம், கர்த்தருக்குப் பயந்து வாழமாட்டோம் என்று சொன்னார்கள் என்றும் சொல்வதா?” கர்த்தரிடம் இதைப் போய் நான் சொல்லவா? இந்த பயங்கரமான செய்தியை நான் கர்த்தரிடம் போய் சொல்ல வேண்டுமென்பதா உங்கள் விருப்பம்? இந்தச் செய்தியோடு என் ஆண்டவரிடம் என்னைத் திரும்ப அனுப்பாதீர்கள், அவர் கோபத்தில், “நான் வாக்குத்தத்தமளித்த நித்திய ஓய்வை நிராகரித்தவர்களுக்கு அது ஒருபோதும் கிடையாது” என்று சொல்லிவிடுவார்.

இறையாண்மையுள்ள கர்த்தரின் இரட்சிப்புக்குரிய நோக்கங்களில் உறுதியான நம்பிக்கை வைத்த அதேவேளை கிறிஸ்துவிடம் வந்து இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று உணர்ச்சியோடு பிரசங்கித்தார்கள் ஸ்பர்ஜனும், ஓவனும். அவர்களால் எவ்வாறு இப்படிப் பிரசங்கிக்க முடிந்தது? கிறிஸ்து தம்முடைய மக்களுக்காக மரித்தார் என்றும், அவர் தம்முடைய இரத்தத்தின் மூலம் தம்முடைய மக்களின் பாவங்களைக் கழுவி அவர்களைத் தவறாது இரட்சிப்பார் என்றும், அவர்களைத் தன்னுடைய வார்த்தையின் மூலம் அழைத்துக் கொள்ளுவார் என்றும் அவர்கள் ஆணித்தரமாக நம்பியதால்தான் அவர்களால் இப்படிப் பிரசங்கிக்க முடிந்தது.

இவர்கள் பிரசங்கித்த இந்த சுவிசேஷத்தை நாம் புரிந்துகொண்டிருக்கிறோமா? அப்படியானால் அதை நாம் விசுவாசத்தோடு பிரசங்கிக்கிறோமா? பாவிகள் கிறிஸ்துவை விசுவாசிக்க கிறிஸ்துவினால் நிறைவேற்றப்பட்ட மரணபலியைவிட வேறு எதுவும் தேவையில்லை. பாவிகளுக்காக தன்னுடைய ஒரே குமாரனைப் பலிகொடுத்ததன் மூலம் கர்த்தர் தன்னுடைய இலவசமான கிருபையின் மகிமையை உலகத்துக்குக் காட்டியிருக்கிறார். அதைவிடப் பெரிது ஒன்றும் இல்லை. உலகத்தோற்றத்துக்கு முன்பாகத் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் மீது தான் காட்டியிருந்த அன்பைத்

*தன்னுடைய குமாரனை சிலுவையில் அவர்களுக்காகப் பலிகொடுத்ததன் மூலம் கர்த்தர் காட்டியிருப்பதைப் போன்ற மகிமையான காரியம் வேறொன்றில்லை. நம்முடைய பாவங்கள் கிறிஸ்துவின் மீட்பின் மூலம் மன்னிக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிந்துகொள்ளுவதை விடப்பெரிய ஆனந்தம் வேறொன்றில்லை. கர்த்தருடைய வார்த்தையினாலும் பரிசுத்த ஆவியின் மூலமாகவும் உணர்த்தப்பட்டு கிறிஸ்துவிடம் சரணடைந்து விடுகிறவர்களிலேயே மெய்யான நிச்சயம் அதிகமாக வளர்கிறது.*

*மனிதர்களைக் கிறிஸ்துவிடம் வரும்படிச் செய்யும் வல்லமை நம்மிடம் இல்லை. இருந்தாலும் மனிதர்கள் கிறிஸ்துவிடம் வரும்படிச் செய்ய வேண்டிய கடமை நமக்கு இருக்கின்றது. "உங்களுடைய இருதயத்தைத் திறந்து வையுங்கள்" என்றோ அல்லது "உங்களுடைய இருதயத்துக்குள் வரும்படி அவரை அழையுங்கள்" என்றோ நாம் மனிதர்களைப் பார்த்து சொல்லக்கூடாது. அப்படிச் செய்வது சுவிசேஷத்தையே குழி தோன்றிப் புதைப்பதுபோலாகும். அதைவிட, நாம் பாவிகளைப் பார்த்து மன்றாட வேண்டும். ஒரு புறம் கர்த்தர் தன்னுடைய வார்த்தையின் மூலமும் பரிசுத்த ஆவியானவரின் மூலமும் கிறிஸ்துவின் செயல்களை அவர்களில் பதியும் படிச் செய்யுமாறு அவர்களுக்காக ஜெபிப்பதோடு மறுபுறம் கிறிஸ்துவின் பூரணமான மீட்புப்பணி அவர்களைக் கரை சேர்க்கப் போதுமானது என்ற தளராத நம்பிக்கையுடன் தங்களுடைய பாவநிவாரணத்துக்காக கிறிஸ்துவிடம் வருமாறு அவர்களைப் பார்த்து நாம் அறைகூவலிட வேண்டும்.*

*எல்லா மனிதர்களும் தங்களை இரட்சித்துக்கொள்ளுவதற்கான வசதியை மட்டும் செய்து தருவதற்காக கிறிஸ்து கல்வாரியில் மரிக்கவில்லை. கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் இரட்சிப்பை அடைவதற்கான ஒரு வழியை மட்டும் ஏற்படுத்தவும் அவர் சிலுவையில் மரிக்கவில்லை. கர்த்தருடைய மக்கள் அவர்களுடைய பாவங்களில் இருந்து விடுதலை பெறுவதற்காகத் தன்னைப் பலியாகச் செலுத்தி கிறிஸ்து சிலுவையில் மரித்து அவர்களுக்கான இரட்சிப்பைப் பூரணமாக நிறைவேற்றினார். இதுவே வேதம் போதிக்கும் கிறிஸ்துவின் மீட்புப்பணி; இதுவை நாமறிவிக்க வேண்டிய சுவிசேஷம். அவருக்கே சகல மகிமையும் சேரட்டும். ஆமேன்!*

---

**ஆர்மீனியனிசம்**, அனைவரையும் இரட்சிப்பதற்காக சிலுவையில் கிறிஸ்து மரித்தார் என்றும் இருந்தபோதும் அவரை விசுவாசிப்பவர்கள் மட்டுமே பரலோகம் சேருவார்கள் என்று போதிக்கிறது. கிறிஸ்துவை சுயமாக விசுவாசிக்கக்கூடிய வல்லமையை மனிதன் தன்னுள் கொண்டிருப்பதாக இது நம்புகிறது. மனிதன் பாவியாக இருந்தபோதும் அவனுடைய சித்தத்தைப் பாவம் பாதிக்கவில்லை என்று இப்பிரிவு நம்புவதால் இந்த முடிவுக்கு வந்திருக்கிறது. இதற்கு மாறாக **கல்வினிசம்** கிறிஸ்து கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்ட மக்களின் இரட்சிப்புக்காக மட்டுமே மரித்தார் என்றும், அந்த மக்களின் இரட்சிப்புக்கான அனைத்தையும் அவர் செய்திருக்கிறார் என்றும், அதன்படி அவருடைய மக்களுக்கு அவர் விசுவாசத்தைக் கிருபையாக அளித்து தன்னிடம் அழைத்துக் கொள்கிறார் என்றும் போதிக்கிறது. இதனால் மனிதன் செய்யக் கூடிய தொன்றுமில்லை என்று கருதிவிடக்கூடாது. கல்வினிசத்தின்படி மனிதன் தன் சித்தம் உட்பட முழுமையாகப் பாவத்தால் பாதிக்கப்பட்டிருந்தபோதும் அவன் கர்த்தரை விசுவாசிக்க வேண்டிய கடமைப் பொறுப்பை இழக்கவில்லை. அதேவேளை கர்த்தர் அவனுக்கு விசுவாசத்தைக் கொடுக்காவிட்டால் அவனால் ஒருபோதும் விசுவாசிக்க முடியாது என்கிறது கல்வினிசம்.

# ரிக் வோரனின் நூல்கள்

ரிக் வொரனின் (Rick Warren) இரண்டு நூல்களைக் குறிப்பிட்டு (Purpose-Driven Life, Purpose-Driven Church) இதற்கு முன்பு எழுதியிருந்தோம். அது பற்றி சிலர் எழுதிக் கேட்டிருந்தர்கள். இந்த நூல்கள் அமெரிக்காவில் நல்ல விற்பனையைக் கண்டிருக்கின்றன. இவை ஏனைய நாடுகளையும் போய் சேர்ந்திருக்கும். ரிக் வொரனின் நூல்களில் எல்லா நூல்களையும் போலப் பொதுவான நல்ல விஷயங்களும் இருக்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை. அவற்றில் காணப்படும் நல்ல விஷயங்களைவிட நிறைந்து வழியும் ஆத்மீக ஆபத்தை விளைவிக்கும் தவறான விஷயங்ளைப் பற்றித்தான் வாசகர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அவற்றில் முக்கியமானவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்:

(1) கிறிஸ்தவ சபை வளர்ச்சிக்கும், வாழ்க்கை உயர்வுக்கும் அவர் சுலபமான வழியைக் காட்ட முயல்கிறார். அவருடைய இரண்டு நூல்களிலும் இதைப் பார்க்கலாம். நாற்பது நாட்களில் செய்ய வேண்டியதைச் செய்தால் எழுப்புதல் ஏற்படும்; வாழ்க்கை சிறக்கும் என்ற குறுக்குவழி. இதற்கு ரிக் வொரன் வேதவசனங்களை ஆதாரம் காட்டினாலும் அவற்றை வேதம் போதிக்கின்ற விதத்தில் விளக்காமல் தனது நோக்கங்களுக்காக பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். இதையே கெரிஸ்மெடிக் இயக்கத்தார் தொடர்ந்து செய்து வருகின்றனர். திருச்சபை வளர்ச்சிக்கும், கிறிஸ்தவ வாழ்க்கை உயர்வுக்கும் உதவும் எந்தவிதமான குறுக்கு வழியோ, இரகசியமான ஆத்மீகத் திடீர் மாத்திரைகளோ இருப்பதாக வேதத்தில் நாம் வாசிப்பதில்லை.

(2) ரிக் வொரனின் நூல்கள் இரண்டிலும் Pragmatism ஆளுகிறது. எதெதெல்லாம் நல்ல வெற்றியைத் தருகிறதோ அவையே சரியான வழிகள் என்பதே "பிரெக்மடிசம்". அத்தகைய பிரெக்மடிச வழிமுறைகளை ரிக் வொரன் ஏற்கனவே தீர்மானித்துக்கொண்டு அவற்றிற்கு வேதத்தில் இருந்து ஆதாரம் காட்ட முயன்றிருக்கிறார். வேத ஞானம் அதிகமில்லாத விசுவாசிகளின் கையில் ரிக் வொரனின் நூல்கள் தாலாட்டுப் பாடும். ஏனெனில், அவர்களால் வொரனின் பிரெக்மடிச வழிகளை அடையாளம் கண்டு ஆத்மீக சிதைவில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியாது.

(3) ரிக் வொரன் இந்நூல்களில் பயன்படுத்தியிருக்கும் வேத மொழி பெயர்ப்புகள் சந்தேகத்துக்குரியவை. அவை நல்ல மொழிபெயர்ப்புகளல்ல. நல்ல மொழிபெயர்ப்பாக இல்லாதவை கர்த்தரின் அதிகாரத்தைக் கொண்டிராமல் தவறான பாதைக்கு நம்மை வழிநடத்திவிடும். அத்தோடு ரிக் வொரனுடைய வேத விளக்கமுறை வழமையான வேதபூர்வமான வேத விளக்கமுறையில்லை. வேத வசனங்களை ஆராய்ந்து பார்த்து வேதம் அவற்றின் மூலம் கொடுக்கும் விளக்கங்களை அளிக்காமல் மேலெழுந்த வாரியாக வாசித்துவிட்டு தான் பார்க்க விரும்புகிற விளக்கத்தை, தனது நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளுவதற்காக ரிக் வொரன் தந்திருக்கிறார். இந்நூல்கள் குறித்து வாசகர்கள் எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

# தணிந்துபோகும் அன்பு

**ஒக்டேவியஸ் வின்ஸ்லோ (1808-1878)**

*இப்போது நாம் பார்க்கப்போகிற உண்மை நம்மைத் தாழ்மைப் படுத்துகிறதும், ஆத்மீக ரீதியில் பாதிக்கக்கூடியதொன்றாகும். தேவனுடைய பிள்ளையின் வாழ்க்கையில் கிருபையின் அன்பு பெருமளவுக்கு தணிந்துபோகக்கூடியதாக இருக்கிறது என்பதே அந்த உண்மையாகும். இதன் மூலம் தேவனுடைய பிள்ளை தன்னுடைய இரட்சிப்பை இழந்துபோகலாம் என்று நான் கூறவரவில்லை; ஆனால், அதன் வல்லமை அவனில் தணிந்துபோகும் என்றுதான் சொல்ல வருகி றேன். இந்த உண்மையை நாம் அடிக்கடி வலியுறுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். விசுவாசம், அன்பு, நம்பிக்கை, பக்தி என்பனவெல்லாம் தேவனுடைய பிள்ளை துன்பத்தை அனுபவிக்கின்றபோது பெரும் பாதிப் புக்குள்ளாகி வலிமையிழந்து காணப்பட்டாலும் அவற்றை அவன் பூரண மாக ஒருபோதும் இழந்துவிட முடியாது என்று வேதம் சுட்டிக் காட்டுகிறது. அவற்றை அவன் முற்றாக இழந்துவிடலாம் என்று கூறுவது தேவனுடைய வல்லமையையும், ஞானத்தையும் குறைவுபடுத்துவதோடு, அந்தக் கிருபை களின் அழியாத்தன்மையையும் மறுதலிப்பதில் போய் முடிந்துவிடும். தேவனுடைய அன்பு ஒருவரில் தணிந்துபோகும்போது கீழ்வரும் குணா தியங்களை அவருடைய வாழ்க்கையில் காணமுடியும்.*

(1) **கர்த்தரை முழு இருதயத்தோடு நேசிப்பதும், அதில் ஆனந்தமடைவதும், அதைத் தொடர்ந்து எண்ணிப் பார்ப்பதும் ஒருவரில் குறைவடைகிறபோது அவருடைய ஆத்துமாவில் தேவனின் அன்பு தணிந்துவிட்டிருக்கிறது என்று சந்தேகப்படுவதில் தப்பில்லை.** - *நம்முடைய ஆத்மீக அன்பு இருக்கும் நிலை கர்த்தரைப் பற்றிய நம்முடைய ஆத்மீக எண்ணங்களையும், நமக்கு அவர் மீது இருக்க வேண்டிய அன்பையும், ஆனந்தத்தையும் பாதிக்கும். கிறிஸ்துமேல் இருக்க வேண்டிய அன்பு குளிரடைந்து காணப்பட்டாலோ, நம்முடைய மனதில் உலகப்பிரகாரமான, சுயநலமான எண்ணங்கள் வளர ஆரம்பித்தாலோ கர்த்தரைப் பற்றிய நம்முடைய எண்ணங்களைச் சுற்றி கார்மேகக் கூட்டங்கள் படர ஆரம்பித்துவிடும். அதன் காரணமாக அவரே நமக்கு எல்லாமாக இல்லாமலும், அவர் மீது நமக்கு இருக்கும் வைராக்கிய மான அன்பும், விசுவாசமும் சிறிது சிறிதாக தணிய ஆரம்பித்துவிடும். இத்தகைய அன்பு குறைந்தபோதே ஆதாம் கர்த்தரைவிட்டு விலகி மறைந்து வாழ ஆரம்பித்தான். தன்னுடைய இருதயத்தில் கர்த்தருக்கு விரோதமான உணர்ச்சிகள் ஏற்பட ஆரம்பித்துவிட்டதை உணர்ந்து அதற்குப் பணிந்து, அதன் காரணமாக கர்த்தரே எல்லாம் என்று இதுவரை இருந்த எண்ணங் கள் இருதயத்தில் தணிந்துபோக அவருடைய பிரசன்னத்தைவிட்டு விலகி யோட ஆரம்பித்தான். எந்தக் கர்த்தர் இதுவரை அவனுக்கு மகிமையுள்ள*

*வராக இருந்தாரோ, எவருடைய சம்பாஷனை இதுவரை அவனுக்கு ஆனந்தத்தையும், ஆறுதலையும் அளித்ததோ, எவருடைய குரல் அவனுக்கு இதுவரை இனிமையானதாக இருந்ததோ அவர் அவனுக்கு அந்நியரைப் போலத் தென்பட ஆரம்பித்தார்.*

*அவனுக்கு இந்த நிலை ஏற்படக் காரணமென்ன? கர்த்தரின் மகிமை அவருக்குள்ளேயே குறைய ஆரம்பித்ததனாலா? அல்லது கர்த்தரின் பரிசுத் தமும், அன்பும், விசுவாசமும் அவருக்குள் குறைய ஆரம்பித்ததாலா? இல்லவே இல்லை. கர்த்தரில் எந்தவிதமான மாற்றமும் ஏற்படவில்லை. பூரணமான கர்த்தரின் பூரணத்துவமானது அவர் ஒருபோதும் மாறுவ தில்லை என்பதுதான். தன்னுடைய குணாதிசயங்களுக்கு மாறாக அவரால் ஒரு போதும் நடக்க முடியாது. தான் செய்யும் அனைத்தையும் தன்னுடைய குணாதிசயத்துக்கு ஒத்தே அவரால் செய்ய முடியும். ஆகவே, மாற்றம் கர்த்தரில் ஏற்படாமல் ஆதாமிலேயே ஏற்பட்டது. ஆதாம், தான் கர்த்தர் மேல் கொண்டிருந்த அன்பை வேறு ஒன்றில் காட்ட ஆரம்பித்தான். அதை உணர்ந்த அவன் அவருடைய பிரசன்னத்தை விட்டு ஓடி மறைந்து அவரோடு இருந்த ஐக்கியத்தையும் துறக்க ஆரம்பித்தான். தேவனில் இருக்கும் தன்னுடைய அன்பு குறைய ஆரம்பிக்கின்றபோது ஒவ்வொரு விசுவாசியும் ஆதாமைப்போல அதை உணர ஆரம்பித்து கர்த்தரின் ஐக்கியத்தையும் இழக்க ஆரம்பிப்பார்கள். அவரைவிட்டு மறையத் தொடங்குவார்கள்; அவரைப் பற்றிய அவருடைய எண்ணங்கள் கறைபடிய ஆரம்பிக்கும்; அவருடைய செய்கைகளை தவறாகப் புரிந்துகொள்ள நேரிடும்; அவரில் இருக்க வேண்டிய பரிசுத்தமான அன்பு குன்றிவிடும். ஆனால், விசுவாசியின் இருதயம் சரியாக இருக்கும்போதும், அவனுடைய அன்பு அதிகரித்துக்காணப்படும்போது, கர்த்தரின் பூரணமான குணாதிசயங்களை அவன் உணர்ந்து அவரோடு ஐக்கியத்தில் வருகிறான்.*

*(2)* **தேவனின் அன்பு தணிந்துபோவதும், கர்த்தரை நேசிப்பதும் அதில் ஆனந்தமடைவதும் குறைவதுமட்டுமல்லாமல் அவரை நம்பிக்கையோடும், விசுவாசத்தோடும் அணுகுவதும் குறைந்துபோகும்.** - *தேவனுடைய பிள்ளைக்கு அவரில் இருக்கும் விசுவாசமும், இனிமையான நம்பிக்கையும் இல்லாமல் போகும். தத்தெடுக்கப்பட்ட பிள்ளையைப் போல ஆத்துமா சகலவிதமான தாழ்மைகளோடும், ஆர்வத்தோடும் அவருடைய மடியை நாடி ஓடிப்போகமல் தூரத்தில் தயங்கி நிற்க ஆரம்பிக்கும். அப்படியே அவரை நாடிப் போக ஆரம்பித்தாலும் அடிமையைப் போலத் தயங்கித் தயங்கி நடுக்கத்தோடு அவரை அணுக ஆரம்பிக்கும். அவரோடு அன்பிலும், ஐக்கியத்திலும் திளைத்திருந்த காலத்தில் இருந்த குழந்தைத்தனமான ஆவியும், கர்த்தரைவிட வேறு எதையும் நாடாத இதயமும், அவருடைய பிரசன்னத்தைப்போல பரிசுத்தமானதெதுவும் இல்லை என்ற எண்ணமும் அதிகளவுக்கு அவனைவிட்டு விலகிப் போயிருக்கும். அவநம்பிக்கை, நீதியான பயம், ஆவியின் அடிமைத்தனம் ஆகியவையே மறுபடியும் அவனை ஆள ஆரம்பிக்கும். இதெல்லாம் அவனில் தேவ அன்பு தணிய ஆரம்பித்ததனால் ஏற்பட்ட அடையாளங்களாக இருக்கும்.*

*(3)* **அத்தோடு, கர்த்தரின் செயல்களைத் தீவிரமாக ஆராய்ந்து பார்ப்பதும் குறைந்துபோகும்.** *- விசுவாசிக்கு கர்த்தர் மேல் அதிக அன்பிருக்கும்போது அவன் கர்த்தரின் செய்கைகள் அனைத்தையும் நியாயப்படுத்துகிறவனாக இருப்பான். அவருடைய செய்கைகளுக்கு மறுப்புக்கூறாமலும், குறை கூறாமலும் தாழ்மையோடு அவற்றிற்கு தன்னை ஒப்புக்கொடுத்து வாழ்வான். வாழ்க்கையில் எதிர்ப்புகளை அநுபவித்து சோதனைகளை எதிர்நோக்கும் போது தெய்வீக அன்பில் வளர்ந்து கொண்டிருக்கும் விசுவாசி, "கர்த்தர் என்னைத் தண்டித்திருக்கிறார், இருந்தாலும் அவர் தொடர்ந்து என்னுடைய விசுவாசமிக்க, அன்புள்ள தேவனே. என் பிதா நோகும்படி என்னைத் தண்டித்திருக்கிறார், இருந்தாலும் அவர் என் கருணையுள்ள, மென்மையான பிதாவே. நான் படும் இந்த வேதனைகளும், சோதனைகளும் அன்போடேயே என்னை அணுகியிருக்கின்றன. அன்பே இவற்றை நான் அநுபவிக்கும்படி அனுப்பி வைத்து தேவனிடத்தில் நான் இன்னும் அதிகமான அன்பை வைத்திருக்க என்னை ஊக்கப்படுத்த வந்திருக்கின்றன" என்பான். சோதனைகளை அனுபவிக்கும் நேரத்தில் அன்பின் குரலைக் கேட்கிறவன் ஆனந்தமானவன். அதுவே அவனுடைய துக்கப்படுகிற இருதயத்தைக் கர்த்தரிடத்தில் இட்டுச் செல்லும். ஆனால், தேவ அன்பு இருதயத்தில் தணிந்து போகிறபோது சோதனைகளை அநுபவிக்கின்ற விசுவாசி இவற்றிற்கு மாறான அநுபவத்தையே அடைவான்.*

*(4)* **கர்த்தரோடு தொடர்பு வைத்திருப்பதில் ஆர்வம் குன்றி, கிருபையின் சாதனங்களைப் பயன்படுத்துவது ஒருவரில் வெறும் கடமையாக மட்டும் அமைந்து, கர்த்தரோடு இருக்கும் ஐக்கியம் குறைந்து காணப்படுமானால் அவரில் கர்த்தரின் அன்பு தணிந்திருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட வேறு வலிமையான ஆதாரங்கள் எதுவும் அவசியமில்லை.** *- எப்போதுமே நமக்கு அதிக ஆனந்தத்தை அளிக்கும் ஒன்றை நாம் அதிக தீவிரத்தோடு நாடிப்போவதோடு அது இல்லாவிட்டால் அதற்காக ஏங்கவும் ஆரம்பிப்போம். நாம் நேசிக்கிற நண்பன் நம் பக்கத்தில் எப்போதும் இருக்க வேண்டும் என்று விரும்புவோம். அவனுடைய பிரசன்னம் நமக்கு ஆனந்தத்தை அளிப்பதோடு நமது இருதயம் அவனுடைய நட்பை நாடி ஓடும். அவன் பக்கத்தில் இல்லாமலிருப்பது சகலவிதமான ஆனந்தத்தையும் அழித்துப்போடும். இதேவிதமாகத்தான் கர்த்தருடைய அன்பைப் பற்றியும் நம்முடைய அநுபவம் இருக்கும். கர்த்தரை விசுவாசித்து அவருடைய மகிமையைத் தன்னுடைய வாழ்க்கையில் அறிந்து ஆவியின் வல்லமையையும், கர்த்தரின் பிரசன்னத்தில் ஆனந்ததையும் அடைந்தவர்களுக்கு அத்தகைய அநுபவத்தை இழக்கும்போது அதை உணராமல் இருக்க முடியாது. கிறிஸ்தவ விசுவாசிகளில் சிலர் கர்த்தருடைய ஐக்கியமில்லாமலும், அவருடைய தொடர்பு இல்லாமலும், தகப்பனோடு இருப்பதைப் போன்ற உறவை அவரோடு வைத்திராமலும் இருந்து வருகிறார்கள். அவர்கள் இந்த உலகத்தின் அம்சங்களில் அதிக ஆர்வம்காட்டி, அதன் கவலைகளைத் தங்களில் கொண்டு வாழ்ந்து வருகிறார்கள். அதனால், அவர்களுடைய ஆத்மீக ஆர்வங்கள் பாதிக்கப்பட்டுவிடுகின்றன. அவர்களுடைய உலக ஆசைகளோடு தொடர்புபடுத்திப் பார்க்கும்போது அவர்களுடைய தேவ*

*அன்பு பனிபோல் உறைந்து காணப்படுகின்றது. அவர்கள் வெறுமனே கிறிஸ்துவைப் பற்றி பேசுகிறவர்களாக மட்டும் இருந்து அவர்களுடைய இருதயங்களில் தேவ குமாரனின் அன்பின் ஒளி வீசாமல் இருக்கின்றது. கர்த்தர் அவர்களை சந்திப்பதை நிறுத்திவிடுகிறதோடு அவருடைய பிரசன்னத்தை அவர்களால் உணரவும் முடியாது. கர்த்தர் அவர்களோடு பேச மறுப்பதோடு அவருடைய மென்மையான குரலை அவர்களுடைய இருதயம் கேட்க முடியாமல் போகும். வாசகனே! நீ கிறிஸ்துவை விசுவாசிக் கிறவனா? இந்த மாதிரியான வாழக்கையை வாழ்வதை நிறுத்திவிடு. இது வறுமையான வாழ்க்கை; ஜிவனில்லாத வாழ்க்கை; உன்னுடைய விசுவாசத் தோடு தொடர்பில்லாத வாழ்க்கை; யாருடைய பெயரை நீ பயன்படுத்து கிறாயோ அவருக்கு எந்தவிதமான மகிமையையும் தராத வாழ்க்கை; நீ எதிர்நோக்கி இருக்கின்ற வாழ்க்கையோடு எந்தவிதத்திலும் தொடர்பில்லாத ஒரு வாழ்க்கை. விசுவாசியே! உன் இருதயத்தின் அன்பைப் பரிசோதித்துப் பார். எவருடைய இருதயத்தில் கர்த்தரின் அன்பு பெருகுகிறதோ, கர்த்த ரோடு அதிக நெருக்கம் ஏற்படுகிறதோ, அவரில் அதிக ஆனந்தத்தை அநுபவிக்கிறதோ அங்கேதான் இந்த உலகம் தரமுடியாத பெரும் ஆசீர்வாதங்களைக் காணலாம். விசுவாசி இத்தகைய ஆசீர்வாதங்களைத் தள்ளிவைத்து வாழ முடியாது. தன்னுடைய நல்ல நெருக்கமான நண்ரோடு இருக்கவேண்டிய ஐக்கியமில்லாமல் வாழ முடியாது.*

**(5) மென்மையான இருதயத்தோடு ஒருவர் வாழத்தவறி வருகிறார் என்றால் அவருடைய ஆத்துமா எந்த நிலையிலிருக்கிறது என்பதை விளக்க வேண்டிய அவசியமில்லை.** *-ஒரு விசுவாசி எதையும் ஆராய்ந்து பார்த்து தவறானதை விலக்கி வைத்து நடக்கும்போதும், நேர்மையாக வாழும்போதும், நேர்மையோடும், கவனத்தோடும், கர்த்தருக்கு முன் ஜெபத்தோடும் வாழும்போதும் அவன் மென்மையான இருதயத்தோடும், தாழ்மையோடும் வாழ்கிறான். ஏசாயா, "என் ஆயுசின் வருஷங்களெல்லாம் என் ஆத்துமா வின் கசப்பை நினைத்து நடந்துகொள்ளுவேன்" என்கிறார். (ஏசாயா 38:15). விசுவாசி விசுவாசத்தோடு வாழ்கிறபோதும், தன்னுடைய பிதாவுக்கு எதிராக எதையும் செய்வதற்கு நடுங்கி வாழ்கிறபோதும், தன்னுடைய நண்பரும் தேவனுமாகிய கர்த்தருக்கு பயந்து வாழ்கிறபோதும், பரிசுத்த ஆவியை துக்கப்படுத்துவதற்குப் பதிலாகத் தன்னுடைய வலது கண்ணைப் பிடுங்கத் தயாராக இருக்கும்போதும், கர்த்தருடைய கட்டளைகளையும், போதனைகளையும் பின்பற்றி அவற்றில் ஆனந்தமடையும்போதும் அவன் மென்மைான இருதயத்தோடு வாழ்கிறான் எனலாம். ஒரு விசுவாசியை இந்தவிதமாக பக்தியோடு வாழவைப்பது எது? அவன் தன்னுடைய இருதயத்தில் கர்த்தர் மேல் கொண்டிருக்கும் அன்புதான். அத்தகைய அன்பு அவனுடைய இருதயத்தில் தணிந்து காணப்படுமானால் எத்தகைய சோதனைகளையும், ஆத்மீக ஆபத்துக்களையும் அவன் எதிர்நோக்க வேண்டுமென்பதை ஒரு தடவை எண்ணிப் பாருங்கள்.*

**(6) கிறிஸ்து நம்முடைய கண்களுக்கு மகிமையுள்ளவராக தென்படாமலும், நம்முடைய இருதயத்துக்கு விலைமதிப்பற்றவராகத் தெரியாமலும் போனால் நம்முடைய இருதயத்தில் தேவ அன்பு தணிந்து வருகிறது என்றுதான் அர்த்தம்.**

*- இதைத் தவிர வேறு எதுவாக இருக்க முடியும்? நாம் இருதயத்தில் கிறிஸ்துவுக்காகக் கொண்டிருக்கின்ற நேசம் அவரைப் பற்றிய நம்முடைய எண்ணங்கள் அனைத்தையும் பாதிக்கும். நமக்காக சிந்தப்பட்ட பரிசுத்த இரத்தத்தை நாம் மகிமைப்படுத்தாமலும், நீதியில் கவனம் செலுத்தாமலும், கிறிஸ்துவின் சிலுவையை நித்தமும் சுமக்காமலும், அதிலிருந்து பாடங்களைக் கற்றுக்கொள்ளாமலும் இருப்போமானால் கிறிஸ்துவில் நமக்கிருக்க வேண்டிய அன்பு குறைந்துவருகிறது என்றுதான் அர்த்தம். பின்வரும் கேள்விக்கு ஒருவன் அளிக்கும் பதிலிலிருந்தே அவனுடைய விசுவாசத்தின் வைராக்கியத்தை நாம் அறிந்துகொள்ள முடியும். கிறிஸ்துவைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்? (மத்தேயு 22:24) என்பதே அந்தக் கேள்வி. அவருக்காகவும், அவர் மூலமும் அவன் வாழ்கிறானா? கிறிஸ்துவின் நாமம் அவனுக்கு ஆனந்தத்தை அளிக்கிறதா? அவருடைய சிலுவையை அவன் மகிமைப்படுத்துகிறானா? அவருடைய பணியில் அவன் ஆறுதலையும், ஓய்வையும் அடைகிறானா? இந்த ஆசீர்வாதங்களை அவன் அநுபவிக்கிறவனாக இருந்தால் அவனில் கிறிஸ்துவின் நேசம் கொடிகட்டிப் பறக்கிறது என்றுதான் கூற வேண்டும்.*

(7) **கிறிஸ்துவை நேசிக்கும் சக சகோதரர்கள் மேல் நம்முடைய அன்பு குறைவடைந்து இருக்குமானால் தேவ அன்பு நம்மில் தணிந்திருக்கிறது என்பதற்கு அது மிகவும் வலிமையான ஆதாரமாக அமைகிறது**. - *கர்த்தரை நாம் தீவிரமாக, தூய்மையான உள்ளத்தோடு நேசிப்போமானால் அவருடைய சாடை காணப்படுகின்ற எதையும் நாம் மெய்யாக நேசிப்போம். அவருடைய சாடை அதில் மங்களாகத் தெரிந்தாலும், அதிலிருக்கும் எல்லாமே நமக்கு ஏற்புடையதாக இல்லாமல் இருந்தாலும், பரிசுத்த ஆவியானவரின் கைத்திறத்தை அதில் கண்டு கர்த்தரைப் போலவே அதை நாம் நேசிக்க ஆரம்பிப்போம். தேவ சாயலுடைய எவராக இருந்தாலும் அவர்கள் எந்த சபையைச் சேர்ந்தவர்கள், எத்தகைய நிறத்தைக் கொண்டவர்கள், எத்தகைய தகுதியுடையவர்கள் என்றெல்லாம் கேள்விகள் கேட்டுக்கொண்டிராமல் கர்த்தரை நேசிக்கும் ஆத்துமாக்களை அன்போடு அரவணைப்போம். கிறிஸ்துவுக்காக அவர்களை நாம் நம்முடைய இருதயத்தில் ஏற்றுக்கொள் கிறோம்.*

*ஆனால், நம்முடைய கட்சியைச் சேரவில்லை என்பதற்காக சகோதரர் களைப் பார்க்கும்போது நம்முடைய இருதயம் துடிக்க மறுத்தும், கண்களை மேகங்கள் மூட ஆரம்பித்தும், கட்சிப் பற்றும், குறுகிய மனப்பான்மையும், சுயநலமும் நம்முடைய இருதயத்தைக் கவ்விச் சீரழிக்கும்போது அங்கே தேவனுடைய அன்பு தணிந்து வருகிறது என்பது சொல்லாமே தெரிய வேண்டும். இதுபற்றி கர்த்தரின் வேதம் தெளிவாகவே விளக்குகிறது: "தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோத ரனைப் பகைத்தால் அவன் பொய்யன்; தான் கண்ட சகோதரனிடத்தில் அன்பு கூறாமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்பு கூறுவான்? தேவனிடத்தில் அன்பு கூறுகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்பு கூறவேண்டுமென்கிற இந்தக் கற்பனையை அவராலே பெற்றிருக் கிறோம்." (1 யோவான் 4:20-21). "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்*

*களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்கள் என்று எல்லோரும் அறிந்துகொள்வார்கள் என்றார்." (யோவான் 13:35). வெளிப்படையாக கண்களுக்குத் தெரிகிறவிதமாக அவருடைய சாடையைக் கொண்டிருக்கிறவர்களை நேசிக்க மறுத்தால் கண்களுக்குத் தெரியாமலிருக்கின்ற, அந்தச் சாடையின் மூலத்தை நாம் எப்படி நேசிக்கப் போகிறோம்?*

**(8) தேவனில் நம்முடைய அன்பு தணிந்துவருகிறபோது, அவருடைய இராஜ்யத்துக்குரிய காரியங்களில் நமது ஆர்வமும் அக்கறையும் குறைந்துபோதும். ஒன்று மற்றதைத் தவறாமல் தொடரும்.** *- தேவனுடைய அன்பு தணிந்துவருகிற இருதயத்தில் அவருடைய இராஜ்யத்துக்கான ஆர்வம் தொடராது என்று நாம் சொல்லமுடியாது. வெட்கப்படும்விதமாக பலரில் அத்தகைய ஆர்வம் தொடர்ந்து வருகிறதை நாம் பார்க்க முடியும். ஆனால், தேவ அன்பு ஆத்துமாக்களில் தணிந்து காணப்படுகிறபோது அவர்களின் இருதயத்தில் தேவ இராஜ்யத்தின் வளர்ச்சிக்கான மெய்யான ஆத்மீக ரீதியிலான, ஜீவனுள்ள ஆர்வமும், அவருடைய சத்தியத்தில் பேரார்வமும், சபையில் ஆழமான பரிசுத்தமும், ஆத்தும ஆதாயமும் நிச்சயம் தணிந்து போகும்.*

**[ஒக்டேவியஸ் வின்ஸ்லோ (Octavius Winslow 1808–1878): பத்தொன்பதாம் நூற்றாண்டின் மிகச்சிறந்த போதகர்களில் ஒருவர். நாற்பது நூல்களுக்கு மேலாக அவர் படைத்திருக்கிறார். அவற்றின் மூலம் நடைமுறைக் கிறிஸ்தவ வாழ்க்கைக்கு அவசியமான கர்த்தரின் சத்தியங்களை அவர் விளக்கியிருக்கிறார். இங்கிலாந்தில் பாத் என்ற இடத்தில் அவருடைய கல்லறை இருக்கிறது.]**

# பிரசங்கம்

"சுவிசேஷத்தின் வல்லமை பிரசங்கியினுடைய பேச்சுத்திறத்தில் தங்கியிருக்கவில்லை; அப்படியிருக்குமானால் பிரசங்கியே ஆத்துமாக்களை இரட்சிக்கிறவனாகிவிடுவான். அது பிரசங்கியினுடைய படிப்புத்திறமையிலும் தங்கியிருக்கவில்லை; அப்படியிருக்குமானால் இரட்சிப்பு மனித ஞானத்தினால் ஏற்படுகிறதாகிவிடும். நம்முடைய நாக்கு அழுகிப்போகிறவரை நாம் பிரசங்கித்தாலும், நம்முடைய சுவாசப்பை வெடித்து சாகிறவரை நாம் பிரசங்கித்தாலும் வேதவார்த்தைகளைப் பயன்படுத்தி பரிசுத்த ஆவியானவர் பிரசங்கத்தைப் பயன்படுத்தினாலன்றி ஒரு ஆத்துமாவும் இரட்சிப்பை அடைய முடியாது."

**– சார்ள்ஸ் ஸ்பர்ஜன் –**

# ஆத்மீகப் பின்வாங்குதல்

## வில்லியம் பிளமர் (1802-1880)

*கிறிஸ்தவ வாழ்க்கையில் பின்வாங்கிப் போவதை நாம் சாதாரணமாக நினைத்துவிடக்கூடாது. அப்படிப் பின்வாங்கிப் போவது என்பது நிதர்சனமான உண்மை. அநேகர் இதுபற்றிக் கவலைப்படுவதில்லை. பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்துவதும், கர்த்தருக்கு எதிராகப் போவதும் வெகு சாதாரணமானதொன்றாக அவர்கள் எண்ணுகிறார்கள் என்பதை அவர்களுடைய வார்த்தைகளும் செயல்களும் வெளிப்படுத்து கின்றன. கர்த்தருக்கு எதிராக இருந்துவிடப்போகிறோமே என்ற பயம் அவர்களுக்கு இல்லை. அந்தப் பயம் அவர்களைக் கட்டுப்படுத்துவதாகத் தெரியவில்லை. சிறு பாவமும் நமது சிந்தனையில் உருவாகிவிட்டால் அதைத் தொலைத்து விடுவதற்கு நாம் முயற்சி எடுக்காவிட்டால் நாம் பெரிய ஆபத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறோம். கர்த்தரை விட்டு விலகிப்போவது இருட்டை நோக்கிப் போவதுபோலாகும்.*

*(1)* **பின்வாங்குதல் என்றால் என்ன என்பதை முதலில் பார்ப்போம்:** *இது மிகவும் முக்கியமானதாகும். நடைமுறைக் கிறிஸ்தவ வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் போலவே இதுவும் மிக அக்கறையோடும், எச்சரிக்கை யோடும், பாரபட்சமில்லாமலும் கவனிக்க வேண்டிய அம்சமாகும். தன்னை ஏமாற்றிக்கொள்ள விரும்புகிறவர்கள் மட்டுமே இதில் அக்கறையில்லாமல் இருப்பார்கள்.*

**(அ) ஒருவர் தான் ஆத்மீக வாழ்க்கையில் பின்வாங்கியிருக்கவில்லை என்று நினைப்பது அவர் பின்வாங்கவில்லை என்பதற்கான தகுந்த ஆதாரமல்ல.**

*வாழ்க்கையில் பின்வாங்கியிருக்கும் மெய்யான பக்கிவிருத்தியுள்ள ஒருவர் தன்னைப் பெரிதாக எண்ணிக்கொள்ளவும், மதிக்கவும் பயப் படுவார். ஆனால், அநேகர் தங்களுடைய பாவத்தைப் பற்றி உணராமலேயே மிகவும் மோசமான விதத்தில் கர்த்தரைவிட்டு விலகிப் போகிறார்கள். மிகவும் வருந்த வேண்டிய ஒரு உண்மையென்னவென்றால், எல்லாப் பாவங்களுமே நமது சிந்தனையைக் குருடாக்கி இருதயத்தைக் கடினப் படுத்திவிடுகின்றன. எந்தவொரு மனிதனுடைய பாவத்தையும் உணரச் செய்வது மிகவும் கடினமான காரியம். வாயில் இருந்து துப்பிவிட வேண்டிய நிலைமையில் இருந்த ஒரு சபையைப் பற்றி நாம் வேதத்தில் வாசிக்கிறோம். அது குளிராகவோ, அனலாகவோ இல்லாமல் இருந்தது. இருந்தபோதும் தன்னுடைய நிலைமையைப் பற்றிய எந்தவிதக் கவலையோ உணர்வோ இல்லாமல், "நான் செல்வந்தனாக இருக்கிறேன், என் செல்வம் செழிக்கிறது, எனக்குத் தேவைப்படுவது ஒன்றுமேயில்லை" என்று அந்த சபை சொல்லிக்கொண்டிருந்தது. தான் நிர்ப்பாக்கிய நிலையிலும், பரிதபிக்*

*கப்பட்ட நிலையிலும், தரித்திரனாகவும், குருடனாகவும், நிர்வாணியாகவும் இருப்பதை அந்தச் சபை உணரவில்லை. (வெளி. 3:17).*

**(ஆ) வெளிப்படையாக பாவம் செய்வதில் இருந்து கிருபையினால் தடுத்து வைக்கப்பட்டிருப்பதால் பலர் தங்கள் வாழ்க்கையில் ஏற்கனவே பின்வாங்கிப் போயிருப்பதை ஒத்துக்கொள்வதில்லை.**

*ஆத்தமாக்களறிய அவர்கள் பெரும் பாவத்தில் விழுந்திருந்தால் அதுபற்றி முகங்கோணி வெட்கப்படுவார்கள். தங்களுடைய பாவத்திற்காக கர்த்தரிடமும், ஆத்துமாக்களிடமும் மன்றாடுவார்கள். ஆனால், எல்லாமே இரகசியமாக இருக்கின்றன. அவர்கள் தங்களுடைய இருதயத்தில் பின் வாங்கிப் போயிருக்கிறார்கள். எந்தவொரு மனிதனும் அவர்களுடைய ஆத்மீகக் கேட்டை அறிந்திருக்கவில்லை. அவர்கள் பக்திவிருத்தி குன்றி யிருக்கிறார்கள் என்றும், பாவத்தில் இருக்கிறார்கள் என்றும் எவரும் அவர்களைக் குற்றஞ்சாட்ட முடியாது. எல்லாமே நல்லபடியாக நடந்து வருகிறது என்று அவர்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் பெருந்தவறு செய்கிறார்கள். எல்லாமே மனிதர்களுக்கு முன் வெகு சீக்கிரம் வந்துவிடும். தாவீதின் வாழ்க்கையில் அதுவே நடந்தது. அவனைப் பார்த்து கர்த்தர் சொன்னார், "நீ இரகசியமாகச் செய்தாய்: ஆனால், இதை நான் இஸ்ரவேல் மக்கள் முன்பாகவும், சூரியனுக்கு முன்பாகவும் செய்வேன்" (2 சாமுவேல் 12:12).*

**(இ) அத்தோடு, கர்த்தரிடம் இருந்து விலகிப் பின்வாங்கிப்போவது மிகவும் சுலபம் என்பதை நாம் உணர வேண்டும்.**

*தாயின் வயிற்றில் இருக்கும்போதே நாம் பொய்களைச் சொல்லி விலகிப் போயிருக்கிறோம். (சங்கீதம் 53:3). தீப்பொறி உயரெழுவதைப் போல பாவத்தைச் செய்வது நமக்கு இயற்கையானது. பரலோகத்தைப் நோக்கிப் போகிற நம் வாழ்க்கையில் காற்றும், அலைகளும் நமக்கு எதிராக இருக்கின்றன. அவற்றை எதிர்த்து நிற்க நாம் எந்தவொரு முயற்சியும் எடுக்காவிட்டால் அவை நம்மைத் தூக்கிச் சென்றுவிடும். அவற்றைத் தடுக்கும் எண்ணமில்லாமலும், எந்த முயற்சியும் எடுக்காமலும் நாம் நரகத்தை நோக்கிப் போய்விடலாம்.*

**(2) கிறிஸ்தவ வாழ்க்கையில் சகலவிதமான பின்வாங்குதல்களும் நம்முடைய தியான வாழ்க்கையில் நாம் தவறிப்போகும்போதே தோன்றுகின்றன.**

*தியானம் செய்தல், சுயபரிசோதனை, வேதத்தை வாசித்தல், கர்த்தரைத் துதித்தல், ஜெபம் செய்தல் ஆகியவையே நம்முடைய தியான வாழ்க்கையை மேன்மையடையச் செய்யும் கிருபையின் சாதனங்களாகும். கர்த்தரோடு நாம் நெருங்கி உறவாடும்போது இந்தக் கடமைகளை நாம் தொடர்ச்சி யாகவும், உயிருள்ளவிதத்திலும் பின்பற்ற முடிகிறது. அவற்றை செய்யத் தயங்கி, குறைத்துவிடுகிறபோதே நம் ஆத்மீக வாழ்க்கை பாதிக்கப்பட்டிருப் பதற்கான முதல் அடையாளங்கள் தலைதூக்க ஆரம்பிக்கின்றன. இந்த அடையாங்கள் நமக்கு எச்சரிக்கையாக இருக்கவேண்டும். சிலவேளைகளில் அவை எச்சரிக்கையாக அமைவதால் எதிரி நம்மை நிரந்தரமாக வெற்றி கொள்ள முடியாமல் போகிறது. ஆனால், பெரும்பாலும் நமது ஆத்துமா எச்சரிக்கையாக இருக்கத் தவறிவிடுவதால் பொதுக்கடமைகளில் நாம்*

*அதிக கவனம் செலுத்தி தியான வாழ்க்கையில் செய்ய வேண்டியவற்றை செய்யத் தவறிவிடுகிறோம். மெய்க் கிறிஸ்தவன் தன்னுடைய வாழ்க்கையில் தனி ஜெபங்களைச் செய்யாமல் வாழ முடியாது. ஆனால், அவன் தன் வாழ்க்கையில் தியான வாழ்க்கைக்குரிய சாதனங்களைத் தொடர்ச்சியாக பின்பற்றாமல் இருந்துவிடக்கூடும். பக்திவிருத்திக்குரிய தியானம் குறைவாக இருந்துவிடலாம். வேதம் அவனுடைய ஆத்துமாவுக்கு தேனாகவும், தேன் கூடாகவும் இருக்கத் தவறிவிடலாம். திறக்கப்படாமல் இரகசியமாக வைக்கப்பட்டிருக்கும் கேடுகளை திறக்கக்கூடிய சுயபரிசோதனை அவன் வாழ்க்கையில் மிகவும் கடினமான பணியாக அமைந்துவிடலாம். கர்த்தருக்கு நன்றி கூறுவதும், துதிப்பதும் தவிர்க்கப்பட்டு அவை அவனுக்கு அந்நியமாகப்படலாம். இரவில் அவனுடைய இருதயத்தைப் பாடிக் களிக்கும்படிச் செய்தவர் அதை நிம்மதியிழக்கச் செய்யலாம். ஜெபம் செய்வதை அவன் தனக்கு ஆனந்தமளிக்கும் பெரும் ஆசீர்வாதமாக எண்ணாமல் செய்யவேண்டியதொரு கடமையாக மட்டும் எண்ண ஆரம்பிக்கலாம். பத்திவிருத்தி அவனுடைய வாழ்க்கையில் தலைதூக்கி நின்றபோது தொடர்ச்சியாகவும், அன்றாட நடவடிக்கையாகவும் மட்டும் தியானவாழ்க்கை அமைந்திருப்பது போதாததாக இருந்தது. வெறும் கடமையாகக் கருதி அவற்றை செய்கிறவன் வாழ்க்கையில் பக்திவிருத்தி தலை தூக்கி நிற்க முடியாது. தொடர்ச்சியாக அவனுடைய வாழ்க்கையில் தியானம் அமைந்திராவிட்டால் இருந்திருந்தே அவனுடைய ஆத்துமா சுயபரிசோதனையில் ஈடுபட்டு, பக்திக்கான காரியங்களை சிந்தித்து வந்திருக்கும்: அது கொஞ்சமாவது கர்த்தரைத் துதித்திருக்கும். தொடர்ச்சியாக தியானவாழ்க்கை ஒருவனின் வாழ்க்கையில் அமைகிறபோது அவன் தன் இருப்பிடத்தில் இல்லாமல் வேறு இடத்தில் இருந்தாலும் அவனுடைய இருதயம் கர்த்தரை நோக்கிக் கதறும். தன்னுடைய உலகக் கடமைகளில் அவன் ஈடுபட்டிருக்கும்போதும் அவனுடைய இருதயம் கர்த்தரின் கிருபையை நாடி நிற்கும்.*

**(அ) ஒருவனுடைய வாழ்க்கையில் ஆத்துமப் பின்வாங்குதல் நிகழும்போது ஆத்துமப் பணிகள் அவனுடைய அன்றாட வாழ்க்கையில் இருந்து சிறிது சிறிதாக அகன்றுவிடும்.**

*அந்தப் பணிகளை அவன் ஒருபுறம் ஒதுக்கி வைக்கிறான், அல்லா விட்டால் ஒவ்வொரு மணி நேரமும் அவற்றை நெருங்குவதைத் தவிர்க்கிறான். கர்த்தருக்கு செய்ய வேண்டியதை செய்துவிட்டோம் என்று சமாதானம் கூறி தன்னுடைய மனச்சாட்சியை அமைதிப்படுத்திவிட்டு உலகக் காரியங்களில் அதிக கவனம் செலுத்த ஆரம்பிக்கிறான். அவன் கர்த்தரைத் தொடர்ந்து பின்பற்றினாலும் முழு இருதயததோடு அதைச் செய்யவில்லை. அங்கேயே மிகவும் வருந்தவேண்டிய ஆத்மீகப் பின்வாங்குதல் ஆரம்பமாகிறது. அத்தோடு பாவமும் அவனுடைய வாழ்க்கையில் அதிகரிக்கிறது. பாவத்தால் சிறைபிடிக்கப்பட்டு அவன் தடுமாற ஆரம்பிக்கிறான். அவனுடைய ஆத்துமா ஏற்கனவே வலையில் அகப்பட்டுவிட்டது. இதையெல்லாம் வாசித்துவிட்டு எச்சரிக்கையடைந்து தன்னை திருத்திக் கொண்டு மறுபடியும் தன்னுடைய ஆத்மீகக் கடமைகளை ஆர்வத்துடனும்,*

*தேவ பயத்துடனும் செய்ய ஆரம்பிக்கிறவன் ஆசீர்வதிக்கப்படுவான். அவன் மறுபடியும் கிறிஸ்துவுக்குள் புதுப்பிக்கப்பட்டு நல்ல மனச்சாட்சியுடனும், சமாதானத்துடனும் கர்த்தரின் முகமலர்ச்சியைத் தன் வாழ்க்கையில் அநுபவிக்க ஆரம்பிப்பான். சிலவேளைகளில் பின்வாங்கிப் போயிருக் கிறவனில் இது நிகழ்கிறது. அப்படி வாழ்க்கிற ஒவ்வொருவருடைய வாழ்க்கையில் இது நிகழ்வது அவசியம். ஆனால், பாவம் இப்படி நடந்து விடாதபடி அவர்களில் வலிமையடைந்து விடுகிறது. பின்வாங்குதலுக் குள்ளாகியிருக்கிறவர்கள் ஊக்கத்தோடு பாவத்தை செய்ய ஆரம்பிக்கிறார் கள்.*

**(3) ஆத்துமப் பின்வாங்குதலின் அடுத்த நடவடிக்கையாக ஒருவன் குடும்ப ஆராதனையையும், பொது ஆராதனையையும் தன் வாழ்க்கையில் தவிர்த்துக் கொள்ளுகிறான்.**

*தனிப்பட்ட தியானவாழ்க்கையை நிரந்தரமாக ஆனந்தத்தோடு நடத்திவராதவர்கள் குடும்ப ஜெபத்தையும், பொது ஆராதனையையும் நிரந்தரமாக செய்வார்கள் என்று சொல்ல முடியாது. போலித்தனம் ஒருவனின் வாழ்க்கையில் இந்தளவுக்குப் போகாது. ஆத்துமாக்கள் தங்களுடைய இருதயம் மோசமாகிக் கொண்டுவருவதால் அதற்கேற்றவாறு குடும்ப ஜெபத்தையும், பொது ஜெபங்களையும் தவிர்த்துக்கொள்ளும் சோதனைக்குள்ளாகிறார்கள். உயிர்த்துடிப்போடு இயங்கிக் கொண்டிருக்கும் ஒரு கிறிஸ்தவனை நாடி பிசாசு வந்தபோதும் அவனைப் பொறுத்தவரை யில் அது ஒரு பொருட்டே அல்ல. பிசாசின் மாய்மாலங்கள் அவனை ஒன்றும் செய்ய முடியாது. ஆனால், ஆத்தும காரியங்களில் அசட்டையாக இருந்து வருகிறவனை பிசாசு தைரியத்தோடு அணுகுவான். அவன் பிசாசின் பேச்சுக்கு இடங்கொடுத்து அதன் வழியில் சரிவான். அதன் காரணமாக குடும்ப ஜெபமாகிய கட்டிடத்தின் சுவர்களுக்கு ஆபத்து ஏற்பட்டு, ஜெபத்துக்குக் கூடிவந்த சிறு கூட்டம் இனிக்கூடிவராமல் போய்விடும். மிகவும் வருந்தவேண்டிய ஒரு நிலை இது. கர்த்தர் மட்டுமே ஒருவனை இத்தகைய மோசமான பின்வாங்குதலில் இருந்து காப்பாற்ற முடியும்.*

**(அ) இந்த நிலைமையில் ஒருவன் வெகுவிரைவிலேயே இருதயத்தில் குற்றவுணர்வடைந்து, நிம்மதியிழக்க நேரிடும்.**

*ஆத்தும வாழ்க்கையில் பின்வாங்குதலுக்குள்ளாகி இருக்கும் ஒருவன் தன்னுடைய மனச்சாட்சியை அடக்கவும், மற்றவர்கள் முன் நல்லவன் போல் நடந்துகொள்ளவும் பொது வாழ்க்கையில் கட்டுப்பாட்டோடு நடப்பதுபோல் நடந்துகொள்ளவும், நேரத்தோடு காரியங்களை செய்யவும் முற்படுவான். பொது ஆராதனையில் அவன் கலந்துகொள்ளாமல் இருக்க மாட்டான். ஆத்மீக காரியங்கள் சிலவற்றில் தீவிர ஆர்வம் காட்டவும் தவறமாட்டான். அல்லது தானறிந்துகொண்டிருக்கிற சத்தியத்தை வற்புறுத்திப் பேச முயற்சி செய்வான். அல்லது நடைமுறைக் கிறிஸ்தவ வாழ்க்கையைப் பற்றி பேசமுயல்வான். அப்படிப் பேசினால் அது தனக்குள் நல்ல உணர்வுகள் இருக்கின்றன என்பதற்கான அடையாளம் என்ற தவறான எண்ணத்தைத் தனக்குள் உருவாக்கிக் கொள்கிறான். தன்னில்*

*இருக்கும் கேட்டை உணர்ந்துகொள்ளாத குருடனாக அவன் இப்போது மாறியிருக்கிறான். இந்தளவுக்கு அவன் வந்திருந்தால், ஒருகாலத்தில் அவனுக்கு எந்தத் தடையும் ஏற்படுத்தியிராத விஷயங்கள் வெகு விரைவிலேயே அவன் திருச்சபைக்கு வராமல் இருக்கச் செய்துவிடும். வெகுவிரைவிலேயே சத்தியத்தின்மீதும், கிறிஸ்தவ வாழ்க்கை மீதும் புறத்தில் அவன் காட்டிவந்த ஆர்வங்கள் அவனை பலவீனனாகவும், கோபக்கார னாகவும், தவறான விஷயங்களுக்கு வாதாடுகிறவனாகவும் காட்டிக் கொடுக்கும். இப்போது அவனுடைய இருதயம் மெய்க்கிறிஸ்தவத்திற்கு புறம்பான காரியங்களில் முழுமையாக கவனம் செலுத்த ஆரம்பித்து விட்டது. அவன் மறுபடியும் பழைய நிலைக்கு வருவதை இந்த நிலையில் எதிர்பார்ப்பது வீண். நம்மிலிருக்கும் சகலவிதமான நேர்மையின்மையும் பிசாசின் கரத்தில் இருந்து நாம் விடுபடுவதற்கு உதவாத எதிரிகளாகும்.*

**(ஆ) இந்த நிலைமையில் பின்வாங்குதலுக்குளளாகி இருக்கும் ஆத்துமா ஆத்தும பணிகளையும், கிருபையின் சாதனங்களையும் பிரயோஜனமானவைகளாகக் கருதத் தவறும்.**

*பின்வாங்குதலுக்குள்ளாகி இருக்கும் ஆத்துமா இனி வேதம் வாசிப் பதையும், ஜெபிப்பதையும், பிரசங்கங்களைக் கேட்பதையும் ஏன், திருவிருந் தில் பங்குகொள்ளுவதையும்கூட தவிர்த்துக்கொள்ளும். இனி தாழ்மையைத் துறந்து, பரிசுத்தத்திற்கான வழிகளைத் துறந்து, ஆத்மீக தாகத்தை இழந்து, சோதனைகளை வெற்றிகொள்ளும் மனப்பாங்கையும் இழந்து நிற்கும். சிலவேளைகளில் இப்படி வாழ்ந்து வாழ்க்கையில் வெற்றி அடைகிறேன் என்று அந்த ஆத்துமா எண்ணிக்கொண்டாலும் அதன் நடவடிக்கைகள் அது முழுத்தொல்வியையே அடைந்துவருகிறது என்பதைத் தெளிவாக உணர்த்தும். இந்தமுறையில் வாழ்கிறவனுடைய எதிர்பார்ப்புகள் அவனை ஏமாற்றிவிடுகின்றன. அவன் "நியாயத்துக்கு காத்திருப்பான், ஆனால், அதைக் காணமாட்டான். இரட்சிப்புக் காத்திருப்பான். ஆனால், அது அவனுக்குத் தூரமாயிருக்கும்" (ஏசாயா 59:11). அந்த நிலைமையில் அவன், "தேவனை சேவிப்பது விருதா, அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளு கிறதினாலும், சேனைகளின் கர்தருக்கு முன்பாகத் துக்கித்து நடக்கிறதினா லும் என்ன பிரயோஜனம்?" என்று கேட்பான் (மல்கியா 3:14). அத்தோடு அவன், "தாகமாயிருக்கிறவன் தான் குடிக்கிறதாகக் கனவு கண்டும், விழிக்கும்போது அவன் விடாய்த்துத் தாகத்தோடிருக்கிறது போலவும்" இருப்பான் (ஏசாயா 29:8). அவனுடைய ஆத்துமா இந்த நிலையிலேயே இருக்கும். சிலவேளைகளில் கிருபையின் சாதனங்கள் அவனுடைய கண்களுக்கு இனிமையாகத் தென்படும். ஆனால், அவற்றை அவன் பயன்படுத்துகிறபோது அவை அவனுக்கு தீர்க்கதரிசி தன் வாயிலிட்டு சுவைத்த புத்தகச் சுருள் அவனுக்கு கசப்பாயிருந்ததுபோல இருக்கும். ஆகவே, பாவம் விலைமதிப்பற்ற ஆசீர்வாதங்களையும் நமக்குக் கசப்பான தாக்கிவிடும். பின்வாங்குதலுக்குள்ளானவர்கள் கர்த்தரை நாடும்போது அவர்கள் இருதயத்தில் மிகவும் கசப்பை அநுபவிப்பார்கள். அதற்கு அவர்கள் தயாராக இருப்பதில்லை.*

**(இ) ஆத்துமாவில் இவ்வாறாக பக்திவிருத்தி மரிக்கும்போது அன்பு தணிந்துபோய்**

**எதையும் குறைகூறிக் குற்றஞ்சாட்டும் வழக்கம் அதிகரிக்கும்.**

*பின்வாங்குதலுக்குள்ளாகியிருக்கிறவன் சக விசுவாசிகளின் நற்சிந்தனைகளையும், தூய்மையான எண்ணங்களையும் தவறான கண்ணோட்டத்தோடு பார்ப்பான். மற்றவர்கள் மேல் குறைகூறுவதில் அவன் முன்நிற்பான். சிலவேளைகளில் சக விசுவாசிகளின் செய்கைகளை கடுமையாக விமர்சனம் செய்வான். தன்னில் மிகக் குறைந்தளவே காணபடுகின்ற பக்தியைப் பற்றிப் பெருமையாகப் பேசி மற்றவர்களிடம் அது இல்லை என்று வியந்து கூறுவான். கிறிஸ்தவர்களின் நடவடிக்கைகளில் குறைகூறுவதில் முன் நிற்கும் அவன் தன்னில் இருக்கும் கேடான குறைகளைக் காண மறுப்பான். அவனுடைய இருதயம் விரைந்து செயல்பட்டு மற்றவர்களுடைய குறைகளை மறக்க முற்படாது. மற்றவர்கள் மேல் கருணை காட்ட முற்படாத அவன் பாவிகளை இன்னும் மோசமாகவே பார்ப்பான். பாவிகளை வருந்தி அழைப்பதைவிடக் குறைகூறியும், அன்பு காட்டுவதைவிட அறுவறுத்தும் நடந்துகொள்வான். அவனைக் குறித்து "அவன் கேடான சிந்தனையுள்ளவனல்ல" என்றும் "இரக்கமானவன்" என்றும் (1 கொரி. 13:4, 5) சொல்ல முடியாது.*

**(4) வெகுவிரைவிலேயே பின்வாங்குதலுக்குள்ளானவன் பிரயோஜனமற்றவன் என்றும், தன்னுடைய திட்டங்களிலும், பேச்சிலும் சுத்தமற்றவன் என்றும் நீங்கள் கண்டுகொள்வீர்கள்.**

*அவன் பிரயோஜனமில்லாதவர்களின் சகவாசத்தை நாடுவான். பிரயோஜனமில்லாத நூல்களை வாசிக்க ஆரம்பிப்பான். தன்னுடைய ஆத்துமாவுக்கு உதவுகிறவற்றையல்லாமல் தன்னைக் குசிப்படுத்துகிறவைகளையே நாடி நிற்பான். தன்னுடைய ஆசையைத் தணிப்பவற்றையே நாடிப்போவான். அவன் ஆவியில் உயிர்த்துடிப்போடிருந்த காலத்தில் அவனுடைய பேச்சு மற்றவர்களுக்கு பிரயோஜனமுள்ளதாக ஆவிக்குரியதாக இருந்தது. இப்போது ஆவிக்குரியவைகளைவிட வேறு எதையும் பேசுவதற்கு அவன் தயாராக இருப்பான். தன்னுடைய உணர்ச்சிகளுக்கு ஏற்ற பேச்சுக்களையே நாடுவான். ஆவிக்குரிய சம்பாஷனை அவனுக்கு உயிரூட்டுவதாக இருக்காது. இருந்தபோதும் கிறிஸ்தவர்களின் சகவாசத்தை அவன் முற்றாக நிறுத்திக்கொள்ள மாட்டான். அதேநேரம், முட்டாள்களையும், கேலி பேசுகிறவர்களையும் அவன் தவிர்க்கவும் முயலமாட்டான். ஒரு காலத்தில் அவனுடைய இருதயத்துக்கு ஆனந்தத்தை அளித்த சத்துள்ள போதனைகளைவிட காதுக்கு இனிமையூட்டும் வெறும் கேலிப்பேச்சுக்கு அவனுடைய இருதயம் இடங்கொடுக்கும். முன்பிருந்ததுபோல் வேதம் அவனுடைய ஆவியை உயிர்ப்பிக்காது. அவனுடைய பக்திவிருத்தியுள்ள நண்பர்கள் அவனுடைய நிலைமையைப் பார்த்து இரகசியமாக அவனுக்காகக் கண்ணீர் வடிப்பார்கள்.*

**(அ) இந்த நிலைமையில் அவன் கிறிஸ்துவை மகிமைப்படுத்துவதை தன்னுடைய வாழ்க்கையில் முக்கிய கடமையாக எண்ணாமல் அவரை சட்டைசெய்யாமல் இருந்துவிடுவான்.**

*ஒரு காலத்தில் கிறிஸ்துவை விட்டு விலகிப் போவது அவனுடைய இருதயத்தில் கசப்பை ஏற்படுத்திக் கண்ணீர் சொட்ட வைத்தது. இப்போது*

அது அவனுக்கு ஒரு பொருட்டாகத் தெரிவதில்லை. இப்போது அவன் கிறிஸ்துவைக் கேவலப்படுத்தாவிட்டாலும், ஓய்வு நாளை அசிங்கப்படுத்தா விட்டாலும், வார்த்தையை உதறித்தள்ளாவிட்டாலும் மற்றவர்கள் அத்தகைய பாவச் செயல்களைச் செய்கிறபோது அது அவனுடைய இருதயத்தில் வலியை ஏற்படுத்துவதில்லை. மற்றவர்கள் பாவத்தில் விழுகிறபோது அவனுடைய உள்ளத்தில் ஆவி உறுத்தப்படுவதில்லை. யோசேப்புவின் துன்பத்தைக் கண்டு அவன் வருதப்படுவதில்லை. "கர்த்தாவே! உம்முடைய பிள்ளைகளைகளைக் கரை சேரும்" (யோவேல் 2:17) என்று அவன் அவருடைய மக்களுக்காக கதறுவதில்லை.

**(ஆ) அத்தோடு பாவிகள் மனந்திரும்புவதையும், சத்தியம் பரவுவதையும், சுவிசேஷ ஊழியங்கள் வளர்ந்துவருவதையும் கண்டு பேரானந்தம் அடையத் தவறுவான்.**

ஒரு காலத்தில் கிறிஸ்தவத்தின் வளர்ச்சியைக் கண்டு அவனுடைய இருதயம் ஆனந்தத்தில் திளைத்து அன்பில் ஊறியிருந்தது. உயிருள்ள கிறிஸ்தவன் பாவிகள் மனந்திரும்புவதைப் பார்த்து பரலோகத்தில் இருக்கிற தேவதூதர்களோடு இணைந்து மகிழ்வார்கள். ஆனால், ஆத்துமப் பின்வாங்குதலுக்கு உள்ளாகியிருக்கிறவனுக்கு இந்த ஆனந்தமெல்லாம் இருக்காது. அவன் தன்னை அதிகம் நேசிக்கிறானா அல்லது கர்த்தரை அதிகம் நேசிக்கிறானா என்பதே கேள்விக்குறியாக இருக்கும். கிறிஸ்துவை மற்றவர்கள் அவமதிப்பதைக் கேட்டு வருந்துவதைவிட தன்னை மற்றவர்கள் அவமதிப்பதையே அவன் பெரிதாக எண்ணி வருந்துவான். கிறிஸ்துவின் நாமத்தை மற்றவர்கள் பெரிதுபடுத்துவதைக் கேட்டு ஆனந்தமடைவதைவிட தன்னை மற்றவர்கள் பெரிதாக எண்ணிப் பேசுவது அவனுடைய இருதயத்தைக் குளிரச் செய்யும். இப்படி வாழ்கிறவன் உண்மையில் கிறிஸ்துவை விசுவாசித்திருக்கிறானா என்பதே சந்தேகந்தான். தன்னுடைய சொந்த மனந்திரும்புதலில் அவனுக்கிருக்கும் நம்பிக்கையை இத்தகைய அவச்செயல்கள் அசைக்காவிட்டால் அது மிகவும் பாரதுராமானதாகும், ஆபத்தானதுமாகும்.

மேலே நாம் பார்த்தவை உறுதியான ஆத்மீக ஆறுதலை அடைய முடியாதபடி செய்துவிடுகின்றன. அவனால் பரிசுத்த ஆனந்தத்தோடு பாடுவதற்கு அதிக வாய்ப்பில்லை. அவனுடைய இருதயம் குளிரடைந்து ஆத்மீகக் கடமைகளைச் செய்யும் ஆர்வமற்று காணப்படும். தன்னுடைய கடந்த கால வாழ்க்கையை அவன் ஆர்வத்தோடு பார்ப்பதில்லை. அவனுடைய கடந்த காலம் அவனுக்கு நேரத்தை வீணடித்ததொன்றாகவும், வாய்ப்புகளை இழக்கக்காரணமானதொன்றாகவும், ஆறுதல்களை இல்லாமலாக்கியதொன்றாகவுமே தோன்றும். எதிர்காலத்தைப் பற்றிய பயத்தோடேயே அவன் வாழ்வான். கர்த்தரை நினைத்துப் பார்த்து அவன் கலக்கமடைவான். கேடான செய்திகளைக் கேட்டு அவன் பயமடைவான். பெருந்துன்பங்களை வாழ்க்கையில் அவன் நாடி நிற்கிறான்.

**(இ) அவனில் அவனுடைய பழைய பாவங்கள் மிகுந்த வலிமையோடு வெளிப்படும்.**

வாழ்க்கையில் அசட்டைத் தன்மை நுழைந்து அவனுடைய ஆத்மீக

*ஜாக்கிரதையை இல்லாமலாக்கிவிடுகிறது. தாழ்மை ஓடிப்போய் அதனிடத்தில் சாதிக்க வேண்டும் என்ற வெறி நுழைந்து விடுகிறது. போது மென்று வாழ்ந்த மனப்பான்மை ஓடி ஒளிந்துவிடுகிறது. பொருளாசை உள்ளத்தை ஆக்கிரமிக்கிறது. நிச்சயமின்றி அவன் ஓடிக்கொண்டிருப்பான். பலவீனத்தோடு அவன் சண்டையிடுவான்.*

*இவ்வாறாக கர்த்தரைவிட்டு விலகியோடுகிறவர்கள் சொந்தமாக எதையும் செய்துகொள்ளும் நிலைக்கு தங்களை உட்படுத்திக் கொள்ளு கிறார்கள். அந்த வழியில் போகும்படி கர்த்தர் அவர்களை அனுமதிக்கிறார். "அவர்கள் தங்கள் குற்றங்களை உணர்ந்து, என் முகத்தைத் தேடுமட்டும் நான் என் ஸ்தானத்துக்குத் திரும்பிப் போய்விடுவேன்; தங்கள் ஆபத்தில் என்னைக் கருத்தாய் தேடுவார்கள்" என்கிறார் கர்த்தர் (ஓசியா 5:15). தன் தலைமயிரை இழந்த சிம்சோனைப்போல அவன் இப்போது பலவீனத் தோடு இருக்கிறான். பாலஸ்தீனர்களின் கேலிக்கு அவன் உட்படாமல் இருந்தால் அது நன்மையானதே. எத்தனைக் காலத்துக்கு ஒருவன் அந்த நிலைமையில் இருப்பான் என்பதை விளக்க முடியாது. அத்தகைய தவறு களிலும், பாவச்செயல்களிலும் இருந்து தப்பி வருவது இலேசானதல்ல. ஆண்டவரைத் தெரியாது என்று கூறிய பேதுருவை உடனடியாகத் திருத்த கர்த்தர் சித்தங் கொண்டார். ஆனால், தன்னுடைய பாவங்களை உணர்ந்து அவற்றிற்காகக் கண்ணீர்விட்டு மனந்திரும்ப தாவீதுக்கு சில மாதங்கள் எடுத்ததாக அறிகிறோம். சாத்தானின் கரத்தில் அகப்பட்டு அவன் பிடியில் சிறையிருந்த பிறகு அதிலிருந்து தப்பி வருவதென்பது அத்தனை சுலபமான காரியமல்ல.*

*வேதம் சொல்லுகிறது, "பின்வாங்கும் இருதயமுள்ளவன் தன் வழிகளிலே . . திருப்தியடைவான்" (நீதி. 14:14). அவன் ஜீவத்தண்ணீரை அளிக்கும் ஊற்றாகிய கர்த்தரை தூக்கியெறிந்திருக்கிறான். அதுவே அவனுடைய முதலாவது தவறு. அடுத்தபடியாக, அவன் தண்ணீர் நிலைத்திருக்க முடியாத ஓட்டையுள்ள பானைகளைத் தனக்காக ஏற்படுத்திக்கொண்டான் (யெரே. 2:13). அது அவனுடைய இரண்டாவது தவறு. கர்த்தர் இப்போது அவன் தன்னுடைய பாவத்தில் மூழ்கிப் போகச் செய்வார் அல்லது சாத்தானின் செய்தியாளனை அனுப்பி அவனைத் துன்புறுத்தச் செய்வார். அவன் இப்போது துன்பத்தை அநுபவிப்பான். அலைகளால் தூக்கி யெறியப்பட்டு ஆறுதல்களை வார்த்தையில் இழந்து நிற்பான். அவன் வெட்கத்தால் நிறைந்து கண்களைத் தூக்கிப் பார்க்க முடியாத நிலைமை யில் இருப்பான். வெறுக்கப்படுவதே தனக்குக் கிடைக்கும் சரியான வெகுமதி என்பதை அவன் இப்போது நம்புகிறான். ஆத்மீக வாழ்க்கையில் பின்வாங்குதலுக்கு உள்ளாகி மனந்திரும்புகிறவன் அநுபவிக்கிற வலி அவனுடைய முதலாவது மனந்திரும்புதலைவிட மிகவும் அதிகமானது.*

*வாசகனே! நீ ஆத்தும வாழ்க்கையில் பின்வாங்கி நிற்கிறாயா? உன் இருதயம் குளிரடைந்து, ஆத்தும பலனற்று, தியான வாழ்க்கையில் தவறிழைத்து வருகிறாயா? ஆத்துமாவில் குற்றவுணர்வோடு அமைதியற்று இருந்து வருகிறாயா? கேடுகளைக் குறித்து பயத்தோடு வாழ்ந்து வரு*

*கிறாயா? வாழ்க்கையில் ஏற்படக்கூடிய பெருஞ்சோதனைகளை எண்ணி வாழ்ந்து வருகிறாயா? கிருபையின் சாதனங்கள் உனக்கு ஆசீர்வாதமாக இல்லாமல் போய்விட்டனவா? தொடர்ந்து வாழ்க்கையில் அன்போடு இருந்து வருகிறாயா? அல்லது எல்லாவற்றிலும் குறைகண்டு குற்றஞ் சாட்டும் இருதயத்தோடு இருந்து வருகிறாயா? பக்திவிருத்தியுடையோரு டைய நட்பு உனக்குப் பெரிதாகப்படுகிறதா? எத்தவிதமான நூல்களை வாசிப்பதை நீ கடமையாகக் கொண்டிருக்கிறாய்? கிறிஸ்துவின் மகிமைக் காக உன் வாழ்க்கையில் அனலோடு இருந்து வருகிறாயா? கிறிஸ்தவ வாழ்க்கையில் ஆனந்தத்தை அநுபவித்து வருகிறாயா? இந்தக் கேள்விகளை நீ அடிக்கடி கேட்டு அவற்றிற்கு நேர்மையான பதில்களை அளிப்பது அவசியம், ஏனெனில் நீ கர்த்தருக்குக் கணக்குக் கொடுக்க வேண்டியவனாக இருக்கிறாய்.*

**[வில்லியம் எஸ். பிளமர் (William Plumer 1802–1880): மேல்வரும் ஆக்கத்தைப் படைத்த வில்லியம் பிளமர் அமெரிக்காவில் வாழ்ந்த ஒரு பிரெஸ்பிடீரியன் போதகர். சத்தியத்தில் சிறந்த ஞானியாகவும், நடைமுறைக் கிறிஸ்தவப் போதனையில் தீவிரம் காட்டியவராகவும், நடைமுறைப் போதனையில் ஜோடனைகளற்ற மெய்ப் பிரசங்கியாகவும் கருதப்பட்டவர். பல நூல்களையும் தன் வாழ்நாளில் இவர் படைத்திருக்கிறார்.]**


### திருமறைத்தீபம் பத்திரிகையின் ஆசிரியர்

## போதகர் ஆர். பாலாவின்

# - அருளுரைகள் -

**இப்போது ஒலி, ஒளி நாடாக்களில் (Audio, VCD) கிடைக்கும். மேலும் அநேக பயனுள்ள செய்திகளுக்கும் எழுதிப் பெற்றுக் கொள்ள வேண்டிய முகவரி:**

**இவாஞ்செலிக்கள் பாப்திஸ்து சபை**
**57 / 2 டீ. பி. கே. மெயின் வீதி**
**பைகாரா, மதுரை 625004**
**தொலைபேசி எண்: 0452 6505810**

# சீர்திருத்த கிறிஸ்தவம்
## - தேவை இன்று தமிழினத்தில் -

நமது பத்திரிகை வாசகர்களுக்கு "சீர்திருத்த கிறிஸ்தவம்" என்ற பதங்கள் புதியதாக இருக்காது. கடந்த பதினொரு வருடங்களாக அதுபற்றி எழுதி வந்திருக்கிறோம். சீர்திருத்த கிறிஸ்தவ நம்பிக்கை களைக் கொண்டவர்களின் எழுத்துக்களையும் அறிமுகப்படுத்தி வந்திருக் கிறோம். அதன் அவசியத்தைப் பற்றியும் பல தடவைகள் எழுதி வாசகர் களின் சிந்தனைகளைத் தூண்டிவிட்டிருக்கிறோம். பதினாறாம் நூற்றாண் டில் கிறிஸ்தவ வரலாற்றில் கர்த்தர் செய்த பேரற்புதத்தின் விளைவே சீர்திருத்த கிறிஸ்தவம்.

நமது விசுவாசத்தைக் "கிறிஸ்தவம்" என்றும் நம்மைக் "கிறிஸ்தவர்கள்" என்றும் அறிமுகப்படுத்திக் கொண்டால் போதாதா? நமது கிறிஸ்தவ விசுவாசத்திற்கு இப்படிப் பெயர் கொடுப்பது அவசியமா? என்று சிந்திக் கிறவர்கள் நம்மத்தியில் இருக்கிறார்கள். சீர்திருத்தக் கிறிஸ்தவத்தைப் பற்றி அதிகம் தெரியாதவர்களும் இருக்கிறார்கள். இந்தப் பெயரில் தங்களையோ, தங்கள் சபைகளையோ அறிமுகப்படுத்திக்கொள்ளத் தயங்குகிறவர்களும் அதிகம். இதுபற்றி ஆத்துமாக்களுக்கு அதிகம் தெரியாதபோது இப்படி நம்மை அறிமுகப்படுத்திக் கொள்வதால் ஊழியத்துக்கு ஆபத்து ஏற்படும் என்று நினைப்பவர்களும் ஏராளம். இப்படிக் கிறிஸ்தவ வரலாறு, போதனைகள் என்றெல்லாம் நேரத்தை வீணடிப்பதைவிட வெறும் ஜெபத் தைச் செய்து, வேதம் வாசித்து 'சிம்பிளாக' இருந்துவிடுவதே மெய்யான கிறிஸ்தவம் என்று எண்ணி வாழ்கிறவர்கள் எண்ணிக்கையும் பெரிது.

கிறிஸ்தவத்தைப் பற்றிய பலருடைய எண்ணங்கள் எப்படி இருந்த போதும் உண்மையை எழுதித்தான் ஆக வேண்டும். சீர்திருத்த கிறிஸ்த வத்தை அறிந்து உணர்வுபூர்வமாக அதைப் பின்பற்றுவதும், அந்தப் பெயரில் நம்மை அறிமுகப்படுத்திக் கொள்வதும், அந்தப் போதனைகளை நமது சபைகள் நடைமுறையில் பின்பற்றும்படிப் பார்த்துக்கொள்வதும் ஏன் இந்தக் காலப் பகுதியில் அத்தனை அவசியம் என்பதை இந்த ஆக்கத் தின் மூலம் உங்கள் முன்வைக்க விரும்புகிறேன்.

### (1) நமது விசுவாசத்தைத் தெளிவாக விளக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை வரலாறு இன்று நம்மேல் சுமத்தியிருக்கிறது.

கிறிஸ்துவை அடித்தளமாகக் கொண்டு அப்போஸ்தலர்களால் நிறுவப் பட்ட கிறிஸ்தவ திருச்சபைகள் முதல் நூற்றாண்டில் தனித்தியங்கி வந்த போதிலும் அப்போஸ்தலர்களின் வழிநடத்தலின்படி ஒரே சத்தியத்தைப் பின்பற்றி வந்தன. அந்தக் காலத்திலேயே போலிப் போதனைகள் தலை

தூக்க முயன்றதையும் புதிய ஏற்பாட்டில் நாம் வாசிக்க முடிகிறது. அதற்கெதிராக அப்போஸ்தலர்களும், சபைகளும் போராடியிருக்கின்றன. இருந்தபோதும் சபைகள் கர்த்தரால் வழிநடத்தப்பட்டு சத்தியத்தில் வளர்ந்தன. அப்போஸ்தலர்களின் காலத்திற்குப் பிறகு சபைப்பிதாக்களின் காலத்தில் போலிப்போதனைகள் தலையெடுத்து சத்தியக் கருத்து வேறுபாடுகள் தலைதூக்கியிருந்ததை வரலாறு நமக்கு விளக்குகிறது. சபைப் பிதாக்களின் காலத்துக்குப் பிறகு படிப்படியாக சபைத் தலைமை பலவீனமடைந்து, சபைகள் ஆவியின் வல்லமையை இழந்து வர ஆரம்பித்தன. பிற்காலத்தில் ரோமன் கத்தோலிக்க மதம் உருவாவதற்கான அடையாளங்கள் அன்றே காணப்பட்டன. இதன் காரணமாக திருச்சபையும், கிறிஸ்தவர்களும் அந்தக் காலத்திலேயே தங்களை யார் என்று இனங்காட்டிக் கொள்வதற்காக விசுவாச அறிக்கைகளை உருவாக்கி தாங்கள் விசுவாசிக்கும் சத்தியம் இதுதான் என்று ஆணித்தரமாக சமுதாயத்தின் முன்வைத்ததை வரலாற்றில் வாசிக்க முடிகிறது. சபைக் கவுன்சில்கள் அடிக்கடி கூடித் திருச் சபை சந்தித்த போலிப் போதனைகளை ஆராய்ந்து சத்தியம் எது என்று வேதத்தில் இருந்து விளக்கி கிறிஸ்தவ சபைகளைப் பாதுகாக்கும் நிலை உருவாகி இருந்ததையும் வரலாற்றில் வாசிக்கிறோம். இதெல்லாம் கிறிஸ்தவ சபை என்றும், கிறிஸ்தவர்கள் என்று மட்டும் பொதுவாக கிறிஸ்தவர்கள் அழைக்கப்பட்டு வந்த நிலைமையில் மாற்றத்தை ஏற்படுத்தி அவர்கள் தெளிவாக தங்களை இனங்காட்டிக்கொள்ள வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தின.

இன்று கிறிஸ்தவ சபை என்று மட்டும் அழைத்துக்கொண்டு, நேரடியாக புதிய ஏற்பாட்டில் இருந்து குதித்து வெளிவந்தவர்களைப்போல, இனங்காட்டிக்கொண்டு தாம் விசுவாசிப்பதை விளக்க முடியாமல் இருக்கிறவர்கள் ஒன்றில் இருபது நூற்றாண்டுகளுக்குரிய கிறிஸ்தவ வரலாற்றை உதறித்தள்ளியிருக்கிறார்கள்; இல்லாவிட்டால் அது பற்றிய எந்த ஞானமும் இல்லாதிருக்கிறார்கள் என்றே சொல்ல வேண்டும். இன்று கீழைத்தேய நாடுகளில் காணப்படும் கிறிஸ்தவத்தின் பெருங்குறைபாடு கிறிஸ்தவ வரலாற்றை சபைகளும் ஆத்துமாக்களும் அறியாதிருந்து வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்டிராமல் இருப்பதே. அத்தகைய பாரம்பரியத்தைக் கொண்டிராமல் ஆவியானவரிடம் இருந்து நேரடியாக உருவாகி வந்தவர்களைப் போலத் தங்களைக் காட்டி வருகிறவர்கள் கிறிஸ்தவத்தைப் பற்றிய எந்த அறிவும் இல்லாதவர்கள் என்று கூறுவது மிகைப்படுத்துவதாகாது.

பதினாறாம் நூற்றாண்டிற்குப் பிறகு கிறிஸ்தவத்தோடு எந்தத் தொடர்புமில்லாத ரோமன் கத்தோலிக்க மதப் போதனைகளில் இருந்து நம்மை வேறுபடுத்திக் காட்டவேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியது. கிறிஸ்துவின் பெயரை ஏதோ ஒருவிதத்தில் பயன்படுத்தி வரும் மோர்மன், யெகோவாவின் சாட்சிகள், கிரிஸ்டடொல்பியன் போன்ற மதங்களல்லாத ஆத்துமாக்களைத் தவறான வழிகளில் இட்டுச் செல்லும் குழுக்களிடம் இருந்து நம்மை வேறுபடுத்திக் காட்டவேண்டிய அவசியம் இருக்கிறது. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் தோன்றி வேதத்தைத் தொடர்ந்தும் அங்கீகரித்தாலும், அதன் மூலம் மட்டுமே கர்த்தர் பேசுகிறார்

*என்பதை ஏற்றுக்கொள்ள மறுத்து மனம் போனவழியில் ஆவியின் செயல்கள் என்ற பெயரில் வேதத்துக்குப் புறம்பான காரியங்களைப் போதித்தும், நடத்தியும் வரும் பெந்தகொஸ்தே, கெரிஸ்மெடிக் இயக்கத்தாரிடம் இருந்து நம்மை வேறுபடுத்திக்காட்ட வேண்டிய நிர்ப்பந்தத்தை கிறிஸ்தவ வரலாறு ஏற்படுத்தியிருக்கிறது.*

*இவை மட்டும் இல்லாமல் இரட்சிப்புப் பற்றிய தவறானதும், வேதத்தில் காணமுடியாதுமான ஆர்மீனியனிசப் போதனைகளில் இருந்தும், திரித்துவப் போதனைகளை மறுதலிக்கும் குழுக்களிடம் இருந்தும், திருச்சபையை முழு முற்றாக நிராகரிக்கும் கூட்டத்தாரிடம் இருந்தும் நம்மை வேறுபடுத்தி நாம் விசுவாசிப்பது என்ன என்பதை விளக்கி நமக்கென தகுந்த பெயரை வைத்துக்கொண்டு சமுதாயத்தில் நம்மை இனங்காட்டி கர்த்தரை மகிமைப்படுத்த வேண்டிய கடமையை கிறிஸ்தவ வரலாறு உருவாக்கியிருக்கிறது. "வரலாறு என்பது கர்த்தருடைய கதை" என்று யாரோ சொல்லியிருக்கிறார்கள். அது சத்தியமான உண்மை. கர்த்தரில்லாத எதையும் உலகில் பார்க்க முடியாது. வரலாற்றில் பிரிக்க முடியாத அங்கமாக, நாயகனாக இருந்து பணியாற்றி வருகிறார் நம்மைப் படைத்தவர். அவர் இந்த உலகத்தில் நடத்தி வரும் செயல்களையே வரலாறு என்கிறோம். ஆகவே, நம்மை யார் என்று இனங்காட்டிக்கொள்ள வேண்டிய அவசியத்தைக் கர்த்தரே வரலாற்றின் மூலம் ஏற்படுத்தியிருக்கிறார்.*

*அப்படியிருக்க, வரலாற்றோடு தொடர்பில்லாமல் ஒரு கிறிஸ்தவத்தை உலகத்தில் நிலை நாட்ட முடியுமா? அப்படிச் செய்யப் பாடுபடுவது கல்லில் இருந்து கயிறு திரிக்கப் பார்ப்பது போலல்லவா அமையும். வரலாறில்லாமல் கிறிஸ்தவம் இல்லை. இன்றைக்கு கிறிஸ்தவத்தின் அங்கமாகத் தம்மைக் காட்டிக்கொள்கிற எத்தனையோ பிரிவுகள் வரலாற்றை நிராகரித்து நிற்க சீர்திருத்த கிறிஸ்தவம் வரலாற்றுக் கிறிஸ்தவமாக வல்லமையோடு கர்த்தரை மகிமைப்படுத்தி வருகிறது. தைரியத்தோடு ஆவியில் நிறைந்திருந்து ஆபிரகாம் முதல்கொண்டு லூதர், கல்வின், நொக்ஸ், ஓவன், பனியன், ஸ்பர்ஜன் என்று ஒரு பெரிய வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்டு சீர்திருத்தக் கிறிஸ்தவர்களாக நம்மைக் இனங்காட்டிக் கொண்டு வாழ முடிகிறது.*

**(2) சீர்திருத்த கிறிஸ்தவமே வேதத்தின் போதனைகளுக்கு தெளிவான விளக்கத்தைக் கொடுத்து அப்போஸ்தலக் கிறிஸ்தவத்தைப் பிரதிபலிப்பதாக வரலாற்றில் இருந்து வருகிறது.**

*நமது விசுவாசம் வேதத்தையும், வரலாற்றுத் தொடர்ச்சியையும் அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். வேதத்தை அடிப்படையாகக் கொள்ளாத விசுவாசமும், வரலாற்றில் காணமுடியாததும் கிறிஸ்தவ விசுவாசமாக இருக்காது. சீர்திருத்த விசுவாசம் அப்போஸ்தலர்களின் போதனைகளை அடிப்படையாகக் கொண்டது. அதனை அப்போஸ்தலப் போதனை என்றழைப்பதிலும் தவறில்லை. அப்போஸ்தலப் போதனைகளுக்கு மாறானதை சீர்திருத்த விசுவாசத்தின் அடிப்படைப் போதனை*

*களில் காணமுடியாது.*

*(1)* **வேதம்** - *இன்று மெய்க்கிறிஸ்தவத்தைப் போலியில் இருந்துப் பிரித்துப் பார்க்க வேண்டுமானால் வேதத்தைப் பற்றிய அதனுடைய நிலை என்ன என்பதை ஆராய்ந்து பார்ப்பது அவசியம். கர்த்தரின் வேதத்திற்கு கொடுக்க வேண்டிய இடத்தைக் கொடுக்காத எதுவும் மெய்க்கிறிஸ்தவமாக இருக்க முடியாது. சீர்திருத்த கிறிஸ்தவம் கர்த்தரின் வேதத்தை அடிப்படையாகக் கொண்டமைந்திருக்கிறது. "வேதம் மட்டுமே" என்பதே அதனுடைய உயிர் மூச்சு. வேதத்தின் அதிகாரத்தைப் பற்றி ஆர்மீனியனிசமும், ஏனைய பிரிவு களும் பெரிதாகப் பேசினாலும் அவை வேத அதிகாரத்தை சரிவர புரிந்து கொண்டு அதற்கு தம்மை ஒப்புக்கொடுப்பதாயில்லை. வேதத்தின் மூலம் கர்த்தரின் சித்தத்தை அறிந்துகொள்வதைப் புறக்கணித்துவிட்டு புதுப்புது வாக்குறுதிகளையும் செய்திகளையும் ஆவியானவர் தருவார் என்று தேடி அலைந்துகொண்டிருக்கிறது கெரிஸ்மெடிக் இயக்கம். வேதத்தின் மூலம் மட்டுமே கர்த்தர் பேசுகிறார் என்ற அசைக்க முடியாத சத்தியத்தை ஏற்றுக் கொள்கிறவரை பெந்தகொஸ்தே, கெரிஸ்மெடிக் இயக்கங்கள் வேத அதிகாரமும், வல்லமையும் இல்லாமலேயே இருந்துவரும். வேதத்தைப் பற்றிய அதனுடைய பலவீனமான, குளருபடியான எண்ணங்களே அதனு டைய பலவிதமான கோளாருகளுக்கும் காரணமாக அமைந்திருக்கின்றன.*

*வேதம் கர்த்தருடையது என்று சொன்னால் மட்டும் போதாது. வேத போதனைகளின்படி நடக்க வேண்டும் என்று ஆர்மீனியனிசமும் சொல்லத் தான் செய்கிறது. ஆனால், வேதம் இதுதான், அதன் அதிகாரம் இதுதான் என்று சுட்டிக்காட்டி, வேதம் எதைப் போதிக்கிறதோ அதற்கு முழுமை யான விளக்கமளித்து அவ்விளக்கங்களைப் பின்பற்றி நடந்துகொள்வதை வாழ்க்கை இலட்சியமாகக் கொண்டு அமைந்திருப்பது சீர்திருத்தக் கிறிஸ்த வம் மட்டுமே. அதனால்தான் பன்னிரண்டு நூற்றாண்டுகளாக ஐரோப் பாவைத் தன் கையில் வைத்து காட்டாட்சி செய்து வந்த கத்தோலிக் கத்தின் அராஜகத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தது சீர்திருத்தவாதம். சீர்திருத்தவாதிகள் வேதத்தை மக்களின் மொழியில் மொழிபெயர்த்தற்குக் காரணம் கர்த்தரைப் பற்றி முழுமையாக அறிந்துகொள்ளவும், விசுவாசிக்க வும் அது இருந்தால் மட்டுமே முடியும் என்று உறுதியாக நம்பியதால்தான். அதுமட்டுமல்லாமல் வேதபூர்வமாக, வேதபோதனைகளின்படி மட்டுமே கர்த்தருக்குரிய திருச்சபை ஆராதனை அமைய வேண்டும் என்று அவர் களும், அவர்களுக்குப் பின்வந்த பியூரிட்டன் பெரியவர்களும் பாடுபட்டார் கள். போதக ஊழியமும் வேத அடிப்படையில் அமைய வேண்டும் என்று போதித்து, அதை நிலைநாட்டுவதற்காக அரும்பாடுபட்டார்கள் சீர்திருத்த வாதிகளும், பியூரிட்டன்களும். இதையெல்லாம் சீர்திருத்தக் கிறிஸ்தவத்தில் அல்லாமல் வேறு எங்கும் பார்க்க முடியாது. வேதம், வேதம், வேதம் என்று வேதத்தை ஆதாரமாகக் கொண்டு அனைத்தையும் அதன் அடிப் படையில் ஆராய்கிறது சீர்திருத்த கிறிஸ்தவம். ஆக்கபூர்வமான சபை ஊழியத்தில் ஈடுபட நம்மை வற்புறுத்துகிறது; கர்த்தரை ஆராதிக்கத் தூண்டுகிறது. இதையெல்லாம் இன்று தமிழினத்துக் கிறிஸ்தவத்தில் காண*

முடியவில்லை. சீர்திருத்த கிறிஸ்தவத்தை அறியாமலும் அதன் வல்லமையை அநுபவிக்காமலும் இருந்துவருகின்றன தமிழினத்து திருச்சபைகள்.

சீர்திருத்தவாதிகள் வேதத்திற்கு எத்தனை மதிப்பளித்திருக்கிறார்கள் என்று அறிந்துகொள்ள வேண்டுமானால் சீர்திருத்தக் கிறிஸ்தவ விசுவாச அறிக்கைகளை வாசித்துப் பார்த்தாலே போதும். 1689 விசுவாச அறிக்கையின் (1689 Confession of Faith) முதலாவது அதிகாரம் வேதத்தைப் பற்றி விளக்குகிறது. அதில் சீர்திருத்தவாதிகள் வேதத்தின் அதிகாரத்தையும் அதன் போதுமான தன்மையைப் பற்றியும் தெள்ளத் தெளிவாக எழுதித் தந்திருக்கிறார்கள். இது ஒவ்வொரு விசுவாசியும் வாசித்துப் பயனடைய வேண்டிய அற்புதமான படைப்பு. வாசிப்பது மட்டுமல்லாமல் அதன் போதனையின்படி வாழ்வதும் சபைகள் வேதபூர்வமாக இயங்கும்படிப் பார்த்துக்கொள்ள வேண்டியதும் நமது பணி.

(2) **கர்த்தரின் இறையையாண்மை** - அப்போஸ்தலப் போதனைகளைத் தெளிவாக விளக்குகிறது சீர்திருத்த விசுவாசம். கர்த்தரின் இறையாண்மையை அடிப்படையாகக் கொண்டு அதன் போதனைகள் அமைந்திருக்கின்றன. கர்த்தரின் படைப்புகளிலெல்லாம் சிறப்பான மானுடத்திற்கு மதிப்புத் தருகின்ற அதைவேளை மானுடம் பாவத்தினால் கறைபடிந்திருப்பதைக் கருத்தில் கொண்டு கர்த்தரின் ஆளுமைக்கு அது எந்தவிதத்திலும் மாசேற்படுத்திவிடாபடி அதன் போதனைகள் அமைந்திருக்கின்றன. மானுடத்தை முன்னிலைப்படுத்தி கர்த்தருக்குக் கொடுக்க வேண்டிய இடத்தைக் கொடுக்கத் தவறும் ஆர்மீனியனிசப் போதனைக்கு எதிர்மறையானது சீர்திருத்த கிறிஸ்தவம். ஆரம்பம் முதல் கடைசிவரை இரட்சிப்பு கர்த்தருக்கே சொந்தம் என்றும், கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் இரட்சிப்பும் மகிமையும் தேவ மகிமைக்காகவே ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும் விளக்குகிறது சீர்திருத்த விசுவாசம். கர்த்தரின் இறையாண்மையை அது அடிப்படையாகக் கொண்டிருப்பதால் கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் அவரிடம் வந்துசேர தங்களுடைய சொந்த வல்லமையில் தங்கியிராமல் கர்த்தரின் தெளிவான, வல்லமையான திட்டத்திலேயே தங்கியிருக்கிறார்கள் என்று அது விசுவாசிக்கிறது.

(3) **கிருபையின் போதனைகள்** - இரட்சிப்புப் பற்றிய சீர்திருத்தவாத கிறிஸ்தவத்தின் போதனைகளை வரலாறு கிருபையின் போதனைகள் என்று அழைக்கிறது. இதைக் கல்வினிச ஐம்போதனைகள் என்றும் அழைப்பார்கள். இந்தக் கிருபையின் போதனைகள் இரட்சிப்பாகிய கிருபையைப் பற்றிய தெளிவான வேத சத்தியங்களை விளக்குகின்றன. கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் உள்ளம்சங்களை வேதபூர்வமாக கர்த்தரின் இறையாண்மையின் அடிப்படையில் விளக்குகின்றன. பாவத்தில் வீழ்ந்திருக்கும் மனிதனின் நிலைமையை வெளிப்படுத்தி அவனுடைய விடுதலைக்காக கர்த்தர் ஏற்படுத்தி கிறிஸ்துவின் மூலம் நிறைவேற்றியிருக்கும் திட்டத்தை அப்பழுக்கில்லாமல் வேதத்தில் இருந்து நம்முன் வைக்கின்றன. இந்தப் போதனைகளை இன்றும் கூட தமிழினத்துக் கிறிஸ்தவம் பெருமளவுக்கு

அறியாமல் இருட்டில் இருந்து வருகிறது. அதனால்தான் இன்றைக்கு சுவிசேஷ ஊழியம் தமிழினத்தில் தரம் குறைந்து தனி மனித சுயநலத்தைத் திருப்திப்படுத்திக் கொள்ளுவதற்காகவும், தனிமனிதர்களின் வியாபார நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளுவதற்காகவும் நடந்து வருகின்றன. வேதம் போதிக்கும் கிருபையின் போதனைகள் இரட்சிப்பின் நிறை வேற்றத்தின் மூலம் கர்த்தருக்கே சகல மகிமையும் போய் சேரும்படியாகச் செய்கின்றன.

**(4) கர்த்தரின் ஆராதனை** - தமிழினத்தில் கர்த்தருக்குக் கொடுக்கப்படுகின்ற ஆராதனை இன்றைக்கு வேதபூர்வமாக அமைந்திருக்கவில்லை. ஆர்மீனிய னிசத்தின் ஆளுகைக்கு உட்பட்டிருக்கும் பெரும்பாலான ஊழியங்கள் மனித உணர்ச்சிக்கு மட்டுமே இடம் கொடுத்து மனம்போன போக்கில் கர்த்தரை ஆராதனை என்ற பெயரில் துதிக்கும்படி ஆத்துமாக்களுக்கு வழிகாட்டி வருகின்றன; அந்நிய அக்கினியை அவர் முன் அள்ளிக் குவித்து வருகின்றன. வேத போதனைகளுக்கும், கர்த்தரின் ஆராதனை வழி முறைகளுக்கும் அங்கே இடமில்லை. அறியாமை இதற்கு மூல காரணம் என்பதை நாம் மறுக்க முடியாது. வேத அதிகாரமும், திருச்சபை வரலாறும் அறியாதவர்களுக்கு கர்த்தரின் ஆராதனை பற்றிய வேதபூர்வமான அறிவும் அநுபவமும் இருக்க இடமில்லை.

கர்த்தரின் வேதமோ, கர்த்தரின் வார்த்தையின்படி மட்டுமே அவருடைய ஆராதனை அமைய வேண்டும் என்று தெளிவாக விளக்குகிறது. அதில் மனித சிந்தனைகளுக்கும், உலக அநுபவங்களும் இடமில்லை. உணர்ச்சி வெளிப்பாட்டுக்கு இடமிருந்தபோது அது வேதத்தின் கட்டுப்பாட்டுக்குள் அமைந்தே வெளிப்பட வேண்டும். இதுவே ஆராதனை பற்றி வேதம் போதிக்கும் உண்மை. சீர்திருத்த கிறிஸ்தவம் இந்தப் பகுதியில் கிறிஸ் தவத்திற்கு பெரும் சேவை செய்திருக்கிறது. சீர்திருத்தவாதிகளும், பியூரிட் டன்களும் இதுபற்றி போதித்து, விளக்கி, நூல்களைப் படைத்து திருச்சபை க்கு பெரும்பணிபுரிந்திருக்கிறார்கள். ஆராதனையில் இருக்க வேண்டிய அம்சங்களைத் தெளிவாக விளக்கிக்காட்டி, இருக்கக்கூடாதவற்றையும் சுட்டிக்காட்டி நம்மை எச்சரித்திருக்கிறார்கள். தமிழினம் தொடர்ந்து இவற்றை அறியாதிருந்து வருகிறது. தமிழினத்து திருச்சபைகள் இதை அறிந்துகொள்ள இடம் தருவதாயில்லை. பெந்தகொஸ்தே ஆராதனை முறைகளைப் பின்பற்றி தனிமனித இச்சைப்படி கர்த்தருக்கான ஆராதனையை அளித்துவருகிறார்கள் அநேகர். கூட்டத்தைக் கூட்டுவதற் கும் அதன் மூலம் பணம் சேர்த்துக்கொள்வதற்கும் எதெல்லாம் பயன்படுமோ அவற்றில் மட்டுமே கண்ணாய் இருந்துவருகிறார்கள் ஊழியக்காரர்கள் என்ற பெயரில் உலவும் அநேகர். கர்த்தரின் ஆராதனை இன்றைக்கு ஆகாபின் காலத்திலும், மனாசேயின் காலத்திலும் இருந்ததைப் போல கர்த்தருக்கு அவமதிப்பை ஏற்படுத்தி வருகின்றது.

இந்த ஆபத்து நீங்க நம்மத்தியில் வேதபூர்வமான சீர்திருத்த கிறிஸ்தவம் வளர்வது அவசியம். அது இருக்குமிடத்தில்தான் வேத அடிப்படையிலான கர்த்தருக்குரிய ஆராதனை வழிகளைப் பார்க்க முடியும். கர்த்தருக்கு

*மகிமை தரும் துதியைப் பார்க்க முடியும்.*

**(5) திருச்சபை -** *தமிழினத்தில் பரவலாக காணப்படும் திருச்சபை ஊழியத்தைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. குடிசைத் தொழிலாக, எவருக்கும் கணக்குக்கொடுக்காத தனிநபர் வீட்டூழியங்களும், சபையை முழு முற்றாக நிராகரித்து சினிமா ஸ்டார்போல் கவர்ச்சி ஊழியம் நடத்தி வரும் சுவிசேஷகர்களுமே இன்றைக்கு ஆத்துமாக்களை வலைவீசிப்பிடித்து அவர்களை ஆண்டு வருகிறார்கள். வேதம் அறியாது வாழ்ந்து வரும் மக்கள் மத்தியில் இவர்களைப் பார்த்து கேள்வி கேட்கிறவர்கள் எவரும் இல்லை. இவர்களைத் தவிர கிறிஸ்தவ ஸ்தாபனங்களும் பெருகி கர்த்துருக்கு ஆள் சேர்க்கிறோம் என்று ஒரு சில மனிதர்களை மட்டும் தலைவர்களாக உருவாக்கிக் கொண்டிருக்கின்றன. இவர்கள் எல்லோருமே ஆர்மீனியனிச இறையியல் போதனைகளை அறிந்தோ அறியாமலோ பின்பற்றி வருகிறார்கள். இவர்கள் மத்தியில் வேதபூர்வமான திருச்சபை அமைப்புக்கு இடமில்லை.*

*இதற்கெல்லாம் மாறாக சீர்திருத்த கிறிஸ்தவம் வேத அடிப்படையிலான திருச்சபை அமைவதில் கண்ணாக இருக்கின்றது. தனி மனிதர்களை முதனமைப்படுத்தாமல், கர்த்தரின் வேதத்திற்கு மதிப்புக்கொடுத்து அவர் நேசிக்கும் திருச்சபையை கிறிஸ்துவை அடிப்படையாகக் கொண்டு கட்டும் பணியில் ஊக்கம் காட்டுகிறது. அதன் அமைப்பு, நிர்வாகம், தலைமை, அங்கத்துவம், கட்டுப்பாடு, ஆராதனை அனைத்தும் வேதம் தரும் போதனைகளை மட்டுமே பின்பற்றி அமைய வேண்டும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்து வைராக்கியத்தோடு போதிக்கிறது. இன்றைக்கு தமிழினத்தில் கர்த்தரை மகிமைப்படுத்தும் திருச்சபை உருவாக வேண்டுமானால் சீர்திருத்த கிறிஸ்தவத்தை முழுமனத்தோடும், வைராக்கியத்தோடும், தியாகத்தோடும், பக்திவிருத்தியோடும் பின்பற்று கிறவர்கள் எழுந்தால் மட்டுமே முடியும்.*

*மெய்யான சீர்திருத்த கிறிஸ்தவம் இருக்குமிடத்தில் குடும்ப ஊழியத்துக் கும், எவருக்கும் கணக்குக் கொடுக்க மறுக்கும் தனிநபர் ஊழியத்துக்கும், ஆத்துமாக்களைப் பணம் சேர்ப்பதற்காகப் பயன்படுத்திக் கொள்ளும் புல்லுருவிகளுக்கும், தன்னை உயர்த்திக் கொள்ளுவதற்காக ஏணிப்படியாக சபையைப் பயன்படுத்திக் கொள்ளும் மனிதர்களுக்கும் இடம் கிடையாது. வெறும் பிணம் போன்ற பாரம்பரியத்துக்கும், கலாச்சார சீரழிவுகளுக்கும் அங்கே இடமிருக்காது. வேதம் அங்கே பயபக்தியோடு ஆளும்; போதகர்கள் உயிரைக் கொடுத்து ஆத்துமாக்களின் உயர்வுக்காக மட்டும் உழைப்பவர் களாக இருப்பார்கள், அவர்களிடம் பந்தா இருக்காது, பகட்டு இருக்காது, பாம்பின் குணம் இருக்காது, பண ஆசை இருக்காது, மொத்தத்தில் அவர்கள் பிணமாக இருக்க மாட்டார்கள். திருச்சபை சபை அங்கத்தவர் கள் கடமைப்பாட்டோடு கர்த்தரின் வேதத்தைப் பின்பற்றி அவரை மகிமைப்படுத்தப் பார்ப்பார்கள். சுயநலநோக்கத்தோடு சுவிசேஷ ஊழியங் கள் அங்கே நடக்காது; ஆத்துமாக்கள் வேதமறிந்தவர்களாக பக்தி வைராக்கியத்தோடு வளர்பவர்களாக இருப்பார்கள். பழைய வாழ்க்கை*

யைத் தூக்கி எறிந்துவிட்டு வேதபோதனைகளின்படி தங்களை மாற்றிக் கொண்டு அன்றாடம் கர்த்தருக்குப் பிரியமான வாழ்க்கையை வாழுகிறவர் களாக இருப்பார்கள். அவர்கள் பூரணமானவர்களாக இல்லாவிட்டாலும் அவர்கள் மத்தியில் உண்மை இருக்கும், அங்கு நடக்கும் ஜெபத்தில் உயிரிருக்கும், அவர்கள் வார்த்தை சுத்தமாக இருக்கும், இருதயத்தில் பக்தி இருக்கும். இதுவே சீர்திருத்த கிறிஸ்தவம் உருவாக்குகிற திருச்சபை அமைப்பு. இதில்லாமல் தமிழினம் எப்படி கர்த்தரை மகிமைப்படுத்த முடியும்?

சீர்திருத்த கிறிஸ்தவம் நம்மத்தியில் இருக்க வேண்டியதற்கான அவசியத்தை உங்கள் முன் இதுவரை விளக்கிக் காட்ட முயன்றிருக்கிறேன். இதுவரை நாம் பார்த்த முக்கியமான அம்சங்களை இன்றைக்கு நம்மத்தியில் பார்க்க முடியாதபடி கிறிஸ்தவ சபைகள், ஊழியங்கள் என்ற பெயரில் வியாபாரம் நடத்துகிறவர்கள் செய்து வைத்திருக்கிறார்கள். நமது பத்திரிக் கையை வாசித்து வருகிற அநேக வாசகர்களும், நண்பர்களும் நான் சொல்வதை நிச்சயம் புரிந்துகொண்டிருப்பீர்கள். நம் கண்களுக்குத் தெரியாமலா நாம் பார்க்கிற காரியங்கள் நடந்துவருகின்றன. இந்நிலைமை மாற நாம் என்ன செய்ய வேண்டும்? சீர்திருத்த கிறிஸ்தவம் உருவாக வழி உண்டா? ஆத்துமாக்கள் சத்தியவேதத்தை சத்தியமாக அறிந்துகொள்ள, அதன்படி வாழ வழி இருக்கிறதா? இருக்கிறது நண்பர்களே! அதற்கு உங்கள் பணி என்ன?

அ. கர்த்தர் கருணைகூர்ந்து நம்மத்தியில் அத்தகைய கிறிஸ்தவத்தை ஏற்படுத்த ஜெபியுங்கள். வேதம் வேதமாக பிரசங்கிக்கப்பட ஜெபியுங்கள். நல்ல திருச்சபைகள் உருவாக ஜெபியுங்கள். நல்ல ஊழியர்கள் உருவாக ஜெபியுங்கள். ஊக்கமாக, உயிர்த்துடிப்போடு, தியாகத்தோடு ஜெபியுங்கள்.

ஆ. இந்த உண்மைகள் உங்களைத் தொட்டிருந்தால் நீங்கள் செய்ய வேண் டியதைப் பற்றி சிந்தியுங்கள். தவறான இடத்திலிருந்து தவறான மனிதர் களுக்கு பலிக்கடாவாக இருந்து வருகிறீர்களா? மார்டின் லூதரைப் போல தைரியத்தோடு நீங்கள் இருக்குமிடத்தைவிட்டு கர்த்தருக்காக வெளியே வரவேண்டும். போலித்தனத்துக்கு துணைபோவதால் கர்த்தரை உங்கள் வாழ்க்கையில் மகிமைப்படுத்த முடியாது. வேதம் வேதமாக போதிக்கப் படாத இடத்திலும், ஆராதனை வேத அடிப்படையில் நடக்காத இடத் திலும், போதகர்கள் வேத அடிப்படையில் மேய்ப்பன் ஊழியத்தை செய்யா மல் நம்மைத் தங்கள் சுயநலத்துக்காக பயன்படுத்திக் கொள்கிற இடத்திலும், திருச்சபை திருச்சபையாக இல்லாத இடத்திலும் நாம் இருப்பது தகாது.

இ. சத்தியம் இருக்குமிடத்தை நாடிச் செல்லுங்கள். சத்தியத்தின்படி வாழ வாழ்க்கையில் தியாகம் செய்வது அவசியம். நமக்காக கிறிஸ்து மரித்தார். அவருக்கு விசுவாசமாக இருக்க வாழ்க்கையில் தியாகம் செய்யத் தயங்க லாமா? சத்தியத்தின்படி உங்கள் குடும்பம் வாழ, வளர நீங்கள் சத்தியத்தை நாடிப்போக வேண்டும். கெட்டகுமாரன், இருக்குமிடத்திலேயே இருந்திருந் தால் அவனுக்கு வாழ்க்கை கிடைத்திருக்காது. அவன் முடிவெடுத்தான், எழுந்தான், தகப்பனிடம் போனான். நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

# மகவேட்பு

## (இரட்சிப்பின் படிமுறை ஒழுங்கு)

இதுவரை இரட்சிப்பின் படிமுறை ஒழுங்கில் அழைப்பில் ஆரம்பித்து நீதிமானாக்குதல்வரையும் ஆராய்ந்து வந்திருக்கிறோம். இந்த இதழில் இரட்சிப்பின் படிமுறை ஒழுங்கில் அடுத்ததாக இடம் பெறும் "மகவேட்பைப்" பற்றி ஆராய்வோம். இதை ஆங்கிலத்தில் Adoption என்று அழைப்பார்கள். நீதிமானாக்குதலை அடுத்து வரவேண்டியது மகவேட்பே. கிறிஸ்து நமக்களித்திருக்கும் இரட்சிப்பின் ஆசீர்வாதங்களில் ஒன்று மகவேட்பு. இதனை புத்திரசுவீகாரம் என்றும் அழைக்கலாம். தத்தெடுத்தல் என்றும் இதற்குப் பொருள். கர்த்தராகிய பிதா கிறிஸ்துவின் மூலம் தம்முடைய மக்களை சுவீகாரப் புத்திரர்களாக தத்தெடுத்திருக்கிறார் என்பதையே மகவேட்பாகிய கோட்பாடு விளக்குகிறது. இரட்சிப்பின் படிமுறை அம்சங்களில் காணப்படும் ஏனைய கிருபைகளோடு பிரிக்கமுடியாத தொடர்புடையதாக மகவேட்பு இருந்தபோதும் இது ஒரு தனிப்பட்ட கிருபையாக இருப்பதை நாம் உணர்வது அவசியம். இன்னொருவிதத்தில் சொல்லப்போனால் நீதிமானாக்குதல் மகவேட்பாகாது. மறுபிறப்பும் மகவேட்பாகாது. சிலர் மறுபிறப்பினால் நமக்குக் கிடைத்துள்ள நீதிமானாக்குதலின் மறுபெயர் மகவேட்பு என்ற தவறான எண்ணத்தைக் கொண்டிருக்கிறார்கள். மறுபிறப்பையும், நீதிமானாக்குதலையும்விட வேறுபட்ட தனிதன்மைளைக் கொண்டு இந்தக் கிருபை விளங்குகிறது.

பரிசுத்த ஆவியானவர் நம்முடைய குருட்டுக் கண்களைத் திறந்துவைத்து கிறிஸ்துவுக்குள்ளான ஆத்மீக ஜீவனை நமக்குள் விதைப்பதையே மறுபிறப்பு என்று அழைக்கிறோம். நீத்திய ஜீவனுக்குரியவர்களாக நம்மை அறிவித்து நீதிமான்களாக அடையாளம் கண்டு நம்மைக் கர்த்தர் ஏற்றுக் கொள்வதையே நீதிமானாக்குதலாக கிருபை விளக்குகிறது. இந்த இரண்டு கிருபைகளுமே நமக்குக் கிடைத்துள்ள ஆசீர்வாதங்களாக இருந்தபோதும் மகவேட்பின் மூலம் நாமடைந்திருக்கின்ற ஆசீர்வாதங்களை இவை விளக்குவதாயில்லை. மகவேட்பின் மூலம் கிறிஸ்துவால் மீட்கப்பட்டிருக்கிறவர்கள் கர்த்தருடைய பிள்ளைகளாக மாறிவிடுகின்றனர்; கர்த்தருடைய குடும்ப அங்கத்தினர்களாகிவிடுகின்றனர். அவருடைய குடும்பத்தாருக்குரிய சிறப்புரிமைகளை அவர்கள் இனி அநுபவிக்கமுடியும். மறுபிறப்பும், நீதிமானாக்குதலும் இந்த உண்மையை விளக்கும் கிருபைகளல்ல. யோவான் 1:12 மகவேட்பை விளக்குகின்ற ஒரு வசனம்: "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமாய் அவரை ஏற்றுக்கொள்கிறவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்."

*மகவேட்பின் சிறப்பம்சங்களை இறையியலறிஞர் ஜோண் மரே பின்வரு மாறு விளக்குகிறார்:*

*(1) மகவேட்பு தனித்தன்மையைக் கொண்ட கிருபையாக இருந்தபோதும் மறுபிறப்போடும், நீதிமானாக்குதலோடும் பிரிக்கமுடியாத தொடர்புள்ள தாக இருக்கின்றது. நீதிமானாக்கப்படுகிறவர்களே கர்த்தரின் சுவீகாரப் புத்திரர்களாக மாறும் தகுதியுடையவர்களாக இருக்கின்றனர்.*

*(2) மகவேட்பு நீதிமானாக்குதலைப் போன்ற கர்த்தருடைய நியாயஸ்தலத் தில் நிகழ்ந்த தீர்ப்பின் விளைவு. அதாவது, நீதிமானாக்குதலின் மூலம் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள ஒரு சிறப்புரிமை. இன்னொருவிதத்தில் சொல்லப்போனால் நிலத்தை வாங்குகிறவர்களுக்கு கொடுக்கப்படுகின்ற பத்திரம் போன்றது. நிலம் அவர்களுக்கு சொந்த மானது என்பதை நிலப்பத்திரம் அறிவிப்பது போல மகவேட்பு நாம் கர்த்தருடைய பிள்ளைகள் என்பதை அறிவிக்கிறது. இதிலிருந்து மகவேட்பு என்பது மறுபிறப்பைப் போல நமக்குள் நிகழ்ந்த ஆவியின் கிரியையாக எண்ணக்கூடாது. மகவேட்பு நமக்குள் நிகழ்ந்து நம்மை எந்த விதத்திலும் மாற்றுகிற கிருபையல்ல. அது கர்த்தரோடு நமக்கு ஏற்பட்டுள்ள புதிய உறவை அறிவிப்பதாக மட்டுமே இருக்கிறது.*

*(3) கர்த்தருடைய குடும்பத்துக்குள் அங்கத்தவர்களாக இணைக்கப்பட் டிருப்பவர்கள் மகவேட்பின் ஆவியைப் பெற்றிருக்கிறார்கள். இதன் மூலம் அவர்கள் கர்த்தரோடு தங்களுக்கிருக்கும் தகப்பன், பிள்ளை உறவை உணர்ந்து அதற்குரிய சிறப்புரிமைகளை அநுபவிக்கக்கூடியவர்களாக இருக் கின்றனர். இதனாலேயே அவர்களால் கர்த்தரை "அப்பா, பிதா" என்று அழைக்க முடிகின்றது (கலா. 4:6; ரோமர் 8:15, 16). மகவேட்புக்குரியவர்களாக நாம் அறிவிக்கப்பட்டதனாலேயே நமக்கு மகவேட்பின் ஆவி கிடைத் திருக்கிறது.*

*(4) கடைசியாக மறுபிறப்பிற்கும், மகவேட்பிற்கும் இடையில் நெருங்கிய தொடர்பிருக்கிறது. இந்தத் தொடர்பு அத்தனை நெருக்கமானதாக இருப்பதால் சிலர் நாம் கர்த்தரின் குடும்ப அங்கத்தவருக்குரிய தன்மை யைக் கொண்டிருப்பதோடு, அங்கீகாரப் பத்திரத்தின் மூலம் சுவீகரிக்கப்பட் டும் இருக்கிறோம் என்கிறார்கள். இதற்கு வேத ஆதாரம் இருக்கின்றது. இரண்டு வழிகளில் நாம் ஒரு குடும்பத்தின் அங்கத்தவராக மாறலாம். ஒன்று அதில் நாம் பிறந்திருக்க வேண்டும். அடுத்ததாக தத்தெடுக்கப் பட்டிருக்க வேண்டும். முதலாவது இயற்கையாக பிறப்பதால் ஏற்படுகின்றது. இரண்டாவது சட்டரீதியிலான ஒரு நடவடிக்கை. ஒருவிதத்தில் இதை நாம் கர்த்தரோடிருக்கும் நமது உறவில் காணலாம். கர்த்தர் நம்மை வெறு மனே தத்தெடுத்திருக்காமல் தன்னுடைய குடும்பத்தில் அங்கத்தினராக இருக்கும் தகுதிக்குரியவிதத்தில் நமது தன்மையையும் மாற்றி அமைத் திருக்கிறார். இதை அவர் மறுபிறப்பின் மூலம் செய்திருக்கிறார். தன்னு டைய அறிவிலும், நீதியிலும், பரிசுத்தத்திலும் பங்குகொண்டு அதற்கேற்ற ஆத்மீக வாழ்க்கையை வாழும்விதமாக நம்மை ஆவியின் மூலமாக மாற்றி யிருக்கிறார். தன்னுடைய குடும்பத்தின் தன்மைக்கேற்ற இலக்கணங்களை*

வாழ்க்கையில் கொண்டிருக்காதவர்களைக் கர்த்தர் ஒருபோதும் தன்னுடைய குடும்ப அங்கத்தவர்களாக ஏற்றுக்கொள்வதில்லை. ஆகவே, கர்த்தரின் மகவேட்பை அநுபவிப்பதற்கு மறுபிறப்பு அவசியமான நிபந்தனையாக இருக்கிறது. நம்மை மறுரூபமாக்குகிற அதே பரிசுத்த ஆவியே புத்திரராக சுவீகரிக்கப்பட்டிருக்கிறவர்களின் இருதயத்தில் வாசம் செய்து அவர்கள் கர்த்தரை "அப்பா, பிதா" என்று அழைக்கும்படி செய்கிறார். ஆனால், மகவேட்பு மறுபிறப்பல்ல. அதுவே மகவேட்பின் ஆவியுமல்ல. மகவேட்பை அடைவதற்கு அவசியமானது மறுபிறப்பு; மறுபிறப்பின் விளைவு மகவேட்பு என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

மகவேட்பு கர்த்தர் மனிதர்களின் தகப்பனாக இருக்கும் உறவைப் பற்றியதாகும். கர்த்தரைத் தகப்பனாகக் கருதும்போது அதுபற்றிய சில உண்மைகளை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். முதலாவதாக, திரித்துவப் போதனையின்படி கர்த்தர் பிதாவாக இருக்கிறார். திரித்துவத்தில் அவர் இரண்டாம் அங்கத்தவரான தன்னுடைய ஒரே குமாரனுக்கும், மூன்றாம் அங்கத்தவரான ஆவியானவருக்கும் பிதாவாக இருக்கிறார். இவ்வாறு கர்த்தர் ஏனைய திரித்துவ அங்கத்தவர்களுக்குப் பிதாவாக இருப்பது திரித்துவத்துக்கு மட்டுமே நித்தியத்துக்கும் உரிதானது. இது தனித்துவமானதும், திரித்துவத்துக்குள் மட்டுமே உள்ள விஷேச உறவாகும். இதில் கர்த்தரின் குமாரனைத் தவிர வேறு எவரும் அந்த உறவைக் கொண்டிருக்க முடியாது. ஆவியானவருக்கும் அது உரித்தானதல்ல. தேவதூதர்களும், மனிதர்களும் கூட குமாரனுக்கு மட்டுமே உரிய இந்த விஷேச உறவை அநுபவிக்க முடியாது.

திரித்துவத்தை ஏற்றுக்கொள்ள மறுத்து எனக்கு கடிதம் எழுதிய ஒருவர் இயேசுவே பிதா என்றும், அவரே குமாரனும், ஆவியும் என்று எழுதி பிதாவினதும், ஆவியினதும் அங்கத்துவத்தை நிராகரித்திருந்தார். அது முழுத்தவறு. திரித்துவ அங்கத்தவர்களுக்கிடையில் வெவ்வேறான தனித்துவமான உறவு முறை இருக்கின்றது. குமாரனும், பிதாவும் ஒன்றாக இருந்தாலும், பிதா, குமாரன் என்ற உறவு திரித்துவத்தில் நித்தியத்துக்கும் இருக்கிறது. அத்தோடு சிலர் கர்த்தர் பிதாவாக இருந்து தம்முடைய பிள்ளைகளை சுவீகரித்துக்கொள்ளுவதால், விசுவாசிகள் அந்தப் புதிய குடும்ப உறவின்படி திரித்துவத்தில் காணப்படுகின்ற தெய்வீக உறவில் பங்கேற்பதாக சொல்லுகிறார்கள். இது முழுத்தவறு. பிதா தன்னுடைய ஒரே குமாரனுக்கு பிதாவாக இருப்பதுபோல் வேறு எவருக்கும் பிதாவாக இருப்பதில்லை. குமாரன் பிதாவுக்கு மட்டுமே குமாரனாக இருக்கிறார். நமக்கும் கர்த்தருக்கும் இடையில் இருக்கும் உறவுக்கும் பிதாவுக்கும், குமாரனுக்கும் இடையில் காணப்படும் உறவுக்கும் வேறுபாடு இருக்கிறது. திரித்துவத்துக்கு வெளியில் இந்த உறவில் வேறு எவரும் பங்கேற்க முடியாது.

அதேவேளை, கர்த்தர் பொதுவானவிதத்தில் சகல மனிதர்களுக்கும் பிதாவாக இருக்கிறார். சிருஷ்டிகர் என்ற முறையிலும், தான் படைத்த அனைத்தையும் தன்னுடைய நன்மைக்காகப் பரமரித்து வருகிறவர் என்ற முறை

*யிலும் அவர் மனிதர்களுக்கு பிதாவாக இருக்கிறார் எனலாம். இதை அப்போஸ்தலர் 17:25-29; எபிரேயர் 12:9; யாக்கோபு 1:18 போன்ற வசனங்கள் சுட்டிக்காட்டுகின்றன. இருந்தபோதும் கர்த்தர் தன்னால் தெரிந்து கொள்ளப்பட்ட மக்களோடு மட்டுமே தகப்பனாக விஷேடமான உறவை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார். திரித்துவத்தில் கர்த்தர் பிதாவாக இருப்பதும், கிறிஸ்து குமாரனாக இருப்பதுமான விஷேட உறவு கர்த்தருடைய மக்களின் மீட்போடு தொடர்புடையது. கர்த்தர் தம்முடைய மக்களுக்குப் பிதாவாக இருக்கும் விஷேட உறவை, அவரை அறியாத மக்கள் ஒருபோதும் அனுபவிக்க முடியாது. கர்த்தருடைய மக்கள் அநுபவிக்கும் இந்த விஷேட உறவை பவுல் ரோமர் 8:15 பின்வருமாறு விளக்குகிறார்: "திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவீகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள்." கிறிஸ்து தன்னுடைய சீடர்களுக்கு ஜெபம் செய்வது பற்றிப் போதித்து எப்படி ஜெபம் செய்வது என்று விளக்கியபோது "பரலோகத்திலிருக்கும் எங்கள் பிதாவே" என்றழைத்து ஜெபம் செய்யும்படிப் போதித்தார். இந்தவிதமாக கர்த்தரைப் பிதாவாக அழைத்து ஜெபம் பண்ணும் விஷேட ஆசீர்வாதம் கர்த்தருடைய மக்களுக்கு மட்டுமே உண்டு. இந்த உறவை சகல மக்களுக்கும் உரிய உறவாக மாற்றப்பார்ப்பது கிறிஸ்துவினுடைய மீட்புப்பணியை மாசுபடுத்தி சுவிசேஷத்தையே குழப்புவதில் போய்முடியும். அதுமட்டுமல்லாமல் கர்த்தரை அறியாத மக்கள் மகவேட்பின் ஆசீர்வாதங்களில் தங்களுக்கும் பங்குண்டு என்று எண்ணிவிடக்கூடிய ஆபத்தும் உண்டு. மகவேட்பின் மூலம் கர்த்தரைப் பிதாவாகக் கொண்டிருக்கும் ஆசிர்வாதம் கிறிஸ்துவை விசுவாக்கின்ற மக்கள் மட்டுமே அநுபவிக்க முடியும். வேறு எவருக்கும் அதில் எந்தப் பங்குமில்லை. "நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்; உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை." என்று யோவான் தெளிவாக கர்த்தருக்கும் நமக்கும் உள்ள உறவை விளக்கியிருக்கிறார்.*

*திரித்துவ தேவனின் முதல் அங்கத்தவரான பிதாவை மகவேட்பாகிய இரட்சிப்பின் படிமுறை ஒழுங்கின் கிருபையின் மூலம் தங்களுடைய பிதாவாக உறவுகொண்டு வாழும் உரிமை விசுவாசிகளுக்கு மட்டுமே உண்டு என்று பார்த்தோம். இதை வலியுறுத்தும்விதமாக வேதம் கர்த்தரைப் "பிதா"வாக எந்த சந்தர்ப்பத்தில் விளக்குகிறது என்பதை ஆராய்வது இந்தப் போதனைக்கு வலிமையூட்டும்.*

*(1) "பிதா" என்ற பதம் திரித்துவத்தின் முதல் அங்கத்தவருக்கு மட்டுமே உரித்தானது. திரித்துவ அங்கத்தவர்களுக்கு மத்தியில் இருக்கும் உறவில் முதல் அங்கத்தவர் மட்டுமே பிதாவாக இருக்கிறார். அத்தோடு இரண்டாம் அங்கத்தவர் மட்டுமே குமாரனாகவும், மூன்றாம் அங்கத்தவர் பரிசுத்த ஆவியாகவும் இருக்கிறார்கள். இயேசு கிறிஸ்து "பிதா" என்று அழைத்த போது திரித்துவத்தின் முதலாவது அங்கத்தவரை மட்டுமே அவ்வாறு அழைத்தார். அவர் மட்டுமே குமாரனுக்கு பிதாவாக இருந்தார்.*

*(2) இயேசு பலதடவைகள் தான் இன்னும் பிதாவிடம் போக வேண்டிய நேரம் வரவில்லை என்று சொல்லியிருக்கிறார் (யோவான் 20:17). இதன் மூலம் அவர் தன்னுடைய பிதாவாகிய திரித்துவத்தின் முதலாம் அங்கத்த வரையே குறிப்பிட்டார். அதேவேளை, யாரை இயேசு “பிதா” என்று அழைத்தாரோ அவரே தன்னுடைய சீடர்களுக்கும் பிதா என்றும் சொல்லி யிருக்கிறார். தனக்கு பிதாவுடன் இருந்த தனித்துவமான உறவை அவர் எப்போதும் வலியுறுத்திய அதேவேளை தன் பிதா சீடர்களுக்கும் தகப்ப னாக இருக்கிறார் என்பதையும் அவர் குறிப்பிடாமலில்லை. பிதாவுக்கும் குமாரனுக்கு இருக்கும் விஷேடமான உறவை வேறு எவரும் அநுபவிக்க முடியாது. அதேவேளை, பிதா மகவேட்பின் மூலம் இன்னொருவிதத்தில் சீடர்களுக்கும் பிதாவாக இருக்கிறார்.*

*(3) புதிய ஏற்பாட்டில் இயேசு திரித்துவத்தின் முதல் அங்கத்தவரைத் தன்னு டைய பிதா என்றும், சீடர்களைப் பார்த்து உங்களுடைய பிதாவிடம் ஜெபியுங்கள் என்று சொன்னபோது தன்னுடைய பிதாவையே குறிப்பிட் டிருப்பதையும் பார்க்கிறோம். அத்தோடு பவுலும் ஏனைய புதிய ஏற்பாட்டு ஆசிரியர்களும் “பிதாவாகிய கர்த்தர்” என்று பல இடங்களில் குறிப்பிட் டிருக்கிறார்கள் (கலா. 1:1; எபேசி. 6:23; பிலி. 2:11). இந்தப் பதத்தின் மூலம் அவர்கள் திரித்துவத்தின் முதலாம் அங்கத்தவரையே ஒருமையில் குறிப்பிட் டிருக்கிறார்கள். இந்தப் பதம் வேறு எவரையும் குறித்துப் பயன்படுத்தப் படவில்லை. அத்தோடு, “நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய கர்த்தர்” என்றும் அவரைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள் (ரோமர் 15:6; 2 கொரி. 1:3; 11:33). இவற்றின் மூலம் வேதத்தில் “பிதாவாகிய கர்த்தர்” என்ற பதமும், நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய கர்த்தர்” என்ற பதமும் ஒருவரையே குறிப்பிடுவதோடு அப்பதங்கள் இயேசு கிறிஸ்துவைக் குறிப்பிடும் பதங்களல்ல என்றும் அவருடைய பிதாவையே குறிப்பவை என்பதையும் மனதில் கொள்ள வேண்டும்.*

*இதுவரை நாம் பார்த்தவற்றின் மூலம் மகவேட்பின் மூலம் நமக்குத் தகப்பனாக இருக்கிறவர் “பரலோகத்தின் இருக்கும் நமது பிதா” வாகிய திரித்துவத்தின் முதலாம் அங்கத்தவர் என்பதை நாம் உணர்வது அவசியம். இப்பதங்கள் குமாரனையோ, பரிசுத்த ஆவியையோ குறிக்காமல் பிதாவை மட்டுமே குறிக்கின்றன. மகவேட்பின் மூலம் நாம் பிதாவுக்கு பிள்ளைகளாக தத்தெடுக்கப்பட்டிருக்கிறோம். அந்த உறவு கிறிஸ்துவின் மேல் நாம் வைத்த விசுவாசத்தின் மூலம் நமக்குக் கிடைத்திருக்கிறது. கிறிஸ்துவின் மரணபலி அந்த உறவை மீட்பின் மூலம் நமக்குப் பெற்றுத் தந்திருக்கிறது. அதேவேளை குமாரனுக்கும் பிதாவுக்கும் இடையில் நித்தியத்தில் இருந்து இருக்கும் தகப்பன், மகன் உறவை நாம் பிதாவோடு கொண்டிருக்கும் உறவோடு தொடர்புபடுத்தக்கூடாது. அதுவும் மகவேட்பும் ஒன்றல்ல. இயேசு சீடர் களுக்கு ஜெபிக்கும்படி சொன்னபோது “எங்களுடைய பிதாவே” என்று ஜெபியுங்கள் என்று அவர்களுடைய தகப்பனை (பிதாவை) நோக்கி ஜெபிக்கும்படிச் சொன்னார். அதேவேளை அந்த ஜெபத்தை அவர் செய்ய வில்லை. நமது பிதாவை நோக்கி ஜெபியுங்கள் என்று அவர் சொல்லாமல்*

*உங்கள பிதாவை நோக்கி ஜெபியுங்கள் என்றார். இதிலிருந்து அவருக்கு தனிப்பட்ட விதமாக பிதாவோடு நித்தியத்தில் இருந்து இருக்கும் உறவுக்கும் நமக்கு பிதாவோடு மகவேட்பு மூலம் இருக்கும் உறவுக்கும் இருக்கும் வேறுபாட்டை விளங்கிக் கொள்ள வேண்டும்.*

*மகவேட்பின் மூலம் விசுவாசிகள் அடையும் விஷேட பலன்கள் யாவை?*

*(1) சுவீகாரப் புத்திரர்களாக விசுவாசிகள் திரித்துவத்தின் முதலாம் அங்கத்தவரை பிதா என்று அழைக்க முடிகின்றது. அவருடைய பிள்ளை கள் என்ற பெயரை அவர்கள் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவரை விசுவாசிக்காதவர்களுக்கு அந்த உரிமை இல்லை.*

*(2) விசுவாசிகள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். மகவேட்பின் ஆவி அவர்களுக்கு முத்திரையாகக் கிடைத்திருக்கிறது. பரிசுத்த ஆவியின் மூலம் அவர்கள் முத்திரை குத்தப்பட்டிருக்கிறார்கள்.*

*(3) பிதாவின் கவனிப்பும், சிட்சையும் அவர்களுக்கு ஆவிக்குரிய ஆசீர்வாத மாக கிடைத்திருக்கிறது. இது கர்த்தரை அறியாதவர்களுக்கு கிடையாது.*

*(4) பிதாவின் சுவீகாரப் புத்திரர்களாக அவர்களுக்கு பிதாவின் சகல விதமான ஆவிக்குரிய சுதந்திரங்களும், ஆசீர்வாதங்களும், வசதிகளும் கிடைத்திருக்கின்றன.*

*(5) கர்த்தரின் சகல வாக்குறுதிகளுக்கும் உரித்தானவர்களாக இருக்கிறார்கள்.*

*(6) மகிமையில் கிறிஸ்துவோடு சகல சுதந்திரங்களையும் அநுபவிக்கும்படி வைக்கப்பட்டிருக்கிறார்கள்.*

*பின்வரும் வசனங்களை வாசித்துப் பாருங்கள்: 1 யோவான் 3:1; எபேசியர் 1:5; கலாத்தியர் 4:4-5; யோவான் 1:12; 2 கொரிந்தியர் 6:8; வெளிப்படுத்தல் 3:12; கலாத்தியர் 4:6; சங்கீதம் 103:13; நீதிமொழிகள் 14:26; மத்தேயு 6:32; எபிரேயர் 6:12; ரோமர் 8:17.*

*மகவேட்பு பற்றி போதகர் அலபர்ட் என். மார்டின் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: "நீதிமானாக்குதலின் மூலம் கர்த்தர் விசுவாசிகளை நீதிமான்கள் என்று மட்டும் தம்முடைய நியாயஸ்தலத்தில் அறிவிக்காது, அவர்கள் விசுவாசத்தின் மூலம் கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டிருக் கிறார்கள் என்றும், கிறிஸ்துவின் பூரணமான மீட்புப் பலி மூலம் பெறப் பட்ட நீதியினினால் அவர்களுடைய பாவங்களுக்குரிய விலை முழுமை யாகக் கொடுக்கப்பட்டுவிட்டதாகவும் அறிவிக்கிறார். அவ்வாறு கிறிஸ்து வின் மீட்புப் பணியின் மூலம் விசுவாசிகளுக்கு கர்த்தர் இதைச் செய்த போது அவர்களுக்கு தன்னுடைய நியாயஸ்தலத்தில் ஒரு புதிய ஸ்தான த்தை அளிப்பது மட்டுமல்லாமல், பரலோக வாசஸ்தலத்திலும் ஒரு ஸ்தான த்தை அளிக்கிறார். அப்போது நியாயாதிபதியாகிய கர்த்தர் பிதாவின் ஸ்தானத்தில் இருந்து விசுவாசிகளைப் பார்த்துப் பின்வருமாறு சொல்லு கிறார்: "வாருங்கள், நீங்கள் இப்போது என்னுடைய குமாரர்களாகவும், குமாரத்திகளாகவும் இருக்கிறீர்கள்." இதுவே மகவேட்பு.*

# மறவன் நொக்ஸ்

இரத்த வெறிபிடித்த
பெண்ணரசி மேரிக்கு
அஞ்சாமல் நெஞ்சுயர்த்தி
சத்தியத்தை சத்தியமாய்
முன்னின்று பிரசங்கித்து
“மனந்திரும்பு இப்போதே
மறுபடியும் வராது
இன்னோர் வேளை”
என்று அதிரடியாய்
எக்காளமிட்டார் நொக்ஸ்
ஸ்கொட்லாந்து நாட்டில்
சீர்திருத்தம் உதித்தவேளை

“பிடித்தால் விடுவேனா
உன்னை உயிரோடு”
என்ற வெறியோடு
ஏதேதோ செய்தாள்
இதயம் கல்லாக
இரகசியமாய் மேரி
தேசத்து இராணியின்
கோபத்தை உணர்ந்தும்
பிடிபட்டால் உடன்போகும்
உயிர் என்பதறிந்தும்
நிறுத்தாமல் உழைத்தார்
நொக்ஸ் தன் தேசத்தில்

அனுதினமும் தேசத்து
மக்களை சந்தித்து
சீர்திருத்த வழிகாட்டி
சிந்திப்பீர், செயல்படுவீர்
செருக்குள்ள போப்புக்கு
படிப்பிப்பீர் நற்பாடமென
சிங்கம்போல் சீறி
கத்தோலிக்க அராஜகத்தை
அடியோடு சாய்க்க
அரும்பாடு பட்டார்
ஸ்கொட்லாந்து ஈன்றெடுத்த
அருந்தவப்புதல்வன் நொக்ஸ்

கத்தோலிக்கப் பிடியிலிருந்து
திருச்சபையைக்காத்து
அருளுரை, ஆராதனை
அனைத்தும் வேதத்தின்படி
சத்தியமாய் நடக்க
உத்தமமாய் போராடி
உயிரிழக்கும் வேளையிலும்
மனிதனுக்கு அஞ்சாதவன்
மண்ணில் இங்கு மாண்டானென
மறவன் நொக்ஸ்
எழுதச் சொன்னான் தன்
கல்லறையின் தலைமாட்டில்

– சுபி

# எண்ணங்கள்!

பத்திரிகை எனக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. வேதத்தை மேலும் ஆராய்ந்து தேவனைப் பற்றிய சத்தியங்களை அறிந்துகொள்ள உதவுகிறது. 2006 முதல் பத்திரிகையை வாசிக்க ஆரம்பித்திருக்கிறேன். முன்னைய இதழ்கள் கிடைக்குமானால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். குறிப்பாக நீதிமானாக்குதல் பற்றி இதற்கு முன் வந்துள்ள இரண்டு ஆக்கங்களைத் தயவு செய்து அனுப்பி வையுங்கள். - ***டேனியல் ராஜ், தமிழ்நாடு***

ஐயா, கடந்த 2005-2006 திருமறைத்தீப இதழ்களைப் பெற்று தேவனுடைய வெளிச்சத்தை நானும் மற்றவர்களும் அடைந்து விழிப்புணர்வு பெற்றிருக்கிறோம். இந்த ஊழியம் தொடர்ந்து வளர நான் ஜெபித்து வருகிறேன். ஏனென்றால், இந்த நாட்களில் கிறிஸ்தவத்தை வியாபாரமாகவும், அரசியலாகவும் செய்துகொண்டிருக்கிற கள்ளப்போதகர்களினதும், கள்ளத்தீர்க்கதரிசிகளினதும் வஞ்சகத்தில் சிக்கித் தவித்துக்கொண்டிருக்கும் எங்களைப் போன்ற இந்து மார்க்கத்தில் இருந்து விலகி வந்தவர்களுக்கு திருமறைத் தீபம் கடைசிக் கால எக்காளத் தொனி போல் ஒலித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி வழிநடத்துவதை உணர்கிறேன்.

ஏப்பிரல்-ஜூன் 2006 இதழில் "போதக ஊழியம் தங்க முட்டையிடும் வாத்தா?" என்று கேட்டு விளக்கியிருந்தீர்கள். இப்போதெல்லாம் போதகர்கள் வைரம், மாணிக்கம், முத்து என்றுதான் அழைந்து கொண்டிருக்கிறார்கள். தமிழகத்தில் அனுதினமும் ஊழிய ஏமாற்றுப் பேர்வழிகளின் பட்டியல் பத்திரிகையில் வந்துகொண்டிருக்கிறது. எங்களைப் போன்றவர்களுக்கு நமது தேவன் திருமறைத்தீபம் இதழ் வழியாக விழிப்புணர்வைத் தந்திருக்கிறார். தேவனுக்கே சகல மகிமையையும் செலுத்துகிறேன். பத்திரிகையை உண்மையாக வாஞ்சிக்கும் நண்பர்களுக்கு கொடுத்து அவர்களும் விழிப்புணர்வடைய வேண்டியதை செய்துவருகிறேன். நீதிமானாக்குதல் பற்றி இதற்கு முன் வந்துள்ள இரண்டு ஆக்கங்களையும் தயவு செய்து அனுப்பி உதவுங்கள். - ***எம். கே. யோவான் காளியப்பன், தமிழ்நாடு***

மதிப்புக்குரிய ஆசிரியர் அறிவது, அதிகமான ஆவிக்குரிய உணவை திருமறைத்தீபத்தின் மூலம் அனுப்பிவைக்க உங்களைத் தூர தேசத்தி லிருந்து ஆண்டவர் பயன்படுத்தி வருவதற்காக அவருக்கு நன்றி செலுத்துகிறேன். அடுத்த இதழ் எப்படி வரப்போகிறது என்ற எதிர் பார்ப்பை ஒவ்வொரு இதழும் உருவாக்குகின்றன. திருச்சபை சீர்திருத்தம் புத்தகத்தை அனுப்பி வைத்ததற்காக நன்றி. அதன் மூலம் அநேக கோட்பாடுகளைக் கற்றுக் கொள்ள முடிந்தது. அதேபோல் "ஆதிசபையின் அற்புத வரங்கள்" நூலின் மூலமும் அதிக பலன் அடைந்தேன். ஆங்கில அறிவு அதிகமில்லாத என்போன்றோருக்கு தாய்மொழியில் கிடைக்கப்பெரும் படைப்புகள் பெரும் பயன்தரும் என்பதில் சந்தேக மில்லை. தொடரட்டும் உங்கள் பணி. உங்களுக்காக ஜெபித்து வருகிறேன். - ***போஸ் பொன்ராஜ், தமிழ்நாடு***

நண்பரிடம் இருந்து திருமறைத்தீபத்தையும் நீங்கள் அனுப்பித்தந்த நூலையும் பெற்று வாசித்தேன். வாசித்து அதிக மகிழ்ச்சி அடைந்தேன். ஆவிக்குரிய விஷயங்களில் மேலும் ஞானம் பெற ஆவலாயிருக்கிறேன். எனக்கும் இதழையும், நூல்களையும் தயவு செய்து அனுப்பி வையுங்கள். - ***நெடுஞ்செழியன், தமிழ்நாடு***

# நமது வெளியீடுகள்




சீர்திருத்த விசுவாசம்



விசுவாச அறிக்கை



ஆதிசபையின் அற்புத வரங்கள்



வில்லியம் கேரி



சார்ள்ஸ் ஹெடன் ஸ்பர்ஜன்



பத்துக் கட்டளைகள்



கிறிஸ்தவன் யார்?



சிறுவர்களுக்கான வேத உபதேசம்



ஏன் பிரசங்கம்!

**கிடைக்குமிடம்:**

**இவாஞ்ஜெலிக்கள் பாப்திஸ்து சபை**
57 / 2, டி. பி. கே மெயின் ரோடு, பைகாரா, மதுரை 625004
தொலைபேசி எண்: 0452 - 6505810

**கிருபை இலக்கிய சேவை**
19 இராஜசிங்க வீதி, கொழும்பு 6, ஸ்ரீ லங்கா

மலர் 13 ஜனவரி - மார்ச் 2007 இதழ் 1

1. ஜோண் ஓவன்: கிறிஸ்துவின் மரணத்தில் மரணத்தின் மரணம் - அறிமுகம்

2. கிறிஸ்துவின் மரணத்தில் மரணத்தின் மரணம் - ஜெரமி வோக்கர்

3. ரிக் வொரனின் நூல்கள்

4. தணிந்துபோகும் அன்பு - ஒக்டேவியஸ் வின்ஸ்லோ

5. ஆத்மீகப் பின்வாங்குதல் - வில்லியம் பிளமர்

6. சீர்திருத்த கிறிஸ்தவம் - தேவை இன்று தமிழினத்தில்

7. மகவேட்பு - (இரட்சிப்பின் படிமுறை ஒழுங்கு)

8. மறவன் நொக்ஸ் - கவிதை

9. எண்ணங்கள்!

Terau Print